விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Sri Lanka


# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுகளில் உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 மாசி 06 ஞாயிற்றுக்கிழமை (18.02.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 061

## சமஷ்டி முறையில் ஆட்சி அமைக்கப்பட்டால்
# இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கிடைக்கும்
## வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு



**(யாழ்ப்பாணம்) சமஷ்டி முறையில் ஆட்சி அமைக்கப்பட்டால்தான் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வினை எட்டமுடியும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். மேலும் தற்போதைய கூட்டு அரசு இன்னும் இரண்டு ஆண்டுகள் நீடிக்கும் என நம்பிக்கை வெளியிட்ட வடக்கு முதல்வர், இணைந்த அரசு பிரிவதற்கு சர்வதேச நாடுகள் இடமளிக்காது எனவும் குறிப்பிட்டார்.**

யாழில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட முதலமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் தெற்கில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள் குறித்து கேட்ட 15

## 50 முன்னாள் போராளிகள் இராணுவத்தில் இணைப்பு

(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் 50 பேரை இராணுவத்தில் இணைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. புனர்வாழ்வளிப்பு ஆணையாளரின் பணிப்புரைக்கமைய. யாழ்.பாது 15

## ஜனாதிபதி – சம்பந்தன் திடீர் என சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. குறித்த சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றதாக எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் 15

## காங்கேசன்துறை பகுதியில் இரு எண்ணெய்க் களஞ்சியம்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் நிலவிவரும் எரிபொருள் விற்பனைக் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் பாரிய இரண்டு எண்ணெய்க் கிடங்குகள் அமைக்கப்படவுள்ளதுடன். பத்து ஏக்கரில் காங்கே 15

## நாமலுடன் பேசிப் பார்க்கலாம் வடக்கு முதல்வர் கருத்து

(யாழ்ப்பாணம்)

தனது மகனைக் கொண்டு மகிந்த ராஜபக்ஷ முன்வைத்துள்ள கருத்திற்கு இனரீதியான விரிசல் ஏற்படக்கூடாது என்ற எண்ணமே காரணம் என தான் நம்புவதாக வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுடன் இணைந்து செயற்பட விரும்பு 15

## எழுதுமட்டுவாளில் எரிந்த நிலையில் ஆணின் சடலம் மீட்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி - எழுதுமட்டுவாள் பகுதியில் எரிந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் மீசாலைப் பகுதியைச் சேர்ந்த செல்வரத்தினம் சுரேஸ்குமார் 15

## நல்லூர், கரவெட்டி சபையில் கூட்டமைப்பே ஆட்சி செய்யும்
### நம்பிக்கை வெளியிட்டார் – மாவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை. நல்லூர் பிரதேச சபை. கரவெட்டிப் பிரதேச சபை ஆகியவற்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே ஆட்சி அமைக்கும்.

இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை. நல்லூர் பிரதேச சபை, கரவெட்டிப் பிரதேச சபையில் ஆட்சி 15

## யாழில் அண்மையில் இடம்பெற்ற கொள்ளை, வழிப்பறிகளுடன் தொடர்புடைய மூவர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மைக்காலங்களில் இடம்பெற்ற பல்வேறு கொள்ளை மற்றும் வழிப்பறிகளுடன் தொடர்புடைய மூவர் கோப்பாய் 16

## ஜனவரி மாதம் 7ஆயிரத்து 95 பேர் டெங்கால் பாதிப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தில் ஜனவரி மாதத்துக்குள் மாத்திரம் டெங்கு நோயாளராக 7 ஆயிரத்து 95 பேர் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவு ஒன்று இதனை 15

## ஐ.நா மனித உரிமைகள் பேரவை தொடங்கவுள்ள நிலையில்
# மகிந்தவை போர்க்குற்றச்சாட்டுக்களிலிருந்து சுமந்திரன் காப்பாற்ற முயற்சி செய்கிறார்
### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றச்சாட்டு




(யாழ்ப்பாணம்)

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் அமர்வு தொடங்கவுள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் இலங்கை அரசாங்கத்தைப் பாதுகாக்கின்ற செயற்பாட்டிலேயே ஈடுபட்டுவருவதாக குற்றஞ்சாட்டியிருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம் 15

## ஐ.நா மனித உரிமை பேரவையில் இலங்கை விளக்கம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை விளக்கம் அளிக்க உள்ளது. அடுத்த மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் நடைபெறவுள்ள அமர்வுகளில் இந்த விளக்கம் அளிக்கப்படவுள்ளது. 15

## நல்லாட்சி அரசாங்கத்தின் புதிய அமைச்சரவை தயார்?
### பிரதமராகிறார் கரு ஜயசூரிய

(கொழும்பு)

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் பதற்றத்தை தணிக்கும் வகையில் அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய புதிய அமைச்சரவை உருவாக்குவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து செய்தி வெளியாகியுள்ளது.

இது தொடர்பான உத்தியோகபூர்வ செய்திகள் ஒரு சில 15

## 48 மணி நேரத்தில் தீர்வு கிடைக்கும்!
### சு.க. உறுப்பினர்

(கொழும்பு)

எதிர்வரும் 48 மணிநேரத்தில் அரசாங்கத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமைக்கு தீர்வு கிடைக்கும் என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி எதிர்பார்ப்பதாக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். 15

## மகிந்தவுக்கு கிடைத்த வெற்றி நல்லாட்சி அரசுக்கான எச்சரிக்கை
### பெற்றோலிய அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க யாழில் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

மகிந்தவுக்கு கிடைத்த வாக்குகள் எமக்கு கிடைத்த வெறும் எச்சரிக்கையே. ஆனால் அரசாங்கம் மக்களின் குறைபாடுகளை எதிர்காலத்தில் நிறைவேற்ற வேண்டும் என பெற்றோலிய வளங் 15

# வேலையற்ற பட்டதாரிகளின் கலந்துரையாடல் நாளை

(யாழ்ப்பாணம்)

வேலையற்ற பட்டதாரிகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனங்களை பெற்றுக் கொள்ளுதல் தொடர்பான கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக நடைபெறவுள்ளது.

இந்த கலந்துரையாடல் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சினால் வழங்கப்படுவதாக குறிப்பிடப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்ட பயிற்சி அடிப்படையிலான அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனங்களை விரைவில் பெறுதல் பற்றி நடைபெறவுள்ளதால் வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளையும் வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் 2017 இல் வெளியேறிய புதிய வேலையற்ற பட்டதாரிகளுக்கான பதிவுகளும் நடைபெறும்.

இக் கலந்துரையாடலில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கமைவாக ஜனாதிபதி மற்றும் பிரதமரை சந்திப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என வட மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகம் அறிவித்துள்ளனர். (ம)

# பூனத்தொடுவாயில் உயிரிழந்த பொதுமக்களின் நினைவு தினம் இன்று

(பொற்பதி)

கடந்த 1992.02.18 அன்று வடமராட்சி கிழக்கு பூனத்தொடுவாய் கடற்பகுதியில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தொழிலாளர்களை வஞ்சகத்தனமான முறையில் இலங்கைக் கடற்படையினர் படுகொலை செய்ததின் 26ஆவது ஆண்டு நினைவுநாள் கொண்டாடப்படவுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவது, 1992.02.18 அன்று அதிகாலைப் பொழுது பூனத்தொடுவாய் கடற்பரப்புக்குள் நுழைந்த இலங்கைக் கடற்படைக்கு சொந்தமான டோறாப் பீரங்கிப்படகு தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தொழிலாளர்களை இலக்கு வைத்து தாக்குதல் தொடுத்தது. இத்தாக்குதலில் ஒன்றுமே அறியாத அப்பாவிப் பொது மக்கள் பத்துப்பேர் கடலிலேயே பலியானார்கள்.

அன்றையதினம் இச்சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. இப்படுகொலையின் 26ஆம் ஆண்டு நினைவுநாள் இன்று 18.02.2018 நினைவுகூறப்படவுள்ளது. கட்டைக் காடு கப்பலேந்தி மாதா ஆலயத்தில் காலை அவர்கள் நினைவாக இரங்கல் திருப்பலி இடம்பெறவுள்ளது. தொடர்ந்து மாலை கட்டைக்காடு சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகத்தினர் இவர்கள் நினைவாக உதைபந்தாட்ட போட்டியொன்றை நடத்தவுள்ளனர். (ம-64)

# தேர்தல் முடிவுகளை மாற்றியமைக்க முயற்சிக்கவில்லை-மகிந்த தேசப்பிரிய

(கொழும்பு)

தேர்தல் முடிவுகளை மாற்றியமைப்பதற்கு முயற்சிக்கப்படவில்லை என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். தேர்தல் முடிவுகளை மாற்றுவதற்கோ அல்லது வேண்டுமென்றே முடிவுகளை காலம் தாழ்த்தி வெளியிடுவதற்கோ முயற்சிக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் இந்த விடயத்தை ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் காலம் தாழ்த்தப்பட்டமை குறித்து சமூக ஊடகங்களில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ம)


## மரண அறிவித்தல்

## கந்தையா துரைசிங்கம்

(ஓய்வுபெற்ற யாழ்.மாநகர சபை மின்சாரப் பகுதி உத்தியோகத்தர்)



அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட துரை என்று அன்பாக அழைக்கப்படும் கந்தையா துரைசிங்கம் 16.02.2018 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமு கந்தையா-அன்னப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம்-சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், நாகநந்தினி (நந்தா)யின் பாசமிகு தந்தையும், பிரபல கட்டடப்பொருள் வணிகர் ஸ்ரீகரனின் (டிப்பர் தயா) அன்பு மாமனாரும், அபிஷேக், அக்ஷா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் ஞானலட்சுமி, காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, இராசலிங்கம் மற்றும் யோகம்மா காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், குணரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் பரமேஸ்வரி, இராசமணி, காலஞ்சென்ற துரைராசா மற்றும் குமாரவேலு, காலஞ்சென்ற சரஸ்வதிப்பிள்ளை மற்றும் கணேசபிள்ளை, தியாகேஸ்வரி, சற்குணவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 18.02.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் இல.86 சுப்பிரமணியம் வீதி, அரியாலையில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

86, சுப்பிரமணியம் வீதி,
அரியாலை.

தகவல்:-
குடும்பத்தினர்

(2822)



## இரண்டாம் ஆண்டு நினைவு



அமரர்
ஜோசப் அன்ரன் ஜெயக்குமார்
(ஓய்வுநிலை கிராம சேவையாளர்-நாரந்தனை)

ஆண்டிரண்டு
ஆனபோதும்
ஆறவில்லை
நினைவுகள்...
அமைதி கொள்
சோதரனே
ஆண்டவனின் பாதமதில்.

பிறப்பு:-23.02.1967
இறப்பு:-18.02.2016

793, (425) நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

-குடும்பத்தினர்

(2832)



## நெஞ்சம் அகலா ஓராண்டு நினைவு

தோற்றம்
1996 - 12 - 19

மறைவு
2017 - 02 - 18



## திருமலைச்செல்வம் சஞ்ஜீவ்

கனக்கும் இதயங்களோடு...
உடலும் நீ உயிரும் நீ உறவும் நீ உணர்வும் நீ
வாழ்வும் நீ வளமும் நீ அறிவும் நீ அழகும் நீ
அன்பும் நீ அருளும் நீ புகைப்படக் கலையும் நீ
தென்பும் நீ திருவும் நீ திறனும் நீ தீரனும் நீ

பிறப்பும் நீ இறப்பும் நீ அருகும் நீ தொலைவும் நீ
அறமும் நீ மறமும் நீ இன்பமும் நீ துன்பமும் நீ
அல்லும் நீ பகலும் நீ கனவும் நீ நனவும் நீ
எல்லாம் நீ எங்கும் நீ முழுமை நீ வெறுமை நீ

அல்லற்பட்டு ஆற்றாது அழுகண்ணீர் என்றும்
எல்லையிலாது ஊற்றெனவே ஊறிடுதே
சில்லாண்டு எம்மோடு நீ வாழ்ந்த வாழ்வு
பல்லாண்டு போனாலும் போகாது மகனே!

குடும்பத்தினர்
(செல்லா டிஜிட்டல் வீடியோ) நவிண்டில்

(C-1544)



## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 21.01.2018 (ஞாயிற்றுக்கிழமை) அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர் சொக்கலிங்கம் துரைராஜா



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 18.02.2018 (ஞாயிற்றுக்கிழமை) காலை 8.00 மணியளவில் திருவடிநிலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் 20.02.2018 (செவ்வாய்க்கிழமை) முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பொன்னாலை தெற்கு,
சுழிபுரம்.

இங்ஙனம்:
குடும்பத்தினர்

(2829)

# பிரதமரை நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை!

## சட்ட நிபுணர்கள் உறுதிப்படுத்தல்

(கொழும்பு)

**19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின்படி பிரதமரைப் பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என்று ஜனநாயகத்துக்கான சட்டவாளர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவி நீக்கம் செய்வது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையை பெறவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நேற்று முன்தினம் கூட்டு எதிரணியினருக்கு உறுதியளித்திருந்தார்.

இது தொடர்பாக ஜனநாயகத்துக்கான சட்டவாளர்கள் அமைப்பின் சார்பில், சட்டவாளர்கள் லால் விஜேநாயக்க, கே.எஸ். இரத்னவேல், சுதத் நெத்சிங்க, பிரபோத ரத்நாயக்க, ஹரின் கோமிஸ் ஆகியோர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அதில் "19 ஆவது திருத்தத்துக்கு முன்னர், பிரதமரைப் பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருந்தது. ஆனால், 19 ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம், அந்த அதிகாரம் நீக்கப்பட்டுள்ளது.

எனவே நாடாளுமன்ற வழக்கத்தின்படி, நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதன் மூலமே, பிரதமரைப் பதவி நீக்கம் செய்ய முடியும். இதில் ஜனாதிபதி எந்தப் பங்கையும் வகிக்க முடியாது." என்று தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் மூத்த விரிவுரையாளரான கலாநிதி பிரதீப் மகாநாமஹேவவும், பிரதமரைப் பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரதமரை ஜனாதிபதி பதவி நீக்கம் செய்ய முடியுமா என்பது பற்றிய சட்ட விளக்கத்தைக் கோர, உச்ச நீதிமன்றத்தை நாடுவதற்கு சில சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இதுதொடர்பான நடவடிக்கை நாளை மேற்கொள்ளப்படவுள்ளது. (இ-10)

# அபிவிருத்தி திட்டங்களைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லுங்கள் - ஜனாதிபதி



(கொழும்பு)

நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் எவ்வித பின்னடைவும் ஏற்பட இடமளிக்காது, அமைச்சுக்கள் மற்றும் நிறுவன மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால, செயலாளர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்குமிடையிலான சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இச்சந்திப்பின் போதே ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை விடுத்தார்.

உள்ளூராட்சி தேர்தலின் பின்னர் சில அமைச்சுக்களின் நடவடிக்கைகள் உரிய முறையில் இடம்பெறவில்லை என கிடைத்துள்ள தகவல்கள் தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி நாட்டின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்த அரசாங்கத்தின் கொள்கை ஒரு போதும் மாறாது எனத் தெரிவித்தார்.

நேர்தல் ஒன்றைத் தொடர்ந்து அரசியல் ரீதியாக பல வேறு மாற்றங்கள் ஏற்படுவது சாதாரணமானதாகும் அந்த அரசியல் நிலைமைகளை கவனத்திற் கொள்ளாது மக்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அரச கொள்கைக்கேற்ப உரிய இலக்குகளை நோக்கி வெற்றிகரமாக முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு அமைச்சுக்களின் செயலாளர்களையே சாரும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றபோது நிறுவன ரீதியாக ஏற்படும் பிரச்சினைகளை தீர்க்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் இதுவரையில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றங்கள் குறித்து மீளாய்வு செய்து அந்நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுக்குமாறு ஆலோசனை வழங்கினார்.

மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டங்கள் மற்றும் பிரதேச அபிவிருத்தி குழுக் கூட்டங்களுக்கான நேரசூசி தற்போது வழங்கப்பட்டுள்ளதுடன் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு தெரியப்படுத்தி இம்மாதத்திற்குள் அக் கூட்டங்களை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு பணிப்புரை விடுத்தார்.

மேலும் அமைச்சு மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்து கண்டறிவதற்காக தான் அனைத்து அமைச்சுக்களுக்கும் விஜயம் செய்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

எதிர்கால வரட்சி நிலைமைக்கு முகம் கொடுத்து காலநிலை மாற்றங்களுடன் விவசாயத்துறை மற்றும் உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் மேற்கொள்ளப்படவேண்டிய மாற்றங்கள் குறித்து நாட்டின் பல்கலைக்கழகங்களில் உள்ள புவியியல் மற்றும் வானியல் துறை நிபுணர்களுடன் கலந்துரையாடி தேவையான சட்ட திட்டங்களை தயாரிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தேங்காய் விலை தொடர்பாக நிலவும் பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டதுடன் தென்னங்காணிகளை துண்டாடுதல் உள்ளிட்ட சட்ட திட்டங்களை மீறுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

தென்னை பயிர்ச் செய்கைக்காக பெருந்தோட்டக் கைத்தொழிற்றுறை அமைச்சின் கீழ் சிறியளவிலான விவசாயிகளுக்கு தேவையான வசதிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. மேலும் தென்னை பயிரிடப்படாத பிரதேசங்களில் தென்னைப் பயிர்ச் செய்கையை பிரபலப்படுத்துவதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (இ-10)

# புகையிரத விபத்தில் 57 பேர் உயிரிழப்பு!

(கொழும்பு)

இந்த வருடத்தில் 35 நாட்களில் இடம்பெற்ற புகையிரத விபத்துக்களில் 57 பேர் பலியானதாக தெரியவந்துள்ளது.

அவர்களில் அதிகமானவர்கள் மிதிபலகையில் பயணித்தவர்கள் மற்றும் புகையிரத கடவைகளில் வீதி மாறியவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் புகையிரத வீதிகளை பயன்படுத்தும் போது அவதானத்துடன் இருக்க வேண்டும் என புகையிரத பாதுகாப்பு முகாமையாளர் அநுர பிரேமரத்ன கோரியுள்ளார்.

இதேவேளை, கடந்த வருடத்தில் பயணச்சீட்டு இன்றி பேருந்தில் பயணித்த 1295 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, 40 இலட்சத்து 32 ஆயிரத்து 772 ரூபா ஈட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# லசந்த கொலை! சுயவிருப்பில் வாக்குமூலம் வழங்கத் தயார்

## பொலிஸ் உயர் அதிகாரி அறிவிப்பு

(கொழும்பு)

சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் லசந்த கொலை தொடர்பில் சுயவிருப்பின் அடிப்படையில் வாக்குமூலம் வழங்கத் தயார் என முன்னாள் உயர் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கல்கிஸை பிராந்தியத்திற்கு பொறுப்பாக செயற்பட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹேமந்த அதிகாரியே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

லசந்த கொலை தொடர்பிலான வழக்கு நேற்று முன்தினம் கல்கிஸை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்தக் கொலை தொடர்பில் விசாரணை நடத்திய ஹேமந்த அதிகாரி, விபரங்களை வெளியிட சுய விருப்பின் அடிப்படையில் ஆர்வம் காட்டுவதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, எதிர்வரும் 21ஆம் திகதி பிற்பகலில் குறித்த பொலிஸ் அதிகாரியை நீதிமன்றின் முன்னிலைப்படுத்துமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரசன்ன நாணயக்காரவின், உறவினர் ஒருவரே லசந்தவின் மரணம் தொடர்பான முதலாவது பிரேத பரிசோதனையை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுனில் குமார என்பவரே லசந்தவின் பிரேத பரிசோதனை செய்ததாகவும், துப்பாக்கிச் சூட்டினால் மரணம் ஏற்பட்டதாக தீர்மானித்து அறிக்கை வழங்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

# நாட்டை இந்த சூழ்நிலையில் பொறுப்பேற்க மாட்டோம்

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

இந்த நாட்டை சரி செய்யாமல் இடைநடுவில் நாட்டைப் பொறுப்பேற்பது உசிதமானதல்லவெனவும், இந்தக் கூட்டணி அரசாங்கம் எஞ்சியுள்ள காலத்தை எவ்வாறு கடத்தப் போகின்றது என்பதை நாம் அவதானமாக கண்காணிக்கவுள்ளோம் எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையில் ஆட்சியாளர்கள் செயற்படும் விதம் குறித்து, நாம் அவதானத்துடன் உள்ளோம். ஐக்கிய தேசியக் கட்சி இன்று துண்டு துண்டாக உடைய ஆரம்பித்துள்ளது.

இந்த நிலையில் அரசாங்கத்திலுள்ள பொறுப்புக்களை ஏற்க வருமாறு கூட்டு எதிர்க்கட்சியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, அழைப்பு விடுத்தனர். இருப்பினும், அவர்கள் இப்படியான நெருக்கடிமிக்க நிலையில் பொறுப்புக்களை ஏற்பதற்கு மறுப்புத் தெரிவித்ததாகவும் மகிந்த ராஜபக்ஷ சுட்டிக் காட்டியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் ஐக்கிய தேசியக் கட்சியின் உதவியுடன் அரசாங்கத்தை முன்னெடுக்க தீர்மானித்தால், கூட்டு எதிர்க் கட்சியின் எந்தவொரு ஆதரவும் அதற்குக் கிடைக்காது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். குருநாகலில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-10)

# ரணில் பதவி விலகாததால் நாடாளுமன்றில் நெருக்கடி!

## கெஹலிய எம்.பி.சுட்டிக்காட்டு



(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவியில் இருந்து விலகாததன் காரணமாக நாடாளுமன்றத்திற்குள் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

இந்த நெருக்கடியை முடிவுக்கு கொண்டு வரும் பொறுப்பு ஜனாதிபதிக்கும், அரசாங்கத்திற்கும் இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

தற்போது அமுலில் உள்ள 19ஆவது அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் செயற்பாடுகளை முன்னெடுத்தால், பிரதமர் பதவி இழப்பார் எனவும் அவர் தெரிவித்தார்.

48, 49 மற்றும் 29 (அ) பந்திகளுக்கு அமைய செயற்பட்டால், இரண்டு கட்சிகளும் இணைந்து ஏற்படுத்தியுள்ள அமைச்சரவையின் எண்ணிக்கை 30 இதில் இருந்து 15 ஆக குறையும்.

அப்போது இரண்டு கட்சிகளுக்கு இடையிலான உடன்படிக்கை இரத்தாகும் என்பதுடன், பிரதமருடன் அமைச்சரவையும் இரத்தாகி போகும் எனவும் கெஹலிய ரம்புக்வெல மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# இந்தியாவின் செல்லப்பிள்ளை கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு



இந்தியக் கிரிக்கெட் அணியின் செல்லப்பிள்ளை என வர்ணிக்கப் படும் சுரேஸ் ரெய்னா, சர்வதேச கிரிக்கட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறவுள்ளதாக அறிவித் துள்ளார்.

இதன்படி, எதிர்வரும் 2019ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற வுள்ள உலகக்கிண்ண தொடரு டன் அவர் விடைபெறவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

உடற்தகுதி மற்றும் அணியில் சோபிக்காததன் காரணமாக அணி யிலிருந்து ஓரங்கட்டப்பட்டுள்ள சுரேஸ் ரெய்னா, தற்போது இருபது - 20 போட்டிகளில் மட்டும் விளையாடி வருகிறார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடை பெறவுள்ள ஐ.பி.எல் தொடரில் அவர் சிறப்பாக பிரகாசித்தால், மீண்டும் அணிக்குள் உள்வாங் கப்படுவதற்கான வாய்ப்புகள் அதி கரிக்குமென எதிர்பார்க்கப்படு கின்றது.

# ஒற்றைக் கையால் அசத்தலாக பிடிஎடுப்பு நியூசிலாந்து மாணவருக்கு ரூ.24 இலட்சம் பரிசு



அவுஸ்திரேலியா அணிக்கெதி ரான இருபது-20 போட்டியின்போது நியூசிலாந்து வீரர் ரோஸ் டெய்லர் சிக்ஸருக்கு விளாசிய பந்தை ஒற்றைக் கையில் பிடித்த பல்கலைக்கழக மாண வருக்கு 50,000 நியூசிலாந்து டொலர் கள் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் இங்கிலாந்து அணிகள் மோதும் முத்தரப்பு இருபது-20 தொடர் நியூசிலாந்தில் நடந்து வருகிறது. இந்தத் தொடரின் முக்கியமான லீக் சுற்றுப்போட்டி ஆக்லாந்து மைதானத்தில் நடந் தது. இந்தப் போட்டியில் முதலில் துடுப்பாட்டம் செய்த நியூசிலாந்து அணி மார்டின் குப்திலின் சதத்தின் உதவியுடன் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 243 ஓட்டங்கள் குவித்தது.

குப்தில் 105 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். காலின் முன்ரோ 76 ஓட்டங்கள் எடுத்தார். இமாலய இலக்குடன் களமிறங்கிய அவுஸ்தி ரேலிய அணிக்குத் தொடக்க வீரர் கள் கைகொடுக்க 18.5 ஓவர்களி லேயே 5 விக்கெட்டுகளை மட்டும் இழந்து வெற்றி இலக்கை எட்டி யது.

அவுஸ்திரேலிய அணியில் அதிகபட்சமாக டி ஆர்கி ஷார்ட் 76 ஓட்டங்களும், டேவிட் வோர்னர் 59 ஓட்டங்களும் எடுத்தனர். இதன் மூலம் இருபது - 20 வரலாற்றில் அதிகபட்ச ஓட்டங்களை சேஸ் செய்த அணி என்ற சாதனையை அவுஸ் திரேலியா படைத்தது.

இந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் 20ஆவது ஓவரின் 4ஆவது பந்தை எதிர்கொண்ட நியூசிலாந்து வீரர் ரோஸ் டெய்லர், அதை சிக்ஸருக்கு விளாசினார். மைதானத்தின் எல்லைக்கோட் டிற்கு அருகில் நின்றிருந்த வீர ரைத் தாண்டிச் சென்ற அந்தப் பந்தை, ரசிகர்களுக்கான கேலரி யில் நின்றிருந்த மிட்செல் க்ரிம்ஸ் டோன் எனும் பல்கலைக்கழக மாணவர், ஒரு கையில் லாவக மாக பிடிஎடுத்தார், இதையடுத்து, க்ரிம்ஸ்டோனைச் சுற்றியிருந்த நண்பர்கள் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

போட்டியின் போது மைதானத் திலிருக்கும் ரசிகர்கள் சிக்ஸருக்கு விளாசப்படும் பந்தை பிடி எடுத்தால், அவர்களுக்கு 50,000 நியூசிலாந்து டொலர்கள் பரிசுத் தொகை (இந்திய மதிப்பில் சுமார் 24 இலட்ச ரூபாய்) வழங்கப்படும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, அசத்தலாகப் பிடி எடுத்த க்ரிம்ஸ்டோனுக்கு அந்தப் பரிசுத் தொகை வழங்கப்பட இருக்கிறது. பாகிஸ்தான் - நியூ சிலாந்து அணிகள் இடையில் துனேதின் மைதானத்தில் நடை பெற்ற 3ஆவது ஒருநாள் போட்டி யில் இதேபோல் பிடி எடுத்த ரசிகர் ஒருவருக்குப் பரிசுத் தொகை வழங்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக் கது.

# ஒரு நாள் போட்டியில் 5 விக்கெட் 16 வயதில் உலகசாதனை



சிம்பாவே அணியுடனான 4ஆவது ஒருநாள் போட்டியில் 10 விக்கெட் வித்தியாசத்தில் அபார மாக வென்ற ஆப்கானிஸ்தான் அணி 3:1 என்ற கணக்கில் முன் னிலை பெற்றதுடன் தொடரையும் கைப்பற்றி அசத்தியது.

ஷார்ஜாவில் நேற்று முன்தினம் நடந்த இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பாட்டம் செய்த சிம்பாவே அணி 38 ஓவரில் 134 ஓட்டங்களுக்குள் சுருண்டது. பிரெண்டன் டெய்லர் 30, எர்வின் ஆட்டமிழக்காமல் 54 ஓட்டங்களை எடுக்க, மற்ற வீரர் கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்தனர். ஆப்கானிஸ்தான் பந்துவீச்சில் முஜீபுர் ரகுமான் 10 ஓவரில் 50 ஓட்டங்களுக்கு 5 விக் கெட்டுக்களை வீழ்த்தினார்.

ஒருநாள் போட்டிகளில் மிக இளம் வயதில் (16 வயது, 325 நாள்) 5 விக்கெட் வீழ்த்திய வீரர் என்ற சாதனை அவருக்கு சொந்த மானது.

நபி, ரஷித் கான் தலா 2, அஷ்ரப் ஒரு விக்கெட் கைப்பற்றினர். அடுத்து களமிறங்கிய ஆப்கானிஸ் தான் 21.1 ஓவரிலேயே விக்கெட் இழப்பின்றி 135 ஓட்டங்கள் எடுத்து எளிதாக வென்றது.

முகமது ஷாஷத் 75 ஓட்டங்கள் (74 பந்து, 10 பவுண்டரி, 3 சிக்சர்), இசானுல்லா 51 ஓட்டங்களுடன் (53 பந்து, 6 பவுண்டரி, 2 சிக்சர்) ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆப்கானிஸ்தான் 3:1 என முன்னிலை வகிக்க, கடைசி ஒருநாள் போட்டி நாளை நடக்கிறது.

# இருபது - 20 மும்பை லீக் தொடர் தூதராக சச்சின் டெண்டுல்கர்

இந்திய கிரிக்கெட் வாரியத்தால் ஐ.பி.எல். இருபது-20 லீக் தொடர் நடத்தப்பட்டு வருகிறது. இதேபோல் பி.சி.சி.ஐ கீழ் உள்ள சில மாநில சங்கங்கள் சார்பில் இருபது-20 லீக் தொடரை நடத்துகிறது.

அந்த வகையில் மும்பை கிரிக் கெட் சங்கம் இருபது-20 மும்பை லீக் என்ற தொடரை நடத்த இருக் கிறது. இந்த தொடர் மார்ச் மாதம் நடக்க இருக்கிறது. இதை பிரபலப் படுத்தும் நோக்கத்தில் சச்சின் டெண்டுல்கர் தூதராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.



இந்த தொடரில் மும்பை வடக்கு, மும்பை வடமேற்கு, மும்பை வடகிழக்கு, மும்பை வடக்கு-சென் டிரல், மும்பை தெற்கு-சென்டிரல் மற்றும் மும்பை தெற்கு அணிகள் பங்கேற்கின்றன.

தமிழ்நாடு இருபது-20 லீக், தெலுங்கு இருபது-20லீக் மற்றும் ஆந்திரா பிரிமீயர் லீக் அந்தந்த மாநில சங்கங்களால் நடத்தப்பட்டு வருகிறது. இதில் மற்ற மாநில வீரர் கள் கலந்து கொள்ள முடியாது என் பது குறிப்பிடத்தக்கது.

# இன்று இருபது - 20 கிரிக்கெட் டி வில்லியர்ஸ் கலக்குவாரா?



இந்தியா - தென்னாபிரிக்கா இடையிலான 6 போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரை இந்தியா 5:1 என கைப்பற்றியது. இந்நிலையில் மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 கிரிக்கெட் தொடர் இன்று ஆரம்பமாகின்றது.

முதல் போட்டி ஜோகனஸ்பேர்க் கில் இன்று மாலை 6 மணிக்கு தொடங்குகிறது. ஒருநாள் தொட ரைப் போல் இருபது-20 கிரிக்கெட் தொடரிலும் இந்தியா ஆதிக்கம் செலுத்த விரும்புகிறது.

ஒருநாள் தொடரில் விளையா டிய ரகானே, கேதர் ஜாதவ், ஷ்ரே யாஸ் அய்யர் இருபது-20 தொட ருக்கான இந்திய அணியில் இடம் பெறவில்லை. அவர்களுக்குப் பதி லாக லோகேஷ் ராகுல், சுரேஷ் ரெய்னா, உனத் கட் ஆகியோர் அணியில் இடம்பிடித்துள்ளனர்.

தொடக்க வீரர்களாக தவான், ரோகித் சர்மா ஆகியோர் களம் இறங்குவார்கள். 3ஆவது வீரராக விராட் கோலி களம் இறங்குவார். டோனி விக்கெட்காப்பாளர், சகல துறைவீரராக ஹர்திக் பாண்டியா களம் இறங்குவார். பும்ரா, புவ னேஸ்வர் குமார், குல்தீப் யாதவ் மற்றும் சாஹல் ஆகிய பந்து வீச் சாளர்கள் இடம்பெற அதிக வாய்ப்பு உள்ளது.

இந்தியா நான்கு முதன்மை பந்து வீச்சாளர்கள் மற்றும் ஹர்திக் பாண்டியாவை முதன்மை பந்து வீச்சாளராக தேர்வு செய்தால் ரகானே மற்றும் ஷ்ரேயாஸ் அய்யர் இடத் தில் தினேஷ் கார்த்திக், மணீஷ் பாண்டே மற்றும் ரெய்னா ஆகி யோரில் இருவர் சேர்க்கப்படலாம்.

அதேவேளையில் கூடுதலாக ஒரு வேகப்பந்து வீச்சாளருடன் இந் தியா களம் இறங்க விரும்பினால், மேற்கண்ட மூன்று பேரில் ஒரு வர்தான் இடம்பெற முடியும். இத னால் அந்த இடத்திற்கு கடும் போட்டி நிலவுகிறது. ஒருநாள் போட்டியில் சிறப்பாக செயற்பட்ட நம்பிக்கையு டன் இந்தியா இருபது-20 தொடரை எதிர்கொள்ளும்.

அதேவேளையில் ஒருநாள் தொடரை மோசமான வகையில் இழந்த தென்னாபிரிக்கா இருபது-20 தொடர் மூலம் சரிக்கட்ட நினைக் கும், அந்த அணி டுமினி தலை மையில் களம் இறங்குகிறது.

தென்னாபிரிக்கா அணியில் டி வில்லியர்ஸ், டேவிட் மில்லர், ஹெய்ன்ரிச் கிளாசன், பெஹார்டி யன், கிறிஸ் மோரிஸ் போன்ற அதிரடி துடுப்பாட்டவீரர்கள் உள்ளனர். இதனால் தென்னாபிரிக்கா பதிலடி கொடுக்க வாய்ப்புள்ளது. துடுப் பாட்டத்தில் முன்னணி வீரர்கள் இருக்கும் அதேவேளையில் பிர பலமான பந்து வீச்சாளர்கள் இல்லை. இது தென்னாபிரிக்காவிற்கு சற்று பாதகமாக இருக்கும், எப்படி இருந் தாலும் இருபது-20 கிரிக்கெட் தொடர் பரபரப்பானதாக இருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

2ஆவது இருபது-20 21ஆம் திகதி செஞ்சூரியனிலும், 3ஆவது மற்றும் கடைசி போட்டி 24ஆம் திகதி கேப்டவுனில் இரவு 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

# எல்லாப் புகழும் அனுஷ்காவுக்கே விராட் ஹோலி புகழாரம்



விராட் ஹோலி தனது சிறப்பான ஆட்டத்துக்கு மனைவியும், நடி கையுமான அனுஷ்கா சர்மாதான் காரணம் என்று புகழ்ந்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறிய தாவது,

ரசிகர்களின் ஆதரவு இல்லை யென்றால் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இருக்க முடியாது. எனது மனைவியும் தென்னா பிரிக்கா பயணத்தில் என்னை ஊக்கப்படுத்தினார்.

இதுவும் வெற்றிக்கு காரண மாக இருந்தது. இதற்காக அவ ருக்கு நன்றி தெரிவிக்கிறேன். கடந்த காலங்களில் அவர் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளானார். ஆனால் தற்போது எனது மேம்பட்ட ஆட்டத்துக்கு அவர்தான் காரண மாக இருந்தார். இவ்வாறு ஹோலி கூறினார்.

ஹோலி சர்வதேச போட்டியில் 17 ஆயிரம் ஓட்டங்களை வேகமாக தொட்டு சாதனை படைத்தார். இதே போல ஒரு நாள் போட்டியில் அதிவேகத்தில் 9,500 ஓட்டங் களை எடுத்து டிவில்லியர்சை முந்தினார்.

# சித்த மருத்துவ நூல் வெளியீட்டு விழா

Dr.திருமதி விவியன் சத்தியசீலன்
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவப் பிரிவு அவர்களின்

**குணபாடம் மூலிகையியல் -03**
**குணபாடம் மூலிகையியல் -04**

வலம்புரி நாளிதழில்
"வாரம் ஓர் யாழ்ப்பாணத்து மூலிகை" எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட
கட்டுரைகளின் தொகுப்பு

காலம்: 18.02.2018 ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.00 மணி
இடம்: சித்த மருத்துவப் பிரிவு,
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி.

**தலைவர்:** Dr.சே.சிவசண்முகராஜா
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவப் பிரிவு, யாழ்.பல்கலைக்கழகம், கைதடி.
**முதன்மை விருந்தினர்:** பேராசிரியர் இ.விக்னேஸ்வரன்
துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்.
**சிறப்பு விருந்தினர்:** திரு.ந.விஜயசுந்தரம், பிரதம ஆசிரியர், வலம்புரி நாளிதழ்.
**கௌரவ விருந்தினர்:** Dr.திருமதி சி.துரைரட்ணம்
ஆணையாளர், சுதேச மருத்துவத் திணைக்களம், வட மாகாணம்.

நிகழ்ச்சி நிரல்
1.00- மங்கள விளக்கேற்றல்
1.10- சித்தர் வணக்கம்
1.15- வரவேற்புரை: Dr.திருமதி க.சௌந்தர்ராஜன்
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவப் பிரிவு.யாழ். பல்கலைக்கழகம், கைதடி.
1.25-வாழ்த்துரை: Dr.திருமதி தி.குருதாஞ்சன்
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவப் பிரிவு, யாழ். பல்கலைக்கழகம், கைதடி.
1.35- தலைமையுரை: Dr.சே.சிவசண்முகராஜா
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவப் பிரிவு, யாழ்.பல்கலைக்கழகம், கைதடி.
1.45- நூல் வெளியீடும், நூல் வெளியீட்டுரையும்: பேராசிரியர் இ.விக்னேஸ்வரன்
துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்.
முதற் பிரதி பெறுநர்: Dr.திருமதி க.ஜெபநாமகணேசன்
மருத்துவர்.பொறுப்பதிகாரி, கிராமிய சித்த வைத்தியசாலை, கொடிகாமம்
சிறப்பு பிரதிகள் பெறுநர்
2.15- கௌரவ விருந்தினர் உரை: Dr.திருமதி சி.துரைரட்ணம்
ஆணையாளர், சுதேச மருத்துவத் திணைக்களம், வடமாகாணம்.
2.25- நூல் அறிமுக உரை: திரு.ந.விஜயசுந்தரம்
பிரதம ஆசிரியர், வலம்புரி நாளிதழ்
2.50- நூல் ஆய்வுரை: Dr.ஐ.ஜெபநாமகணேசன்
அரசாங்க சிரேஷ்ட சித்த மருத்துவ உத்தியோகத்தர், கைதடி போதனா வைத்தியசாலை, கைதடி
3.20- ஏற்புரை: Dr.திருமதி.விவியன் சத்தியசீலன்
3.35-நன்றியுரை:Dr.சுரேசன், பிரதி மாகாண ஆணையாளர், சுதேச மருத்துவத் திணைக்களம், வடமாகாணம்.

சிறப்பு பிரதிகள் பெறுநர்:
01. Dr.S.சுதாமதி, சித்த மாவட்ட வைத்தியசாலை, வவுனியா.
02. Dr.K.மணிவண்ணன், இணைப்பாளர், சித்த மாவட்ட வைத்தியசாலை, முல்லைத்தீவு
03. Dr.R.கேதீஸ்வரன், மருத்துவ உத்தியோகத்தர்,மாவட்ட சித்த வைத்தியசாலை,குருநகர்.
04. Dr.Mrs.S.சுமதி, சிரேஷ்ட மருத்துவ உத்தியோகத்தர் மாவட்ட சித்த வைத்தியசாலை, குருநகர்.
05. Dr.Mrs.R.கனகசுந்தரம், மருத்துவ உத்தியோகத்தர்.இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலை, மிருசுவில்.
06. Dr.Mrs.A.விஜயகுமார், அரசாங்க சித்த மருத்துவ உத்தியோகத்தர் .கிராமிய வைத்தியசாலை, கொடிகாமம்.
07. Dr.V.சிவகுலேந்திரன், மருத்துவ பொறுப்பதிகாரி, கிராமிய வைத்தியசாலை, மல்லாகம்.
08. Dr.ஜெயலன், சுஜீவா வைத்தியசாலை, கே.கே.எஸ்.வீதி, நாச்சிமார் கோவிலடி
09. Dr.போதாபாரி, அரசாங்க சித்த மருத்துவ உத்தியோகத்தர், வவுனியா.
10. Dr.P.ஸ்ரீகணேசா, அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர், முகமாலை சித்த மருந்தகம்
11. Dr.Miss.G.சங்கீதா, மருத்துவ பொறுப்பதிகாரி, அரச மூலிகைத் தோட்டம், சித்த மத்திய மருந்தகம், நவக்கிரி.
12. Dr.S.உஷாக்காந்தன், விரிவுரையாளர் சித்த மருத்துவப் பிரிவு, திருகோணமலை வளாகம், கிழக்குப் பல்கலைக்கழகம்.
13. Dr. வ.சிவனேசன், சுதேச மருத்துவ ஒருங்கிணைப்பாளர், கிளிநொச்சி மாவட்டம்.
14. Dr. தி.சுதர்மன், இலவச சித்த மருந்தகம், மாநகரசபை, யாழ்ப்பாணம்.
15. Dr.க. பிறேமராகவன், ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்.
16. அதிபர், லங்கா சித்த ஆயுள்வேதக் கல்லூரி, சுன்னாகம்.
(அ)

நூற்பிரதி ஒன்றின் விலை
குணபாடம் மூலிகையியல் - 03 ரூபா 750.00
குணபாடம் மூலிகையியல் - 04 ரூபா 750.00


# ஐ.தே.கவிடமுள்ள முக்கிய அமைச்சுக்களை தன்வசப்படுத்த ஜனாதிபதி திட்டம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் இணைந்து கடந்த 2015 ஆம் ஆண்டு அமைத்த தேசிய அரசாங்கத்தில் பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் இரண்டு தரப்பினரும் தனித்து ஆட்சி அமைக்கும் நோக்கில் பாரிய முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மகிந்த தரப்பின் ஆதரவைப் பெற்று தனித்து ஆட்சி அமைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.

எனினும் 'இவ்வாறு தனித்து ஆட்சி அமைக்கும் முயற்சி வெற்றிபெறாமல் தேசிய அரசாங்கமே தொடருமாயின் முக்கிய அமைச்சுக்களை சுதந்திரக்கட்சியின் பக்கம் எடுத்துக் கொள்வது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவதானம் செலுத்தியிருக்கின்றார்.

விசேடமாக நிதி அமைச்சு, சட்டம் ஒழுங்கு அமைச்சு, சர்வதேச வர்த்தக மூலோபாய அமைச்சு, மீள்குடியேற்ற அமைச்சு ஆகியவற்றை சுதந்திரக்கட்சியின் பக்கம் எடுக்கும் நோக்கில் ஜனாதிபதி கவனம் செலுத்தியிருக்கின்றார்.

பொருளாதாரம் மற்றும் நாட்டின் அமைதி தொடர்பிலான பொறுப்புக்களை கொண்டுள்ள இந்த அமைச்சுக்களை தன்வசம் எடுப்பதற்கே சுதந்திரக்கட்சி முயற்சிக்கின்றது.

சுதந்திரக்கட்சி தனித்து ஆட்சி அமைக்கும் முயற்சிகள் ஒருபக்கம் இடம்பெறும் சூழலில் மறுபக்கம் தேசிய அரசாங்கத்தை எவ்வாறு முன்னெடுத்து செல்வது குறித்தும் ஆராயப்பட்டு வருகின்றது.

இந்த நிலையிலேயே முக்கியமான அமைச்சுக்களை ஐக்கிய தேசியக்கட்சியிடமிருந்து பெற்றுக் கொள்ளும் நோக்கில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கவனம் செலுத்தி வருகின்றார் என கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-10)


## ஆசிரியர் ஒத்துமாறல்

முல்லைத்தீவு வலயத்தில் ஆரம்பக் கல்வி ஆசிரியராக பணியாற்றுபவர் கிளிநொச்சி வலயத்திற்கு ஒத்துமாற விரும்புகின்றார். ஆர்வமுடைய ஆசிரியர் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்க. (2823)

077 645 2460
077 659 2355

## தேவை

பலசரக்கு கடைக்கு வேலையாட்கள் பொதிசெய்பவர், சிட்டை எழுதுநர் ஆகியோர் தேவை. பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். (சி-1617)

ரூபன் பல்பொருள் வாணிபம்
அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

## FLORENCE NIGHHTINGAALE
School of Nursing

ஒரு வருட தாதியர் பயிற்சிப் பாடநெறியினை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு அதிகளவான தொழில் வாய்ப்புகளை உள் மாவட்டத்திலும் வெளி மாவட்டத்திலும் பெற்றுக் கொடுத்துள்ளோம்.
நீங்களும் தாதியாக தொழில் புரிய ஆசைப்படுகின்றீர்களா?
ஒரு வருட தாதியர் பயிற்சிப் பாடநெறி.
3 மாதம் தனியார் வைத்தியசாலை பயிற்சிகள்.
பின் நிரந்தர வேலைவாய்ப்புகள்.
பாட முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்.
தகைமை: O/L 6 பாடம் சித்தி.
வயது : 18/35 ஆண், பெண் இருபாலாரும்
வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்கான குறுகிய காலங்களில் பயிற்சி அளிக்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படும். வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் பெற்றுத் தரப்படும்.
அலுவலக கடமை நேரம்: 8.00-4.00 வரை

19-25 ஆம் திகதிக்குள் வருகை தருபவர்கள் 1000ரூபாவினை செலுத்தி முற்பதிவுகளை மேற்கொள்ள முடியும்



மேலதிக தொடர்புகளுக்கு:
K.K.S. Road,
Maruthanarmadam.
077 718 6438
(2886)


## இராசி பலன்

**மீனம்:** பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், மாலை நேரப் பயணம் மகிழ்ச்சி தரும், புதிய நபர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கற்பனை மிகுதியான நாள்.

**மேடம்:** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**இடபம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்:** எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு, ஆரோக்கியமான நாள்.

**கும்பம்:** கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் எண்ணம் உருவாகும், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள்.

| | | | |
|---|---|---|---|
| சந் | | | |
| சூரி, புத, சுக் | இராசி பலன் கிரகநிலை | | ராகு |
| கேது | சந்திராஷ்டமம் பூரம், உத்தரம் | | |
| சனி | குரு, செவ் | | |

**18.02.2018**
மாசி 06, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.34 மணிக்கு
திருதியை பின்னிரவு 4.46 மணிவரை
பூரட்டாதி பிற்பகல் 12.35 மணிவரை
சுபநேரம் 9.32-11.02 மணிவரை
இராகுகாலம் 5.02-6.32 மணிவரை
சித்தாமிர்தம் வளவன்

**கடகம்:** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும்.

**மகரம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், உறவினர் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், உதவி செய்த சிலரே உதாசீனப்படுத்துவது கண்டு வருத்தமடையலாம், தேக நலனில் கவனம் தேவை.

**தனுசு:** பெற்றோர் மீது பிரியம் கூடும், மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, தூரத்து உறவினர்களின் வருகையுண்டு.

**துலாம்:** நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், உடல் நலன் சீராகும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி:** குடும்பத்ினருடன் குதூகலப் பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை ஏற்படலாம், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க நேற்று சனிக்கிழமை காலை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தார். இந்த விஜயத்தின் போது வடக்கு மாகாண பெற்றோலிய கூட்டுறவுத்துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் விற்பனை முகவர்களையும் யாழ். பொது நூலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார். (படங்கள்:- உ.சாளின்)

# விபத்துக்களால் ஏற்படும் மரணங்களைக் குறைக்க நாம் உரிய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் வலியுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

விபத்துக்களால் சிக்கி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை தினம் தினம் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இதனைக் கட்டுப்படுத்த நாம் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

புத்தூர் ஆவரங்கால் கிழக்குப் புகுதியில் அமைக்கப்பட்ட பிள்ளையார் மெடி கிளினிக் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

பல்வேறு வேலைப்பளுக்களுக்கு மத்தியிலும் தனிப்பட்ட ஒரு மருத்துவமற்றும் மருத்துவ ஆலோசனை நிறுவனத்தை திறந்து வைப்பதற்காக நான் இங்கே வந்திருக்கின்றேன் என்றால் அதற்கொரு காரணம் உண்டு. மருத்துவத் துறையில் எமது மக்களுக்கு கிடைக்க வேண்டிய உடனடி வைத்திய உதவிகள் கிடைக்காமை, முறையான வைத்தியப் பரிசோதனைகள் மூலம்அவர்களின்நோயின் தன்மை அறியப்படாமை போன்ற காரணங்களால் பல இன்னுயிர்கள் இழக்கப்பட்டு வருகின்றன. துன்பகரமான இவ்வாறான நிகழ்வுகள் எம்மைத் தினமும் துயரத்தில் ஆழ்த்துகின்றதால் அதனை மனத்தில் இருத்தியே எனது இன்றைய வருகை அமைந்திருக்கின்றது. முறையான மருத்துவ நிலையங்களின் தேவை இன்று பெருகியுள்ளது எனலாம்.

வடமாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தினமும் பல்லாயிரக்கணக்கான நோயாளர்கள் தமக்கு உரிய வைத்திய உதவிகளை வெளிநோயாளர் பிரிவில் பெற்றுச் செல்கின்றார்கள். அதற்கு மேலதிகமாக வைத்தியசாலையில் தங்கியிருந்தும் சிகிச்சை பெற்று வெளியேறுகின்றார்கள். இருந்தும் பல நோயாளர்கள் அல்லது விபத்துக்களில் சிக்கி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை தினம் தினம் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இதனைக் கட்டுப்படுத்த நாம் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

பொதுவாக மருத்துவர்கள் இரவு பகலாக கண் துஞ்சாது மருத்துவப் பணிகளில் ஈடுபட்டிருப்பது பொதுமக்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதில்லை. மாறாக வைத்திய அதிகாரிகள் பிரத்தியேக வைத்தியசாலைகளில் பணம் சம்பாதிக்கின்றார்கள். இலவச மருத்துவமனைகளில் அவர்களின் சேவைகள் திருப்திகரமாகக் கிடைக்கப்பெறுவதில்லை என்ற ஒரு கருத்தே மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டுள்ளது. இது முற்றிலும் தவறானது என்று கருதுகின்றேன். வைத்திய நிபுணர்கள் பிரத்தியேக வைத்தியசாலைகளுக்கு செல்வது உண்மை. சில வைத்தியர்கள் நோயாளிகள் மீது போதிய கரிசனை காட்டாது இருக்கலாம். ஆனால் அவர்கள் தமது கடமைகளுக்கு மேலதிகமான நேரங்களிலேயே இவ்வாறான விசேட கடமைகளை ஆற்றி வருகின்றார்கள். இலவச மருத்துவமனைகளில் அவர்களின் சேவைகளை நான் நேரடியாகப் பெற்றவன். அவற்றினால் பயன் பெற்றவன். அந்த வகையில்அவர்களுக்கு எனது அங்கீகாரத்தை வழங்குவதில் எனக்குத் தயக்கமில்லை. எம்முள் பலர் களியாட்ட நிகழ்வுகளிலும் உணவு விடுதிகளிலும் பொழுதுகளைக் கழிக்கின்ற போது வைத்திய நிபுணர்கள் இரவு பகலாக நோயாளிகளை கவனிப்பதிலும் அவர்களுக்குரிய மருத்துவ சேவைகளை வழங்குவதிலும் முழு நேரத்தையும் செலவிடுகின்றார்கள். இதை நாம் மறத்தலாகாது. இன்று தனியார் - பொது மக்கள் கூட்டு வணிகம் சிபார்சு செய்யப் பட்டு வருகின்றது. அந்த வகையில் தனியார் -பொது மக்கள் மருத்துவ உடன்பாடானது ஒன்றையொன்று குறை நிரப்புவதாக அமையும் என்று எதிர்பார்க்கலாம்.

பிரத்தியேக வைத்திய நிலையங்கள் உருவாக்கப்படுவதன் மூலமாக நீண்ட தூரம் பிரயாணம் செய்ய முடியாத அல்லது உடனடி வைத்திய உதவிகள் தேவைப்படுகின்றவர்கள் உதாரணமாக குழந்தைகளுக்கான வைத்திய உதவிகள்உடனேதேவைப்படுகின்றவர்கள் விரைவாக தமது மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கு இவ்வாறான வைத்திய நிலையங்கள் பெரிதும் உதவி புரிவன. அண்மையில் ஒருவருடன் உரையாடுகின்ற போது அவர் ஒரு விடயத்தைத் தெரிவித்தார். அவரின் பேரக்குழந்தைக்கு வைத்திய ஆலோசனைகளை வழங்குகின்ற வைத்திய நிபுணர் தமது பிரத்தியேக தொலைபேசி இலக்கத்தை அவருக்கு வழங்கியிருந்ததாகவும் நடுச்சாமத்தில் கூட பிள்ளையின் நோய் பற்றி அந்த வைத்திய நிபுணருக்குத் தொலைபேசி மூலமாக தெரிவிக்கின்ற போது தன்னிடம்என்னென்ன மருந்துகள் இருக்கின்றன என அறிந்து கொண்டு அதில் என்னென்ன மருந்துகளை என்ன அளவில் கொடுக்க வேண்டும் என்பதை,அடுத்த நாள் குழந்தையை வைத்திய நிபுணரிடம் எடுத்துச் செல்லும் வரை, தொலைபேசி மூலமாக அவரின் அறிவுறுத்தல்களைப் பெற்றுக் கொண்டதாகவும் தெரிவித்தார். இவ்வாறான வசதிகள் வேறு எங்கே கிடைக்கப் போகின்றது? ஏனைய மருத்துவ நிபுணர்கள் கூட தொலை தூரத்திலிருந்து வருகின்ற நோயாளர்களுக்கு தமது தொலைபேசி இலக்கங்களை கொடுத்து வைத்திருக்கின்றார்கள் என்பதும் தெரிய வந்தது. இவ்வாறான மருத்துவர் - நோயாளர் உறவு நான் முன்னர் கூறிய உயிரிழப்புக்களின் எண்ணிக்கை அதிகரித்தலைக் கட்டுப்படுத்தக்கூடும் என்று எதிர்பார்க்கலாம்.

ஆனாலும் ஒரு சில தவறுகள் பிரத்தியேக வைத்திய நிலையங்களில் ஏற்பட்டிருப்பது அல்லது ஏற்படக்கூடிய சூழல்கள் காணப்படுவது மனவருத்தத்திற்குரியது. வைத்திய நிபுணர்களும் ஏனைய வைத்திய அதிகாரிகளும் சிறப்பாக பணிகளில் ஈடுபடுகின்ற போதும் பிரத்தியேக வைத்திய நிலையங்களின் முகாமைத்துவப் பீடங்களின் கவனக்குறைவுகள் அல்லது பணமீட்டுதலே ஒரேயொரு குறிக்கோள் என்ற அவர்களின் மனோபாவம் தவறுகள் நடைபெற இடமளித்து விடுகின்றன. தவறான மருந்து விநியோகம், பயிற்சியற்ற தாதியர்களை, பணியாளர்களை வேலைக்கமர்த்தல் போன்றவை நோயாளிகளை நிரந்தர ஊனர்களாக மாற்றிவிட சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி விடுகின்றன.

எனவே பிரத்தியேக மருத்துவமனைகள் மற்றும் வைத்திய ஆலோசனை நிலையங்களை நடத்துகின்ற அனைத்து முகாமைத்துவங்களுக்கும் ஒரு அன்பான வேண்டுதலை இச் சந்தர்ப்பத்தில் விடுக்கலாம் என எண்ணுகின்றேன். உங்கள் கவனக் குறைவுகள் அல்லது பிழையான மருந்துப் பாவனைகள் அல்லது பயிற்சியற்ற அலுவலர்களை நியமித்தல் ஆகியன பல நோயாளர்களுக்கு நிரந்தர ஊனத்தை ஏற்படுத்த வழி அமைக்கின்றன. வைத்திய நிபுணர்களுக்கும் அது அவப்பெயரைத் தேடித் தருகின்றது. ஆகையால் உங்கள் மருத்துவமனைகளின் சுத்தம், சுகாதாரம், தொற்று நீக்கிகளை உறுதிப்படுத்தல் போன்றவை 100 சதவீதம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். உங்கள் மருத்துவ நிலையங்களில் வழங்கப்படுகின்ற மருந்து வகைகள் வைத்திய நிபுணரால் சிபார்சு செய்யப்பட்ட சரியான மருந்து வகையாக இருக்கின்றதா என்பதும் உறுதிப்படுத்தப்படல்வேண்டும்.

அத்துடன் சகல மருந்து விநியோகங்களும் தகுதி வாய்ந்த அல்லது அங்கீகரிக்கப்பட்ட மருந்தாளர்களாலேயே விநியோகிக்கப்பட வேண்டும். அத்துடன் சரியாகப் பயிற்சிபெற்ற தாதியர், மருத்துவப் பணியாளர்கள் போன்றோர் சேவையில் அமர்த்தப்பட வேண்டும்.

தகுந்த தாதியர் குறைபாடு தொடர்ந்து இருந்து வருகின்றது. இதனால் எமது பொது வைத்தியசாலைகள் வெளி மாகாணங்களில் இருந்தே தாதிமாரை வரவழைக்க வேண்டியுள்ளது. ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய தேர்ச்சித்தர சான்றிதழ்களைப் பெறாத தாதியர் வேலைக்கு அமர்த்தப்படுவதைத் தடுக்க வேண்டும்.

படித்த பெண்களிடையே வேலையின்மை இருந்து வருகின்றது. ஆனால் தாதியராகப் பதவி ஏற்க எம் பெண்கள் முன்வருகின்றார்கள் இல்லை.

இந்த நிலை மாற வேண்டும். தாதியரின் கடமைகள் நோயகற்றும் புனிதக் கடமை என்பதை எம் இளம் சகோதரிகள் உணர வேண்டும். பிள்ளையார் மெடி கிளினிக் தொழிற்றிறனுடன் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. உங்கள் பொறுப்புக்கள் முறையாக செயற்படுத்தப்படாத போது இன்று இந்த மருத்துவ நிலையத்தைத் திறப்பதற்கு எவ்வாறு எமது மனமுவந்த ஆதரவை வழங்கியுள்ளோமோ அதேயளவு ஆதரவு குறிப்பிட்ட மருத்துவமனையை மூடவும் வழங்கப்பட வேண்டிவரும் என்ற செய்தியையும் இத் தருணத்தில் தெரிவித்து, பொது மருத்துவமனைகளோ அல்லது பிரத்தியேக மருத்துவமனைகளோ அதிகம் இல்லாத இப்பகுதியில் உள்ள மக்களுக்கு பிள்ளையார் மெடி கிளினிக் வைத்திய நிறுவனம் சிறந்த ஒரு சேவையை 24 மணி நேரமும் வழங்கிவர வாழ்த்தி எனது வாழ்த்துகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# தவக்காலத் தியானமும் குணமாக்கல் வழிபாடும்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் எம்மாவுஸ் இறைத்தியான இயக்குநர் அருட்தந்தை அக்ஸ்ரின் மொண்ட காட் அடிகளாருடன் அருட்தந்தை றபேல் அடிகளாரும் இணைந்து நடத்தும் இறை தியான குணமாக்கல் வழிபாடு எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணியில் இருந்து பிற்பகல் 12.30 மணிவரை யாழ்.இறைதியான இல்லத்தில் பழைய பூங்கா வீதி, மறவ முன்பாக இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# கவிதை நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கவிஞர் இரா.ஜெயக்குமாரின் அனுபவங்களும் அனுமானங்களும் கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் செல்லப்பா சன்சமூக நிலைய தலைவர் அ.அமிர்தலிங்கம் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா கலந்து கொள்வார். (10)



அராலி கிழக்கு அ.மி.த.க. பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றபோது...

உ
சிவமயம்
அம்பாள் துணை



## காரைநகர்-வலந்தலை-மடத்துக்கரை

# திருவருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

ஏவிளம்பி வருஷ

# பிரம்மோற்சவ விஞ்ஞாபனம்-2018

அம்பிகை மெய்யடியார்களே,

தெட்சணகைலாயம் என்று போற்றப்படும் ஈழவளநாட்டின் வடமேல் பாகத்தில் அமைந்துள்ள சைவமும், தமிழும் தழைத்தோங்கும் காரைநகரின் நுழைவாயிலில் ஆலமரம் தலவிருட்ஷமாகவும், மூர்த்தி, தலம், தீர்த்தம் முதலிய சிறப்புகளுடன் கருணை மழை பொழிந்து, தன்னை நாடிவரும் அடியவர்களுக்கும், வழிப்போக்கர்களுக்கும், வழித்துணையாகவும் அமர்ந்திருந்து திருவருள்பாலித்துக் கொண்டு அருளாட்சி புரிந்து விளங்கும், அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு நிகழும் மங்கலகரமான ஏவிளம்பி வருஷம் மாசித்திங்கள் 07 ஆம் நாள் (19.02.2018) திங்கட்கிழமை பூர்வபக்ஷ சதுர்த்தித் திதியும், சித்த யோகமும், உத்திரட்டாதி நட்சத்திரமும் கூடிய சுபவேளையாகிய முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் (துவஜாரோகணம்) ஆரம்பமாகி பதினொரு (11) தினங்கள் மஹோற்சவம் நடைபெற்று 12ஆம் நாள் பூங்காவன உற்சவமும் நடைபெற அம்பிகையின் திருவருள் கைகூடியுள்ளது. அத் தருணம் அம்பிகை அடியவர்கள் ஆசாரசீலர்களாக ஆலயத்திற்கு வருகை தந்து உற்சவங்களில் கலந்து கொண்டு அம்பிகையின் திருவருளைப் பெற்றுய்வீர்களாக.

### உற்சவகால நிகழ்வுகள்

**19.02.2018** திங்கட்கிழமை 01ஆம் நாள் கொடியேற்றம் (துவஜாரோகணம்)-காலை 6.30 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் கிரியைகள் ஆரம்பமாகி முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்றம்.

**26.02.2018** திங்கட்கிழமை 08ஆம் நாள் வேட்டைத்திருவிழா- காலை 7.30 மணிக்கு 108 சங்காபிஷேகம் ஆரம்பமாகி நடைபெறும். மாலை 3.30 மணிக்கு அம்பாள் வேட்டைக்குப் புறப்படல். 6.00 மணியளவில் மருதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தில் வேட்டைத் திருவிழா நடைபெற்று மீண்டும் ஆலயத்தை வந்தடைந்து பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்று 8.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசை நடைபெறும்.


**27.02.2018** செவ்வாய்க்கிழமை 09ஆம் நாள் சப்பறத்திருவிழா- காலை 108 சங்காபிஷேகம், இரவு நவசக்தி அர்ச்சனை, முத்துச்சப்பறத்தில் அம்பாள் வீதியுலா வருதல்.

**28.02.2018** புதன்கிழமை 10ஆம் நாள் தேர்த்திருவிழா-காலை 8.00 மணிக்கு வசந்தமண்டபப் பூசை, 10.00 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணித்தல்.

**01.03.2018** வியாழக்கிழமை 11 ஆம் நாள் தீர்த்தோற்சவம்-காலை 7.00 மணிக்கு கிரியைகள் ஆரம்பம். முற்பகல் 10.00 மணிக்கு மாசி மகத் தீர்த்தம், அம்பிகையின் தீர்த்தத் தடாகத்தில் தீர்த்தோற்சவம். இரவு 8.30 மணிக்கு கொடியிறக்கம் (அவஜாரோகணம்) தொடர்ந்து மௌன உற்சவம், சண்டேஸ்வரி உற்சவம், சிவாச்சாரியார் உற்சவம்.

**02.03.2018** வெள்ளிக்கிழமை 12ஆம் நாள் பூங்காவனத் திருவிழா-காலை 8.00 மணிக்கு 1008 சங்காபிஷேகம், இரவு 8.00 மணிக்கு பூங்காவன உற்சவம்.
அலங்காரக் காட்சியும் இடம்பெறும்.

ஆசி வழங்கும் குருமணிகள்
சிவஸ்ரீ வை.சுப்பிரமணியக் குருக்கள்
(பிரதமகுரு, ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோவில், கொழும்பு)
பிரம்மஸ்ரீ கு.சற்குணராசசர்மா (சுழிபுரம்)



தினமும் அன்னதானம் வழங்கப்படும்.

மஹோற்சவ பிரதமகுரு
சத்தியோயாத சிவாச்சாரியார் சிவஸ்ரீ.கு.சண்முகராஜக்குருக்கள்
(பிரதமகுரு, ஷதேவஸ்தானம் பயிரிடக்கூடல் சுப்பிரமணியசுவாமி கோவில்)

அடியார்கள் திருவிழாவிற்கு தேவையான பால், தயிர், இளநீர், கற்பூரம், தேங்காய் எண்ணெய், பூக்கள், பூமாலை போன்ற சிவத்திரவியங்களை வழங்கி அம்பாளின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

காரைநகர் வலந்தலை, மடத்துக்கரை.

அனைவரும் வருக அன்னையின் திருவருளைப் பெறுக.

பிரம்மஸ்ரீ.கு.சரவணபவானந்தசர்மா
(ஆதீனகுருவும் நம்பிக்கைப்
பொறுப்பாளரும்) உபயகாரர்களும்


## சன் ஹோமியோபதி மெடிக்கல் சென்டர்

### யாழ். மண்ணில் வெற்றிகரமான ஓராண்டில்...

கடந்த வருடம் ஏ-9 வீதி கொடிகாமத்தில் ஆரம்பித்த எமது மருத்துவ சேவையானது மாபெரும் சாதனைகள் படைத்து பல நோயாளர்களின் நோய்களை தீர்த்து நன்மதிப்பினை பெற்றுள்ளது.

எம்மிடம் மருத்துவம் பெற்று சுகம் பெற்றவர்களின் பட்டியலில் உங்களையும் இணைத்து கொள்ளுங்கள்...

எமது மருத்துவ சேவையில்.



1. நீரிழிவு (சீனி வியாதி)
2. ஆஸ்துமா
3. பீனிசம் (சளி வியாதி)
4. ஒற்றைத் தலைவலி / தலைவலி
5. மூட்டுவாதம்
6. சரும வியாதிகள், சொராசிஸ், வெண்குஸ்டம்
7. ஆண்மைக் குறைவு
8. மனநோய், மன அழுத்தம்
9. உடல் எடை குறைக்க/ அதிகரிக்க
10. பாரிச வாதம்.



போன்ற பல நோய்களுக்கு சிறந்த முறையில் வைத்தியம் அளிக்க முடியும்.

ஒவ்வொரு செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் மருத்துவ சேவை நடைபெறும்.

மேலதிக தொடர்புகளுக்கும் முன் பதிவுகளுக்கும்
077-897 7328

**வைத்திய ஆலோசனைக்கு: 072-113 0797**

சமீப காலமாக எமது வளர்ச்சியினை பொறுக்க முடியாத ஓர் சிலர் எமது மருத்துவ முறைபற்றி தவறான தகவல்களை மக்களிடம் பரப்பி வருகின்றார்கள். மக்கள் இதனை நம்பி ஏமாற வேண்டாம்.

எமது மருத்துவரும் மருத்துவமனையும் சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்டு, பதியப்பட்டு நடைபெற்று வருகின்றது.

யாழ் நகரில் எமக்கு வேறு கிளைகள் கிடையாது

**Dr. Janahan**
MBHS (Ind), MD(MA), DAC.
Reg.No.283

வடமாகாணத்தில் எமக்கு வேறு கிளைகள் கிடையாது.



சன் ஹோமியோபதி மெடிக்கல் சென்டர்
ஏ-9 வீதி,
கொடிகாமம்,
யாழ்ப்பாணம்.



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்:பரணி
கி.பா:46
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:O/L/ சொந்ததொழில்
தொ.இ: B/8265

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:MSc/ஆசிரியர்
தொ.இ: B/8266

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 85 செவ் 7 இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்
தொ.இ: B/8267

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: விசாகம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L/நிரந்தரதொழில்
தொ.இ: B/8269

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 35 செவ் 12 இல்
உயரம்: 160cm
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/8296

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:Diploma/ஆசிரியர்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/8298


பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: ரோகினி
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:வைத்தியபீட மாணவி கனடா
தொ.இ: G/8299

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 45 செவ் 7 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:அரசதொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/1116

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# நிமாலுக்கு பிரதமர் பதவி பொருத்தமற்ற விடயம்

## பொதுபல சேனா தெரிவிப்பு



(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தின் தற்போதைய நிலைமை குறித்து தீர்மானம் எடுக்க முடியாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன் குழப்ப நிலையில் உள்ளார். இந்நிலையில் நாடு எதிர்கொண்டுள்ள உள்ளக மற்றும் சர்வதேச ரீதியிலான நெருக்கடிகளுக்கு மத்தியில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவிற்கு பிரதமர் பதவியை வழங்குவது பொருத்தமற்ற விடயம் என பொதுபல சேனா அமைப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து பொதுபல சேனா அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் டிலாந்த விதானகே மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பெறுபேறுகள் எவரும் எதிர்பார்க்காத அபிவிருத்தியை முன்னெடுக்கவே பாரிய செலவுகளின் மத்தியில் தேர்தல் இடம் பெற்றது. தேர்தல் நடத்துவதில் காணப்பட்ட நோக்கம் தற்போது மாற்றம் அடைந்துள்ளது. பிரதேச ரீதியில் மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கு பதிலாக தேசிய அரசாங்கத்தில் மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது.

பிரதமர் பதவி தேசிய அரசாங்கத்தில் குறிப்பாக நல்லாட்சி அரசாங்கத்தில் முககியத்துவம் பெற்றுள்ளது. ஆனால் தற்போது அந்த பதவி நிலையே பாரிய சிக்கல்களுக்கு உள்ளாகியுள்ளது. இந்நிலையில் குறித்த பிரதமர் பதவிக்கு நல்லாட்சி அரசாங்கம் நிமால் சிறிபால டி சில்வாவை பரிந்துரை செய்துள்ளமை சாத்தியமற்றதாக காணப்படுகின்றது. உள்ளூராட்சி சபைகளின் பிரதான நோக்கம் பிரதேச அபிவிருத்தியை மேம்படுத்துவதாகும். ஆனால் குறித்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளை அடிப்படையாகக்கொண்டு தேசிய அரசாங்கத்தில் பாரிய மாற்றத்தினை ஏற்படுத்துவதில் குறித்த கட்சிகள் கவனம் செலுத்தி தேசிய அரசின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றது.

பிரதமர் பதவி குறித்து யாரை நியமிப்பது என்பது தொடர்பில் நாட்டுத் தலைவர் குழப்பமடைந்துள்ள நிலையில் கட்சிகள் தமது அரசியல் நலனை மாத்திரம் கருத்திற் கொண்டு பிரதமர் பதவிக்கு பக்கச்சார்பாக பரிந்துரைகளை மேற்கொள்வது தற்போதைய அரசியல் நெருக்கடியை மேலும் வலுப்படுத்துவதாக காணப்படுகின்றது. பிரதமர் பதவிக்கு பரிந்துரைகளை மேற்கொள்ளும் அரசியல் கட்சிகள் வெளிப்படையாக தேசிய நலனில் அக்கறையுடைய கருத்துக்களை வெளிப்படுத்தி திரைமறைவில் பல்வேறு சூழ்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

நாடு பாரிய அரசியல் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள நிலையில் நாட்டின் தலைவர் பிரதமர் பதவியை பொருத்தமானவரிடம் கையளிப்பது நிகழ்கால அரசியல் தேவையாக காணப்படுகின்றது. ஆகவே ஜனாதிபதி தீர்க்கமாக சிந்தித்து நாட்டு நலன் கருதி துரிதமான தீர்மானத்தினை மேற்கொள்வது அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# "அரச சிறுவர் ஓவிய விழா - 2018" விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களம் அரச கட்புலக்கலை ஆலோசனைக் குழுவுடன்இணைந்து ஆண்டு தோறும் ஏற்பாடு செய்யும் அரச ஓவியப்போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. நிபந்தனைக்கு அமைவாக வரையப்பட்ட மாணவர்களது ஓவியங்களை 09.03.2018 வெள்ளிக்கிழமைக்கு முன்னர் யாழ்ப்பாண பிரதேச செயலக கலாசாரப்பிரிவில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலாளர் பொ.தயானந்தன் அறிவித்துள்ளார்.

குறிப்பு: சுற்றறிக்கைக்கு அமைவான ஓவியங்களை நேரடியாக அனுப்ப விரும்புவோர் 15.03.2018 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய ஒருங்கிணைப்பாளர், அரச கட்புலக்கலை ஆலோசனைக்குழு, தேசிய கலாபவனம், ஆனந்தகுமாரசுவாமி மாவத்தை கொழும்பு.-07 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். சுற்றறிக்கை வருமாறு,

உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அரச கட்புலக்கலை ஆலோனைக் குழு ஏற்பாடு செய்கின்ற அரச சிறுவர் ஓவிய விழா -2018 இன் ஆரம்ப சுற்றுக்கான ஓவியங்களை 2018 ஜனவரி 20 ஆம் திகதி தொடக்கம் 2018 மார்ச் மாதம் 16 ஆம் திகதி வரை கொழும்பு-07 தேசிய கலாபவனத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். இவ் ஓவியங் களிலிருந்து ஒரு மாவட்டத்திற்கு 50 ஓவியங்கள் தேர்ந்தெடுக்கப்படுவதோடு இரண்டாம் சுற்றுக்காக முன்னனுப்பப்படுவர். இரண்டாம் சுற்றுப் போட்டி மாகாண மட்டத்தில் விசேட பயிற்சிப் பட்டறை மூலம் நடத்த செய்யப்பட்டுள்ளதுடன் முதலாம் சுற்றின் அனைத்து வெற்றியாளர்களுக்கும், சான்றிதழ்கள் வழங்கப்படும். இரண்டாம் சுற்றில் தீட்டப்படுகின்ற ஓவியங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் படைப்புக்கள் "2018 அரச சிறுவர் ஓவிய விழாவின் போது விருதுகள், பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பாலர் பிரிவு வய தெல்லை 5-6 (பிறந்தவருடம்2012-2011), சிறுவர் பிரிவு வயதெல்லை 7-9 (பிறந்த வருடம் 2010-2009-2008), கனிஷ்ட பிரிவு வய தெல்லை 10-12(பிறந்த வருடம்2007-2006-2005), சிரேஷ்ட பிரிவு வயது, வருடம் வயதெல்லை 13-15 (பிறந்த வருடம் 2004-2003-2002),அதி சிரேஷ்ட பிரிவு வயதெல்லை 16-18(பிறந்த வருடம் 2001-2000-1999)

போட்டி நிபந்தனைகள்

நீங்கள் விரும்பிய தலைப்பினை தெரிவு செய்து கொள்ள முடியும். நீங்கள் விரும்பிய வடிவத்தில் ஓவியம் தீட்டலாம். ஓவியம் 18X14 அங்குலத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். ஒருவர் ஒரு ஆக்கத்தினை மாத்திரமே போட்டிக்கு சமர்ப்பிக்க முடியும், அனுப்பப்படும் ஆக்கம் இதற்கு முன்னர் வேறு எந்த போட்டிக்காகவும் சமர்ப்பித்ததாக இருக்கக்கூடாது.

ஓவியம் அனுப்பும் போது தங்களின் சொந்த வதிவிட மாவட்டத்திலிருந்து அனுப்புதல் வேண்டும். தங்களால் அனுப்பப்படும் ஆக்கங் களின் நடுவர் குழுவினரால் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் மட்டும் குறிப்பிட்ட மாவட்டத்தில் போட்டிக்காக தெரிவு செய்யப்படுவர்.

போட்டிகள் நடைபெறும் திகதி, நேரம் மற்றும் இடம் என்பன பின்னர் அறிவிக்கப்படும். ஓவியத்தின் பின்புறத்தில் கீழ்க் காணப்படும் விடயங்களை சரியான முறையில் தமிழ் அல்லது ஆங்கில மொழியில் பூர்த்தி செய்தல் வேண்டும். இந்த விடயங்கள் சரியான முறையாக வழங்கப்படாத ஆக்கங்கள் போட்டியிலிருந்து நீக்கப்படும். இது தொடர்பான மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள அருகில் உள்ள பிரதேச செயலகத்தில் அல்லது மாவட்ட செயலகத்தில் உள்ள கலாசார உத்தியோகத்தரை நாடவும்.

ஓவியம் அனுப்பும் போது கடித உறையின் அல்லது பொதியின் இடது பக்க மேல் மூலையில் "அரச சிறுவர் ஓவிய விழா-2018 என்று குறிப்பிடவும்.

தொடர்புகளுக்கு:-011-288 2551/ 011-287 2031. மேலதிக விபரங்களுக்கு 2018.01.26 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலை பார்க்கவும் அல்லது www. culturaldept.gov.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-107)

# மஞ்சள் கடவையில் வைத்து பெண்ணை மோதிய பேருந்து

(கொழும்பு)

மஞ்சள் கடவையில் வீதியைக் கடக்க முயற்சித்த பெண், இ.போ.ச பேருந்து மோதி பலியானார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை கேகாலை, கரந்துபன சந்தியில் இடம் பெற்றுள்ளது.

குறித்த கடவையில் நின்றிருந்த பெண் வீதியைக் கடக்க முயற்சித்தார். அப்போது, கண்டியில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து அவர் மீது மோதியது.

மோதிய வேகத்தில் தூக்கியெறியப்பட்ட அந்தப் பெண், ஸ்தலத்திலேயே பலியானார்.

உடனடியாக சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார், பேருந்து சாரதியைக் கைது செய்தனர். பலியானவர், அரணாயக்க, உஸ்ஸபிட்டியவைச் சேர்ந்த 68 வயதுப் பெண் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். (இ-10)

# இரத்ததான முகாம் இன்று

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணம் பாய் கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் கண்ணகியம்மன் ஆலயங்களின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலய பரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் மூளாய் ஸ்ரீ கணேசா சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறும். (10)

# பிரதேச சபையின் தலைவர் பதவி கோரி மகிந்த அணி உறுப்பினர் உண்ணாவிரதம்

(கொழும்பு)

பொதுஜன பெரமுன சார்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றியீட்டிய உறுப்பினர் ஒருவர் பிரதேச சபையின் தலைவர் பதவி கோரி உண்ணாவிரதம் ஆரம்பித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தெஹி அத்தகண்டிய பிரதேச சபையை மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான பொதுஜன பெரமுன கட்சி கைப்பற்றியுள்ளது.

இந்நிலையில் தெஹி அத்தகண்டிய பிரதேச சபையின் தலைவராக புதிய உறுப்பினர் ஒருவரை தெரிவு செய்ய கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் சதி செய்வதாக குற்றம்சாட்டி, வெற்றியீட்டிய உறுப்பினர் உண்ணாவிரதம் ஆரம்பித்துள்ளார்.

அஜித் ரோஹண சில்வா எனப்படும் குறித்த நபர் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் குடாநவகம வட்டாரத்தில் 1100க்கும் அதிகமான வாக்குகள் பெற்று வெற்றியீட்டியுள்ளார்.

அத்துடன் கடந்த முறையும் சுதந்திரக் கட்சி சார்பில் பிரதேச சபையில் உறுப்பினராக இருந்த அனுபவம் இருப்பதுடன், பட்டதாரியுமான தன்னைத் தவிர பிரதேச சபை தலைவர் பதவிக்குப் பொருத்தமான வேறு நபர்கள் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதேச சபைத் தலைவர் பதவி தனக்கே வழங்கப்பட வேண்டும் என்று கோரி நேற்று மாலை தொடக்கம் தெஹிஅத்தகண்டிய நகர மத்தியில் பகிரங்க உண்ணாவிரதப் போராட்டத்தை அஜித் ரோஹண சில்வா ஆரம்பித்துள்ளார். (இ-10)

# பிரேசில் நாட்டவர் உடலில் 45 கொக்கெய்ன் மாத்திரைகள்

(கொழும்பு)

போதை மருந்து அடங்கிய மாத்திரைகளை நாட்டுக்குள் எடுத்துவர முயற்சித்த சந்தேகத்தில் பேரில், பிரேசிலைச் சேர்ந்த ஒருவரை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய போதை மருந்து தடுப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் நேற்றுக் காலை இலங்கை வந்துள்ளார். அவரைச் சோதனையிட்டபோது, அவரது உடலில் 45 'கெப்ஸூல்' வடிவ மாத்திரைகள் இருந்ததை சுங்கத் துறையினர் அவதானித்தனர்.

இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட தீவிர விசாரணையில், அவற்றில் கொக்கெய்ன் போதைப் பொருள் அடங்கியிருக்கலாம் என சந்தேகம் எழுந்தது.


இதையடுத்து, அவர் போதை மருந்து தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட அவர் நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு, அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு வைத்து, அவரது உடலுக்குள் இருந்த போதை மருந்து கலந்த மாத்திரைகள் 45உம் வெளியே எடுக்கப்பட்டன. (இ-10)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 50 | 60 | 60 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 60 | 50 | 60 | 60 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 60 | 50 | 100 | 80 | 100 | 70 |
| தக்காளி | 40 | 50 | 50 | 50 | 80 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 30 | 50 | 40 | 40 | 30 |
| கோவா | 50 | 30 | 60 | 60 | 60 | 70 |
| கரட் | 80 | 100 | 120 | 100 | 160 | 80 |
| பூசணி | 60 | 30 | 60 | 50 | 60 | 50 |
| புடோல் | 100 | 70 | 70 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 80 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 100 | 160 | 160 | 120 | 140 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 80 | 100 | 100 | 140 |
| பாகற்காய் | 140 | 100 | 120 | 120 | 140 | 100 |
| வெண்டிக்காய் | 100 | 70 | 80 | 100 | 100 | 100 |
| கருணைக்கிழங்கு | 40 | 80 | 60 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 140 | 100 | 120 | 100 | 120 | 100 |
| லீக்ஸ் | 180 | 200 | 180 | 240 | 200 | 160 |
| பீற்றூட் | 40 | 40 | 60 | 50 | 60 | 50 |
| குடமிளகாய் | 150 | 120 | 100 | 140 | 120 | 180 |
| முருங்கைக்காய் | 600 | 250 | 600 | 400 | 800 | 600 |
| போஞ்சி | 80 | 100 | 100 | 80 | 160 | 160 |
| கத்தரிசம் புள்ள | 60 | 30 | - | 60 | 60 | 70 |
| கீரை -1பிடி | 60 | 10 | 20 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 20 | 15 | 40 | 50 | 40 | 40 |
| தேங்காய்(ஒன்று) | 80 | 70-100 | 75 | 100 | 75 | 80 |
| இராசவள்ளி | 160 | 150 | 140 | 180 | 200 | 160 |
| வெங்காயப்பூ | 80 | 25 | 100 | 80 | 120 | 140 |
| முள்ளங்கி | 20 | 60 | 60 | 40 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 | 40 | 40 | 35 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 20 | 20 | 35 |
| ஈரப்பலா | 80 | 40 | - | 60 | 80 | 60 |

# எதிர்க்கட்சித் தலைவராக மகிந்த! மாற்றம் செய்யாவிடின் ஆபத்து

## கூட்டரசின் பங்காளியான சம்பிக்க எச்சரிக்கை



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அமைப்பும் இணைந்த கூட்டணி நாட்டை ஆட்சி செய்வதனையே மக்கள் விரும்புவதாக ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஆட்சியமைக்கும் இக்கூட்டணி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை எதிர்க் கட்சியாகவும் மகிந்த ராஜபக்ஷவை எதிர்க்கட்சித் தலைவராகவும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க வலியுறுத்தியுள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளின்படி தற்போதைய அரசாங்கத்தில் பாரிய மாற்றம் முன்னெடுக்கப்பட வேண்டியது கட்டாயம் எனவும் தெரிவித்துள்ள சம்பிக்க ரணவக்க, எதிர்வரும் 18 மாதங்களுக்குள் அரசாங்கம் உரிய முறையில் இதனை அணுக வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் கொள்கைகளில் மாற்றங்களை முன்னெடுக்க வேண்டும். இல்லையேல் ஐக்கிய தேசியக் கட்சி இவ்வருடம் செப்டெம்பரிலும் அடுத்த வருடம் ஏப்ரலிலும் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலிலும் தோல்வியை சந்திக்க நேரிடும். அதனைத் தொடர்ந்து 2020 இல் ஆட்சியைக் கைப்பற்றுவதென்பது ஐக்கிய தேசியக் கட்சிக்கு வெறும் கனவாகவே இருக்கும்.

எவ்வாறாயினும், தற்போது மக்களின் ஆணையை ஏற்று ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான புதிய அமைப்புக்கும் இடையில் கூட்டணியொன்றை அமைப்பதுவே இதற்குரிய சிறந்த தீர்வாக அமையுமென்றும் ஜாதிக ஹெல உறுமய கட்சி வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (இ)

## கால்வாயில் இளைஞனின் சடலம்

(கொழும்பு)

பிலியந்தலை - ஹெரலியாவல பிரதேசத்தில் கால்வாய் ஒன்றில் குதித்து காணாமல்போன இளைஞனின் உடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை கால்வாயில் மிதந்து கொண்டிருந்த நிலையில் குறித்த சடலம் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோசடியாளர்கள் சிலரை கைது செய்வதற்காக கஹுதுடுவ பொலிஸார் நேற்று முன்தினம் மதியம் ஹெரலியாவல பிரதேசத்தில் சுற்றி வளைப்பொன்றை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது, பொலிஸார் வருவதை அவதானித்த குறித்த இளைஞர் அருகில் இருந்த கால்வாயில் குதித்துள்ளார்.

அந்த சம்பவத்தின் பின்னர் பிரதேசவாசிகள் சிலர் கஹுதுடுவ பொலிஸ் நிலையத்திற்கு சென்று குறித்த இளைஞர் காணாமல் போயுள்ளதாக தெரிவித்து எதிர்ப்பில் ஈடுபட்டனர். இந்நிலையில் நேற்றுக் காலை குறித்த இளைஞனின் சடலம் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## ஆன்மீக பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை- வெள்ளாந்தெரு நல்ல தண்ணீர்க் கிணற்றடி ஸ்ரீ ஞான வைரவர் ஆலய அலங்கார உற்சவம் 2018.02.15 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் (01.03.2018) வரை நடைபெற்று வருகின்றன. இவ் உற்சவ காலங்களில் தினமும் மாலை 6.00 மணிமுதல் 7.00 மணி வரை தொடர் ஆன்மீகப் பேருரையினை வர்ணனைக் கலாநிதி. மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் ஆசிரியர் நிகழ்த்தி வருகின்றார். இவ் பேருரைகளின் நிறைவு நாளன்று (01.03.2018) பேருரைகளில் கலந்து கொள்வோருக்கான சமய அறிவுத்தேர்வு நடத்தப்பட்டு அவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு இடம்பெறும் என ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (இ)

## 8 பேர் உயிரிழப்பு
# கட்டடம் இடிந்து வீழ்ந்தமை தொடர்பில் 7பேரிடம் விசாரணை



(கொழும்பு)

கிராண்ட்பாஸில் கட்டடம் இடிந்து வீழ்ந்தமை தொடர்பில் 7 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டு நீதிமன்றிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரித்துள்ளார்.

இது குறித்து கட்டடத் திருத்தவேலை ஒப்பந்தகாரரிடமே குறித்த வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன.

குறித்த கட்டடத்தின் திருத்த வேலைக்கான ஒப்பந்தகாரர்களின் உயரதிகாரி பொலிஸில் சரணடைந்திருந்த நிலையில் அவரிடம் வாக்கு மூலத்தைப் பெற்ற பின்னர் விடுவிக்கப்பட்டார்.

இவ்வனர்த்தத்தில் உயிரிழந்த 8 பேரின் சடலங்களும் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் விபத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இரண்டு பேரின் நிலை கவலைக்கிடமானதாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (இ-10)

# உள்ளூராட்சி மன்றங்களின் பணிகளை விரிவுபடுத்த தென்கொரியா உதவி

(கொழும்பு)

குப்பையை பயன்படுத்தி சிறிய அளவிலான மின் உற்பத்தி வேலைத்திட்டத்தை முன்னெடுக்க தென்கொரிய தூதுவர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான தென்கொரிய தூதுவருக்கும், அமைச்சர் பைசர் முஸ்தபாவுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இதன்போது இலங்கை உள்ளூராட்சிமன்ற நிறுவனங்களின் பணிகளை விரிவான முறையில் முன்னெடுக்க தென்கொரியா ஆதரவு வழங்கும் என்று தென்கொரிய தூதுவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களின் பணிகளை விரிவாக்கவும், வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்கான ஆலோசனைகளையும், வளங்களையும் இலங்கைக்கு வழங்குவுள்ளதாகவும், இதற்கமைவாக 190 கழிவகற்றும் இயந்திரங்கள் முதற்கட்டமாக வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-10)

# நான்கு கோடி ரூபா பெறுமதியான இரத்தினக்கல் கருங்கல்லானது

(கொழும்பு)

கொழும்பில் பல கோடி ரூபா பெறுமதியான இரத்தினக்கல் சூட்சுமமான முறையில் திருடப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விற்பனை செய்யப்படவிருந்த இரத்தினக் கல்லை பெற்றுக் கொண்ட நபர் பணத்திற்கு பதிலாக கருங்கல்லை கொடுத்துவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

கல்கிஸை பிரதேசத்தில் தரகர் போன்று செயற்பட்ட நபரினால் சூட்சுமமான முறையில் இரத்தினக் கல்லின் உரிமையாளரான வர்த்தகர் ஒருவர் ஏமாற்றப்பட்டுள்ளதாக கல்கிஸை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக இரத்தினக் கல்லின் உரிமையாளர் இரண்டரை வருடங்களாக அதனை விற்பனை செய்யாமல் பாதுகாத்து வந்துள்ளார்.

4 கோடி ரூபாய் பெறுமதியான அந்த கல்லை ஒன்றரை கோடி ரூபாய்க்கு கொள்வனவு செய்வதற்கு வெளிநாட்டவர் தயாராக இருப்பதாக மோசடியாளர் தெரிவித்துள்ளார்.

இரத்தினக் கல்லை கல்கிஸைக்கு கொண்டுவருமாறு கோரியதுடன் அதற்கு முற்பணமாக ஒருவர் லட்சம் ரூபாய் பணத்தை உரிமையாளருக்கு வழங்கியுள்ளார்.

கல்கிஸையில் உரிமையாளரை சந்தித்த தரகர் இதனை இப்படியே வெளிநாட்டவருக்கு வழங்க கூடாது என கூறி பெட்டிக்குள் வைத்து அடைத்துள்ளார்.

சற்று நேரத்தில் பெட்டியை மீண்டும் உரிமையாளரிடம் வழங்கிய தரகர் வெளிநாட்டவரை அழைத்து வருகின்றேன் என கூறி சென்றுள்ளார்.

சென்றவர் மீண்டும் வராத நிலையில் பெட்டியை திறந்து பார்த்த உரிமையாளர் அதில் கருங்கல் ஒன்று இருந்ததனையே அவதானித்துள்ளார்.

இதனால் அதிர்ச்சியடைந்த உரிமையாளர் கல்கிஸை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். சந்தேக நபரை தேடி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-10)

# கடந்த கால ஆட்சியாளர்களுக்கு மைத்திரி தண்டனை வழங்குவார்
## அமைச்சர் அமரவீர நம்பிக்கை



(கொழும்பு)

ஊழல் மோசடிகளை செய்த கடந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்தவர்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எவ்வித மன்னிப்பும் வழங்க மாட்டார் என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மட்டக்குளி சீ நோர் படகு தொழிற்சாலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மீன்பிடி படகுகளின் வெள்ளோட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி திருடர்களுக்கு தண்டனை வழங்குவார். அவர் திருடர்களை மன்னிக்க மாட்டார். கடந்த அரசாங்கம் மற்றும் தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சர்கள் உட்பட எந்த தரத்தில் இருந்தாலும் ஜனாதிபதி அதனை பொருட்படுத்த மாட்டார்.

ஜனாதிபதி எதிர்காலத்தில் திருடர்களுக்கு வழங்கும் தண்டனையை பார்த்தால், திருடர்கள் கொள்ளையிட ஒரு முறையல்ல நான்கு முறை யோசிப்பார்கள்.

யாரும் குழப்பமடைய தேவையில்லை. கடந்த அரசாங்கத்தில் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு கட்டாயம் சட்டரீதியாக தண்டனை வழங்கப்படும்.

ஜனாதிபதி தனது வாழ்க்கையை விட நாடு பற்றி சிந்திப்பவர் என்பதால், இரண்டு தினங்களில் சரியான முடிவை எடுப்பார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# இந்தியாவில் ரவுடி வெட்டிக்கொலை இலங்கை அகதிகள் இருவர் கைது

(சென்னை)

இந்தியா - பெரம்பலூரில் பிரபல ரவுடி வெட்டிக்கொலை செய்யப்பட்ட வழக்கில் இலங்கை அகதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெரம்பலூர் திருநகரை சேர்ந்த 34 வயதுடைய ரவுடி பன்னீர்செல்வத்தை மர்ம கும்பல் ஒன்று புதன்கிழமை இரவு வெட்டிக் கொலை செய்துவிட்டு தப்பிச்சென்றுள்ளது.

இந்த நிலையில், கதிரவன், வினோத், விக்னேஷ் ஆகியோர் புதன்கிழமை இரவு பெரம்பலூர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர்.

எனினும் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய குற்றவாளிகளை பெரம்பலூர் பொலிஸார் தேடி வந்தனர்.

இவ்வாறான நிலையில், பெரம்பலூர் இலங்கை அகதிகள் முகாமைச் சேர்ந்த யேசுதாஸ், மணிகண்டன் ஆகியோரை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

• விசாரணையில், கொலை செய்யப்பட்ட பன்னீர்செல்வம் பல்வேறு குற்ற வழக்குகளில் தொடர்புடையவர் என்பதும், முன் விரோதம் காரணமாக வினோத் தனது நண்பர்களுடன் சேர்ந்து பன்னீர்செல்வத்தை கொலை செய்ததும் தெரியவந்துள்ளது. (இ-10)

# தோல்வியை ஏற்கும் மனப்பாங்கு இல்லாதவர்கள் குறுக்குவழியில் வெற்றியையடைய துடிக்கின்றனர்

## மாகாண சபை உறுப்பினர் ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

விளையாட்டுப் போட்டிகள் உடல் ஆரோக்கியத்துக்கு மாத்திரம் அல்லாமல் மன ஆரோக்கியத்துக்கும் பெரும் பங்களிப்பைச் செய்து வருகின்றன. வெற்றியைக்கண்டு துள்ளாமலும் தோல்வியைக் கண்டு துவழாமலும் வெற்றியையும் தோல்வியையும் ஒரேமாதிரி நோக்கும் மனப்பாங்கைச் சிறுவயதில் இருந்தே வளர்த்தெடுப்பதற்கு விளையாட்டுப் போட்டிகள் உதவுகின்றன.

தோல்வியை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கு இல்லாதவர்கள் எந்தக் குறுக்கு வழியிலேனும் வெற்றியை அடையத் துடியாய்த் துடிப்பார்கள். இவர்கள், கால் தடம் போட்டு, பண ஆசையையும் பதவி ஆசையையும் காட்டி, பொய்யான வாக்குறுதிகளை வழங்கி வெற்றியைப் பெற்றாலும் அந்தவெற்றியைத் தொடர்ந்தும் இவர்களால் தக்கவைக்க முடியாது என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும்வடமாகாணசபை உறுப்பினருமான பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. பாடசாலை அதிபர் க. புஸ்பராஜாவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

பெரும்பாலான பெற்றோர்கள் பிள்ளைகளைப் புத்தகப் பூச்சிகளாகவே வளர்த்தெடுக்க விரும்புகிறார்கள். விளையாட்டுப்போட்டிகள் உட்பட வேறு எந்த இணைபாட விதானச் செயற்பாடுகளிலும் தங்கள் பிள்ளைகள் பங்கேற்பதை இவர்கள் விரும்புவதில்லை. வேறுசெயற்பாடுகளில் ஈடுபட்டால் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுக் கல்வியில் பின்தங்கிவிடுவார்கள் என்பதே இவர்களது கருத்தாக இருக்கிறது. உண்மையில் இது தவறான அபிப்பிராயம் ஆகும்.

பரீட்சையில் வெற்றி பெறுவதற்குப் புள்ளிகள் உதவலாம். ஆனால், ஒருவர் வாழ்க்கையில் முழுமை பெறுவதற்கோ அல்லது வெற்றி பெறுவதற்கோ இந்தப் புள்ளிகள் மாத்திரம் போதாது. இந்த உலகம் போட்டிகளால் நிறைந்தது. விரும்பியோவிரும்பாமலோ ஒவ்வொருவரும் எண்ணற்ற போட்டிக் கதவுகளைத் திறந்து உள்நுழைந்து வெளியேற வேண்டியவர்களாகவே



உள்ளோம். இவற்றை எதிர்கொள்வதற்குத் தற்துணிவு அவசியம். ஒருதடவை தோல்வியைத்தழுவினாலும் மனம் இடிந்துபோய் உட்கார்ந்துவிடாமல் மீளவும் அடுத்த சுற்றுக்குத்தயாராக வேண்டும்.


அதேசமயம், இலக்கை எட்டுவதற்கு நேர்மையான அணுகுமுறைகளும் அவசியம். எந்த இக்கட்டான சூழ்நிலையிலும் அறம் பிறழாத வகையில் செயற்படவேண்டும். இந்த நற்பண்புகளை விளையாட்டுப் போட்டிகளும் ஏனைய இணைபாட விதானச் செயற்பாடுகளும் சிறுவயது முதலே கற்றுத்தருகின்றன.

பரீட்சையில் உயர்புள்ளிகளைப் பெறும் மாணவர்கள் பலர் இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் முன்னணியில் உள்ளார்கள்.

இவர்களின் வெற்றிக்கு அவர்கள் ஒவ்வொன்றிலும் காட்டுகின்ற ஈடுபாடும் நேர ஒதுக்கீடுமே காரணங்கள். இவற்றைப் பெற்றோர்கள் புரிந்து கொண்டு தங்கள் பிள்ளைகளைக் கற்றலுடன் சேர்த்து ஏனைய செயற்பாடுகளிலும் பங்கேற்பதற்கான ஊக்குவிப்பை வழங்க வேண்டும்.

அப்போதுதான் அந்தப் பிள்ளைகளால் எதிர்காலத்தில் முழுமையான மனிதர்களாக உயர்ந்துநிறைவான வாழ்க்கையை வாழமுடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# புகையிரதப் பெட்டியில் சித்திரம் வரைந்த வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு அபராதம்



(கொழும்பு)

புகையிரதப் பெட்டியில் சித்திரம் வரைந்த வெளிநாட்டுப் பிரஜைகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மாத்தறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த புகையிரதம் ஒன்றின் பெட்டியில் இரண்டு வெளிநாட்டுப் பிரஜைகள் சித்திரம் வரைந்துள்ளனர்.

இவ்வாறு சித்திரம் வரைந்த வெளிநாட்டுப் பிரஜைகளை மாத்தறை புகையிரத பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பிடித்து, பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். பின்னர் இந்த இருவரும் மாத்தறை நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததன் அடிப்படையில் இருவரையும் நட்டஈடாக 74, 060 ரூபாவினை செலுத்துமாறும், அபராதமாக தலா ஆயிரம் ரூபா செலுத்துமாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-10)

# தேங்காயை நிர்ணய விலை கொடுத்து வாங்குவதற்கு பொதுமக்கள் மறுப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச் சந்தையில் தேங்காய் ஒன்றின் விலை 75 ரூபாவாக விற்பனை செய்ய வேண்டுமென அறிவித்தல் வழங்கப்பட்டிருந்த நிலையில் சிறிய தேங்காய்களே தற்போது சந்தைக்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுவதனால் பொதுமக்கள் குறித்த விலை கொடுத்து தேங்காயை வாங்குவதற்கு மறுத்து வருவதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி பொது சந்தையில் ஒரு நாள் ஒன்றுக்கு 12ஆயிரத்திற்கும் மேற்பட்ட தேங்காய்கள் உற்பத்தியாளர்களினால் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. ஆனால் தப்பொழுது நாள் ஒன்றுக்கு 2ஆயிரம் தேங்காய்கள் கூட கிளிநொச்சி பொது சந்தைக்கு வருவதில்லை. வெளி மாவட்டங்களில் இருந்து தேங்காய் கொள்வனவிற்கு வருபவர்கள் தேங்காய் தோட்டங்களுக்கு சென்று 100,105 ரூபாய்க்கு கொள்வனவு செய்து வெளிமாவட்டங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்கின்றனர்.

அத்தோடு வெளிமாவட்ட வியாபாரிகளால், கொள்வனவு செய்யும் தேங்காய்களில் விட்டுச்செல்லும் சிறிய தேங்காய்களே கிளிநொச்சி பொது சந்தையில் 75 ரூபாய்க்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றது.

இதனால் நாளாந்தம் தமது தேவைகளுக்காக வாங்குகின்ற தேங்காய்களின் பெறுமதிக்கு ஏற்றதாக இல்லை என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி பொது சந்தையில் மாத்திரம் விலை கட்டுப்பாட்டு பிரிவினர் வருகை தந்து தேங்காய் 75 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்ய வேண்டாம் என தெரியப்படுத்தி வருகின்றன்ர்.

இந்நிலையில், வெளி மாவட்டங்களில் இருந்து வருபவர்கள் அதிக விலைக்கு கொள்வனவு செய்ய விலை கட்டுப்பாட்டு பிரிவினர் தடுத்து நிறுத்தாமல் இருப்பது ஏன் என பொதுமக்கள், வர்த்தகர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

சகல இடங்களுக்கும் நடைமுறையினை கொண்டுவர வேண்டும். இல்லையென்றால் எங்களையும் தேங்காய்க்கு ஏற்ற விலை கொடுத்து வாங்கி விற்பனை செய்ய அனுமதிக்க வேண்டும். இதனால் வியாபாரிகள் ஆகிய நாங்கள் பாதிப்பு அடைவதுடன் மக்கள் நலனும் பாதிப்படைகின்றது.

ஆகையால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பில் கவனம் எடுக்குமாறு வியாபாரிகள், பொதுமக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைக்கின்றனர். (2-271)

# இரண்டு வருடங்களுக்கு ஒருவர் மக்கள் நலத்திட்டங்களை செய்ய முடியாது

## வடக்கு மாகாணசபை உறுப்பினர் லிங்கநாதன் தெரிவிப்பு

(குருமன்காடு)

ஒரு உள்ளூராட்சி சபைக்கு இரண்டு வருடங்களுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் இருவரை நியமிப்பதன் மூலம் உண்மையான மக்கள் நலத் திட்டங்களை மேற்கொள்ள முடியாது என வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களாக இருந்தாலும் சரி, அடுத்த கட்ட தலைவர்களாக இருந்தாலும் சரி உள்ளூராட்சி மன்றங்களினுடைய தாற்பரியத்தை விளங்கிக் கொள்ளாமலும், மக்களது நலன்களை கருத்தில் கொள்ளாமலும் கட்சிகளின் நலனை முன்னிலைப்படுத்தி ஒவ்வொரு சபைகளுக்கும் தவிசாளர், உபதவிசாளர்களை நியமிக்கின்றபோது இரண்டு இரண்டு வருடங்களுக்கு ஒவ்வொருவருக்கும் கொடுப்பதன் மூலம் அந்த சபையின் நடவடிக்கைகள் மிக பலவீனம் அடையும்.

ஒரு உள்ளூராட்சி சபையில் தலைவராக வருபவர் அந்த சபை தொடர்பில் முழுமையாக அறிய ஒரு வருடம் தேவை. அதன்பின் தான் அவர் சேவையாற்ற வேண்டும்.

எனவே, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தலைமை கட்சி நலனை கருத்தில் கொள்ளாது மக்கள் நலனை கருத்தில் கொண்டு ஒவ்வொரு சபைகளுக்கும் ஒவ்வொரு தவிசாளரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (2-250-281)

# உள்ளூராட்சி தேர்தலையடுத்து 3 பிரதேச சபைகளிலும் ஆட்சி அமைக்கவுள்ள தவிசாளர்கள், உபதவிசாளர்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலையடுத்து மூன்று பிரதேச சபைகளிலும் ஆட்சியமைக்கவுள்ள தமிழ் தேசியக்கூட்டமைப்பு தவிசாளர்கள், உபதவிசாளர்கள் ஆகியோரை நியமித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய மூன்று சபைகளையும் கைப்பற்றிக் கொண்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மூன்று சபைகளிலும் ஆட்சியமைக்கவுள்ளது.

இந்நிலையில் மூன்று சபைகளுக்குமான தவிசாளர்கள், உபதவிசாளர்களை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இதன்படி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கொள்கை பரப்புச் செயலாளர் அருணாசலம் வேழமாலிகிதன் கரைச்சிப்பிரதேச சபையின் தவிசாளராகவும் உபதவிசாளராக கரைச்சிப்பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் செயற்பாட்டாளருமான சின்னையா தவபாலன் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

முழங்காவில் தேசிய பாடசாலையின் பதில் அதிபரும் சமாதான நீதவானுமான சிவகுமாரன் சிறிரஞ்சன் பூநகரி பிரதேசசபையினுடைய தவிசாளராகவும் இலங்கை தமிழரசுக்கட்சியின் செயற்பாட்டாளர் அருணாசலம் ஐயம்பிள்ளை உபதவிசாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். பல்லைக்கழக முகாமைத்துவபீட கற்கையை பூர்த்தி செய்து தற்போது சட்டத்துறையில் கல்வி கற்று வருபவரும் இலங்கை தமிழரசுக்கட்சியின் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் அணியின் தலைவர் சுப்பிரமணியம் சுரேன் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளராகவும் கட்சியின் செயற்பாட்டாளரும் சமூக சேவையாளருமான முத்துக்குமார் கஜன் உப தவிசாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (2-315)

# ஈரான் கடற்படையினரின் கப்பல்கள் இலங்கையில்



(கொழும்பு)

ஈரான் நாட்டின் பயண்டோர் (Bayandor), நக்டி (Nagrdi) மற்றும் ரொன்ப் (Tonb) ஆகிய மூன்று கடற்படை கப்பல்கள் இலங்கைக்கான நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டுள்ளன.

கொழும்பு துறைமுகத்தை நேற்று முன்தினம் வந்தடைந்த இந்தக்கப்பல்களை கடற்படையினர் வரவேற்றனர்.

குறித்த கப்பலில் ஈரான் கடற்படை உயர் அதிகாரிகள் உள்ளிட்ட கடற்படையினர் வருகை தந்துள்ளனர்.

இங்கு தரித்து நிற்கவுள்ள காலப்பகுதியில் இலங்கை கடற்படையினர் ஏற்பாடு செய்துள்ள பல்வேறு கலாசார நிகழ்வுகளில் இவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

நாளை திங்கட்கிழமை இந்த கப்பல்கள் நாட்டை விட்டுறப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# மீன்பிடித்துறை அமைச்சிலும் மாற்றம் இருக்கும்-அமரவீர

(கொழும்பு)

அமைச்சரவையில் மாற்றங்கள் வரும் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், என்னென்ன மாற்றங்கள் இடம்பெறலாம் என்பது குறித்து, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர ஒரு சிறு ஊகம் ஒன்றைத் தெரிவித்துள்ளார்.

மட்டக்குளியில் நேற்று நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர், அமைச்சரவையில் அடுத்த வாரம் மாற்றம் ஏற்படுத்தப்படும் என்றும் மீன்பிடித்துறை அமைச்சிலும் மாற்றம் இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார். (இ-10)



# யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி உபஅதிபர் இராமலிங்கம்- அருணகிரிவாசன் அவர்களின் மணிவிழாச் சிறப்புமலர்–18.02.2018



### இணுவில் கந்தசுவாமி கோவில் பிரதம குருவின் ஆசிச்செய்தி

சைவமும் தமிழும் கலைகளும் சிறந்து விளங்கும் இணுவையில் பல அறிஞர்ப் பெருமக்கள் வாழ்ந்து சிறப் படைந்திருக்கிறார்கள். அச் சிறப்பில் இணுவை இராம லிங்கம் அருணகிரிவாசன் மணிவிழாக் காண்பது அகமகிழ்வைத் தருகின் றது.இ.அருணகிரிவாசன் அவர்கள் எளிமையானவர். அமைதி நிறைந்த பண்புடையவர். சிறந்த ஆசிரியராகவும், சிறந்த பிரதி அதிபராகவும் கடமையாற்றி பெருமையும் நற்சிறப்பும் அடைந்தவர். இணுவில் கந்தசுவாமி கோவிலின் தர்மகர்த்தா சபையின் நிரந்தரமான உறுப்பினர். இத்த கைய பெரியாரின் மணிவிழா சிறப்ப டையவும், பல விழாக்கள் கண்டு இணுவை மண்ணுக்கும் பல பணிகள் ஆற்றி பல்லாண்டுகாலம் வாழ இணுவில் கந்தசுவாமியின் திருவருள் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

**உருத்திரமூர்த்திக் குருக்கள் அபராஜிதக் குருக்கள்**
**பரம்பரைப் பிரதமகுரு, இணுவில் கந்தசுவாமி கோவில்.**



### ஆசிச்செய்தி

ஆசிரியப் பெருந்தகைகள் ஓர் நடமாடும் தெய்வ மாகும். ஒரு மாணவனுடைய வாழ்க்கையின் ஆரம்ப வழிகாட்டல் முதல் மாணவனுடைய கல்வி பூர்த்தி வரை அரும்பாடு படுபவர்கள் ஆசிரியர்கள். தொடர்ந்து 27 ஆண்டுகளாக தனது சேவையைச் செய்து பாடசாலையின் வளர்ச்சியில் அரும்பாடுபட்டு பல மாணவர்களை கல்விமான்களாக மாற்ற பாடுபட்டு அயராது உழைத்த உத்தமபுருஷர் திருவாளர் இ.அருணகிரி வாசன் ஆவார். அவருடைய சேவைக்கு மணிவிழா ஓர் மிகவும் முக்கிய மான காரியம் ஆகும். அவரின் சேவையைப் பாராட்டுவதோடு அவர் எதுவித குறையும் இல்லாமல் பல்லாண்டு, பல்லாண்டு காலம் வாழ வாழ்த்தி விழாவை ஏற்பாடு செய்த குழுவினருக்கும் எம் பெருமானுடைய கருணை என்றும் கிட்ட ஆசி கூறுகின்றேன்.

**சிவஸ்ரீ.சாமி.ஸ்ரீஸ்கந்தராஜக்குருக்கள்**
**ஆதீனகர்த்தா, பிரதமகுரு, அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகர பிள்ளையார் கோவில், (உப்புமடம்) கோண்டாவில்.**



### செஞ்சொற் செல்வரின் ஆசிச் செய்தி

இணுவில் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா சபை உறுப்பினரும் சிறந்த ஆசிரியரும் நற்பண்பாளரும் கோண்டாவில் இந்துக் கல்லூரியின் வளர்ச்சியில் அயராது உழைத்த முன்னாள் உப அதிபருமான திரு.இ.அருணகிரிவாசன் அவர்களின் மணிவிழாக் குறித்து வாழ்த்துவதில் ஆனந்தமடைகின்றேன்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கற்ற இவரை சிறுபராயம் முதல் யான் நன்கு அறிவேன். அமைதியான சுபாவமுடைய இவர் மிருதங்கக் கலைகளை முறைப்படி கற்றவர். இவரிடம் கற்ற மாணவர்கள் அத்துறையில் இன்று பிரபல வித்துவான்களாக விளங்குகிறார்கள். மிகவும் பிரசித்தி பெற்ற வைத்தியர் அமரர் இராமலிங்கம் அவர்களின் மைந்தராகிய இவர் சமூக, சமயப் பணிகளில் அமைதியாகச் சேவையாற்றி வருகிறார். இவரது மணிவிழாச் சிறக்க எனது இதயபூர்வமான ஆசிகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன் தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை தலைவர், சிவபூமி அறக்கட்டளை.**



### மக்கள் மனம் கவர்ந்த பிரதி அதிபர்

உயர்திரு இராமலிங்கம் அருணகிரிவாசன் அவர்களின் மணிவிழாவுக்குத் தலைமை தாங்குவதற்கு கிடைத்த வாய்ப்பினையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இணுவில் கிராமத்திற்கு பெருமை சேர்த்த உயர்திரு இ.அருணகிரிவாசன் அவர்கள் தனது அளப்பரிய கல்விச் சேவையினால் மக்களின் மனதைக் கவர்ந்தவர் எனக் கூறினால் அது மிகையாகாது. தான் ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் கடமையாற்றிய காலத்தில் மாணவர்களின் வளர்ச்சிக்கு உழைத்ததன் மூலம் மாணவர்களின் மனதை வென்றவர் எனக் கூறுவதில் ஐயமேதுமில்லை. இவர் தனது ஆசிரிய சேவையின் மூலம் மாணவர்களிடையே மறைந்திருந்த ஆற்றல்களை இனங்கண்டு அவற்றை வெளிக்கொண்டு வருவதற்கான உத்திகளை கையாளும் ஆற்றல் கொண்டிருந்தார். இதன் காரணமாக மாணவர்களிடமும் பெற்றோர்களிடமும் நற்பெயர் சம்பாதிக்க முடிந்ததுடன் தான் கற்பித்த பாடசாலைகளில் பெரும் புகழைச் சம்பாதிக்க முடிந்தது.

உயர்திரு இ.அருணகிரிவாசன் கோண்டாவில் இந்துக் கல்லூரியில் கால் நூற்றாண்டுக்கும் மேலாகப் பணியாற்றியவர். மட்டுமன்றி அதனை ஒரு பொற்காலமாகவும் மாற்றியவர். இக் கல்லூரியில் நீண்டகாலம் பணியாற்றியதுடன் இதனை ஒரு கல்லூரியாக மாற்றுவதற்கு பெரிதும் உழைத்தவர். இவர் கல்லூரிச் சமூகத்துடன் நெருக்கமான உறவைப் பேணி வந்த காரணத்தினால் கல்லூரியின் பௌதீகவள அபிவிருத்தியிலும் ஆளணி அபிவிருத்தியிலும் அவர்களது பங்களிப்பைப் பெறுவதில் பெருவெற்றி கண்டார். நேர்க்கணிய முகாமைத்துவ சிந்தனை கொண்டவராக இவர் இருந்தமையினால் தனது பதவிக் காலத்தில் எதனையும் செய்ய முடியும் என்ற நம்பிக்கையுடன் பணியாற்றி அவற்றில் சாதனையும் படைத்தார். இதன் காரணமாக கோண்டாவில் இந்துக் கல்லூரியில் கல்விப் பெறு பேறுகளிலும் இணைச் செயற்பாடுகளிலும் முன்னணி வகிக்கும் நிலை ஏற்பட்டது.

உயர்திரு.இ.அருணகிரிவாசன் அவர்கள் கல்விச் சேவையில் மட்டுமன்றி சமூக சேவையிலும் ஆர்வம் கொண்ட ஒருவராவார். இதன் காரணமாகவே கோண்டாவில், இணுவில் ஆகிய கிராமங்களில் தொழிற்படும் பொது அமைப்புக்களில் அங்கம் பெற்றிருப்பதுடன் அவற்றின் மூலம் வறிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கும் உழைத்தும் வந்தார். குறிப்பாக கோண்டாவில் இந்துக் கல்லூரி மாணவர்கள் கல்வியிலும், விளையாட்டிலும் தேசிய ரீதியிலும் வெற்றிபெற உதவியமை அவரது ஆளுமையின் வெளிப்பாடாகும். வறிய மாணவர்கள் கல்வியைத் தொடரவும் அதில் சாதனை படைக்கவும் வழிசமைத்த பெருமை உயர்திரு இ.அருணகிரிவாசனுக்கு உண்டு. கல்வி உலகில் சாதனை படைத்த விழா நாயகர் தனது குடும்பத்தினருடன் நீடூழி காலம் இவ்வுலகில் வாழ்ந்து தொடர்ந்தும் எம் சமூகத்தின் மேம்பாட்டிற்கு உழைக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி எனது பாராட்டினையும், வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*வாழ்க வளமுடன் என வாழ்த்தும்*

**பேராசிரியர் க.தேவராஜா, தலைவர், மணிவிழாச் சபை.**



**பெயர்:** திரு.இராமலிங்கம் அருணகிரிவாசன்
**பிறப்பு:** 11.01.1958 இணுவில்
**ஆரம்பக்கல்வி:** யா/ இணுவில் மத்திய கல்லூரி
**உயர்கல்வி:** யா/ இந்துக் கல்லூரி
**ஆசிரியர் சேவை:** 04.09.1979

**சேவை விபரம்:**

திருகோணமலை/ கும்புறுப்பிட்டி மகா வித்தியாலயம்: 04.09.1979-31.01.1983
யாழ்/ பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை 01.02.1983-31.01.1985
முல்லைத்தீவு/ பாலிநகர் மகா வித்தியாலயம் 01.02.1985-17.02.1992
யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி 18.02.1992-10.01.2018
மன்னார் / முருங்கன் மகா வித்தியாலயம் 01.01.1996-04.04.1997
உப அதிபர்- யா/கோ/இந்துக் கல்லூரி:-01.08.2001
விசேட தகைமை:- மிருதங்க கலைஞர்



### துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி

இயற்கை வளமும், இறைவழிபாடும், சைவமும் தமிழும் தழைத்தோங்கும் பாரம்பரியம் மிக்கதும் இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் வளர்த்த கிராமம் இணுவில். இப்பெருமைமிக்க இணுவிலில் இராமலிங்கம் வைத்தியரின் மகனாகப் பிறந்தவர் திரு.அருணகிரிவாசன். அவருடைய மணிவிழா விற்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். 18.02.1992 ஆம் ஆண்டு தொடக்கம் 01.08.2001 வரை ஆசிரியராக வும், பின் 01.08.2001-10.01.2018 வரை பிரதி அதிபராகவும் இருந்து ஓய்வுபெறுகின்றவர். இப்பாடசாலை, கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திலிருந்து கோண்டாவில் இந்துக் கல்லூரியாக மாற்றம் பெறுவதற்கு பெரும் ஊக்கமும் எடுத்தார். பாடசாலையின் வளர்ச்சியில் பெரிதும் அக்கறை எடுத்தார்.

"மக்கள் நலன் பேணும் அமைப்பின்" ஏற்பாட்டில் உருவாக்கப்பட்ட மணிவிழாச்சபை அவருக்கு மணிவிழா எடுப்பது சந்தோசமாக உள்ளது. அவர் ஆரோக்கியத்துடன் நீடூழி வாழவேண்டுமென நொச்சியோலைக் கந்தனைப் பிரார்த்தித்து வேண்டுகின்றேன்.

**பேராசிரியர் இ.விக்னேஸ்வரன், துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



### உயர்ந்த உள்ளம்

யாழ்.கோண்டாவில் இந்துக் கல்லூரி உப அதிபர் திரு.இ.அருணகிரிவாசன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைவதோடு திரு.இராமலிங்கம் அருணகிரிவாசன் அவர்கள் சிறந்த ஆளுமைமிக்க நற்பண்புகள் நிறைந்த அனைவருக்கும் முன்மாதிரியான ஒரு மனிதர். அவர் எப்போதும் எளிமையான சுபாவத்துடன் மற்றவர்களிடத்தில் அன்பாகவும் பண்பாகவும் பழகக்கூடிய சமூகத்தின் மீதும் கல்வித்துறை மீதும் அளப்பரிய பற்றுறுதி கொண்ட ஒரு சமூக சேவையாளன்.

அவர் கோண்டாவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகவும் உப அதிபராகவும் கடமையாற்றும் போது பாடசாலையின் கூடுதலான தேவைகளை அயலில் உள்ள எங்களைப் போன்றவர்களின் உதவியுடன் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். இவ்வாறு ஊரில் உள்ளவர்கள், வெளிநாடுகளில் உள்ளவர்களைத் தொடர்பு கொண்டு பாடசாலையின் தேவைகளை நிறைவேற்றி மாணவர் இடையூறின்றி கல்வி கற்க சகல வசதிகளையும் செய்து கொடுத்த திரு.இ.அருணகிரிவாசன் சிறந்த கணித ஆசானும் கூட. அவரிடம் கல்வி கற்ற பல மாணவர்கள் இன்று உயர்ந்த நிலையில் உள்ளனர்.இவ்வாறு சமூகத்துக்கு சிறந்த சேவையாற்றிய திரு. இ.அருணகிரி வாசன் அவர்களும் அவரின் மனைவி, பிள்ளைகளும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

**செல்வி ஞானலோஜினி சிவஞானம்**
**சட்டத்தரணியும் பிரபல நொத்தாரிசும், கோண்டாவில்.**

**இடம்: ஆசிமட அரசடி விநாயகர் ஆலய மணி மண்டபம், இருபாலை வீதி, கோண்டாவில்.**
**காலம்: 18.02.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி**
**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**மணிவிழாச் சபையினர்**

(சு-1639)



### அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி

யாழ்.கோண்டாவில் இந்துக் கல்லூரி உப அதிபர் திருவாளர் இ.அருணகிரிவாசன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். நல்லாசிரியராகவும், உப அதிபராகவும் சிறப்பாகக் கடமையாற்றி கோண்டாவில் இந்துக் கல்லூரியின் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் அயராது பாடுபட்டு கல்லூரியை வளப்படுத்திய ஒருவராக அறியப்படுகின்றார்.இவ் நல்லாசிரியர் தனது ஆரம்பக்கல்வியை இணுவில் மத்திய கல்லூரியில் கற்றுக்கொண்டவர். நல்லாசிரியராய் திருகோணமலை கும்புறுப்பிட்டி மகா வித்தியாலயம், யாழ்.பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, முல்லைத்தீவு பாலிநகர் மகா வித்தியாலயம், யாழ்.கோண் டாவில் இந்துக்கல்லூரி, மன்னார் முருகன் மகா வித்தியாலயம் ஆகிய கல்லூரிகளில் சிறந்த சேவையாற்றிய பெருமைக்குரியவர். கோண்டா வில் இந்துக் கல்லூரியில் உப அதிபராய் கல்லூரியின் வளர்ச்சியில் சிறப்பாகப் பணியாற்றியவர். சிறந்த மிருதங்கக் கலைஞராகத் திகழும் திரு.இ.அருணகிரிவாசன் அவர்களது சேவையைப் பாராட்டி மணிவிழா எடுப்பது சிறந்த சேவையாளரை சமூகத்தில் வெளிப்படுத்துவதும் எமது தலையாய கடமையாகும்.

இந்த வகையில் மணிவிழா ஏற்பாடுகளைச் செய்யும் மணிவிழாச் சபையினரை வாழ்த்துவதோடு மணிவிழா நாயகனது ஓய்வுக்காலம் சிறக்கவும், மணிவிழா மலர் சிறப்பாக மலர்ந்து அவரின் சிறப்புக்களை விளக்கிடவும் என் வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்கின்றேன்.

**திரு.நா.வேதநாயகன் அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**



### பிரதிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

கோண்டாவில் இந்துக் கல்லூரியின் பிரதி அதிபராக நீண்ட காலம் கடமையாற்றி ஓய்வு பெறும் எனது அன்புக்குரிய திரு.இ.அருணகிரிவாசன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்து தெரிவிக்கக் கிடைத்த சந்தர்ப்பத்தை எண்ணி மகிழ்வடைகின்றேன். கோண்டாவில் இந்துக் கல்லூரியின் இன்றைய வளர்ச்சி மற்றும் அழகு அமைப்பு யாவும் திரு.இ.அருணகிரிவாசனின் வியர்வையும் இரத்தமும் இணைந்தது என்றால் எவரும் மறக்க முடியாது.

ஒரு தனிமனிதனாய் நின்று சமூகத்துடன் சிறப்பான உறவுகளை வைத்து மாணவர்களின் நலனே தன் வாள்நாள் மூச்சு என்ற எண்ணத்துடன் பாடசாலையின் ஒவ்வொரு பௌதீக வளர்ச்சியிலும் அவரின் பங்கு அளப்பரியது. அவரது ஆலோசனைப்படி பாடசாலைத் தேவைகளை நிறைவு செய்து தந்தவர்கள் என்றும் மறக்க முடியாத வர்கள்.

கோண்டாவில் இந்துமகா வித்தியாலயத்தை கோண்டாவில் இந்துக் கல்லூரியாக மாற்ற சமூகத்துக்கு தூண்டுதலை அளித்த கல்வியாளன் திரு.இ.அருணகிரிவாசன் என்றால் இன்றைய அதிபர்கள், ஆசிரியர்கள் மறுக்க முடியாத உண்மையே! பாடசாலையின் காணியை அபகரித்தவர்களிடம் இருந்து பெறுவ திலும் சரி, கல்லூரியின் வடக்குப்பக்கக் காணியைக் கொள்வனவு செய்வதிலும் சரி அவர் காட்டிய அக்கறை, செலவிட்ட நேரம் என்பன மதிப்பிட முடியாது.

கல்லூரியின் வடக்குப்பக்கக் காணியை மைதானமாக மாற்ற இடையூறாக இருந்த கட்டடங்களை அகற்ற திணைக்கள அதிகாரிகளிடம் அவர் வந்து திரிந்த நாட்கள் எண்ணில் அடங்காது. அதில் வெற்றியும் கண்டவர். கல்லூரியின் முன்வாயிலை அமைப்பதில் அவர் காட்டிய அக் கறை பாராட்டுக்குரியது. அயராது அதற்குரிய நிதியினை சட்டத்தரணி செல்வி ஞானலோஜினி சிவஞானம் அவர்களிடம் தொடர்புகொண்டு அமைத்தமை எவராலும் முடியாத காரியமாகும்.

திரு.இ.அருணகிரிவாசன் அவர்கள் செய்த சேவையின் உயர் தன்மையை அவரது மணிவிழாவிற்கு உதவும் அன்பர்கள் பெருமைப் படுத்துவதில் இருந்து அறிந்து கொள்ள முடியும்.

அவர் ஓய்வுக்காலம் சிறக்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

**திரு.சி.மாணிக்கராஜா**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.**



### சிறந்த கல்விக் கொடையாளி

யாழ்.கோண்டாவில் இந்துக்கல்லூரி உப அதிபர் திரு.இராமலிங்கம் அருணகிரிவாசன் அவர்களின் மணிவிழாச் சபையின் ஏற்பாட்டாளர் மற்றும் செயலாளர் என்பதில் மனமகிழ்வு அடைவதோடு பக்தியின் பிறப்பிடமாகவும் நல்ல கல்விமான்களை உருவாக்கிய ஊரான இணுவிலில் பிறந்த திரு.இ.அருணகிரிவாசன் அவர்கள் சிறந்த தெய்வ பக்தியும், மற்றவர்களை பண்புடன் மதிக்கின்ற நற்குணமும் தான் சேவையாற்றுகின்ற துறைக்கும், அந்தப் பகுதிக்கும் விசுவாசமான ஒரு ஆளுமைமிக்க சிறந்த கல்விக் கொடையாளியும் கூட. இவர் கோண்டாவில் இந்துக் கல்லூரிக்கு ஆசிரியராக வருகை தந்த காலம் முதல் உப அதிபராகி ஓய்வு பெறும் வரை இந்தப் பாடசாலையில் இவர் செய்த கல்விச்சேவை மற்றும் பாடசாலையின் பௌதீக வளர்ச்சிக்கு ஆற்றிய சேவை என்பவற்றை குறிப்பிடுவது என்றால் இந்த மணிவிழா மலரே போதாது. அந்தளவுக்கு இக் கல்லூரிக்கு அவரது அர்ப்பணிப்பு, சேவை என்பன உயர்ந்துள்ளது.

ஆரம்பத்தில் யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயமாக இருந்த பாடசாலையினை அதன் அடிக்கட்டுமான தேவைகளை வெளிநாடுகளில் உள்ள பல பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகள் ஊடாக நிறைவேற்றிக் கொடுத்தார்.(உ-ம்: வகுப்பறை சீர் செய்தல், அரங்கு அமைத்தல், பாடசாலை முன் முகப்பு அமைத்தல் போன்ற சிறிய உதாரணங்களைக் குறிப்பிடலாம்). இன்று இப்பாடசாலை கல்லூரியாக மாறும்வரை அவரது சேவைகளை விரல் விட்டு எண்ணிவிட முடியாது. அவ்வாறு ஒரு சிறந்த சேவையாளர்.

திரு.இ.அருணகிரிவாசன் அவர்கள் இணுவில் கந்தசுவாமி ஆலய ஆயுட்கால தர்மகர்த்தா உறுப்பினர் என்பதுடன் எமது மக்கள் நலன்பேணும் அமைப்பின் போஷகராக ஐந்து வருடங்களுக்கு மேலாக பதவி வகித்து வருவதுடன் மாணவர்களின் கல்வி வளர்ச்சிச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வரும் சிறந்த கல்விக் கொடையாளியான அவரும், அவரின் மனைவி, பிள்ளைகள் எல்லோரும் பல்லாண்டு பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

**திரு.செல்லத்துரை ஜெகபாலன் செயலாளர், மணிவிழாச்சபை, தலைவர், மக்கள் நலன் பேணும் அமைப்பு.**

# காணாமற்போனோருக்கு நீதிகோரி ஆரம்பித்த போராட்டத்திற்கு ஒரு வருடம் பூர்த்தி

## கிளிநொச்சியில் அனைவரையும் அணி திரளுமாறு அழைப்பு

(கிளிநொச்சி)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நாளை மறுதினம் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் நடத்தவுள்ள மாபெரும் போராட்டத்திற்கு அனைத்து தரப்பினரும் பூரண ஆதரவை வழங்கி ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் காத்திரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என சர்வதேச நாடுகளிற்கு அழுத்தத்தை வழங்க வேண்டுமென அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா. சத்திவேல் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளுக்கு அரசிடம் நீதி கேட்டு கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி கிளிநொச்சியில் ஆரம்பித்த போராட்டம் ஒரு வருடமாக தொடரும் நிலையில் அரசிடமிருந்து நேர்மையான பதில் இதுவரை கிடைக்கவில்லை. இச் சூழ்நிலையில் தமது போராட்டத்தின் ஒரு வருட பூர்த்தி தினமான எதிர்வரும் 20ஆம் திகதி .கிளிநொச்சியில் முற்பகல் 10 மணிக்கு கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை நடத்தவுள்ளனர்.

இப்போராட்டத்திற்கு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு தமது முழுமையான ஆதரவை வழங்குவதோடு தமிழ் மக்களின் அரசியலில் ஆர்வமுள்ள அனைவரும் பங்கேற்று அரசிற்கும் சர்வதேசத்திற்கும் அழுத்தம் கொடுக்க இணையுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நல்லாட்சி அரசாங்கமும் தமது சிங்கள பௌத்த அரசியலை பாதுகாத்துக் கொள்வதற்காக இராணுவத்தை பாதுகாக்க யுத்தக் குற்றவாளிகளென எவரையும் நீதிமன்றில் நிறுத்த மாட்டோம் எனத் தொடர்ச்சியாக கூறி தமது இனவாத முகத்தை வெளிப்படுத்தி வருகின்றது.

இவ்வாண்டு நடைபெற்ற சுதந்திர தினவிழாவிற்கு எதிர்ப்பு தெரிவித்து பிரித்தானியாவில் இலங்கை தூதரகத்திற்கு முன்பாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது அங்கு நின்ற பாதுகாப்பு ஆலோசகர் பிரிகேடியர் பிரியங்கா பெர்னாண்டோ ஆர்ப்பாட்டக்காரர்களைப் பார்த்து கழுத்தை அறுப்பேன் எனச் சைகை மூலம் கொலை மிரட்டல் விடுத்துள்ளார்.

அவரைப் பாதுகாப்பதற்கு அரசும் எதிர்க்கட்சியும் ஒன்றித்து செயற்படுவதை நாம் அவதானித்தோம். இது தான் சுதந்திர இலங்கையின் நிலைமை. காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி என்பது அரசியல் பிரச்சினைக்கான தீர்விலேயே முழுமையாக தங்கியுள்ளது.

ஆதலால் இலங்கை அரசிற்கும் ஜெனிவா கூட்டத் தொடரில் சர்வதேசத்திற்கும் அழுத்தம் கொடுக்கும் முகமாக கிளிநொச்சியில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் தமிழ் தேசியத்தை வழியுறுத்தி கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வாக்களித்த அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு வேண்டுகோள் விடுக்கின்றது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-4-9)




# 18 இலட்சம் ரூபா செலவில்

# பிரதான வீதிகளின் புனரமைப்பு ஆரம்பம் குறைபாடுகள் இருப்பின் அறிவிக்குக

## கரைச்சி பிரதேச சபை செயலாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் நிதியொதுக்கீடான 18 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா மூலம் பாரதிபுரம் கிராமத்தில் குடியிருப்பு பிரதான வீதிகள் இரண்டின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருவதாக கரைச்சி பிரதேச சபையின் செயலாளர் கணேசன் - கம்சநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட பாரதிபுரம் கிராமத்தின் குடியிருப்பு பகுதியில் உள்ள முதலாம் குறுக்கு வீதி 7 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா செலவில் ஜே.சி.பி. இயந்திரத்தின் உதவியுடன் வீதியின் இரு மருங்கும் துப்புரவு செய்யப்பட்டு 400 மீற்றர் தூரத்திற்கு கிடங்குகளுக்கு மண் இடப்பட்டு செப்பனிடப்படுவதுடன், வீதியை ஊடறுத்து கழிவு நீர் துருசுக்கள் வைத்து (கல்வெட்டு) வீதி புனரமைப்பு செய்யப்படுகின்றது.

இதேபோன்று, பாரதிபுரம் செபஸ்ரியார் ஆலய வீதியானது 11 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் ஜே.சி.பி. இயந்திரத்தின் உதவியுடன் வீதியின் இரு மருங்கும் துப்புரவு செய்யப்பட்டு. வீதியை ஊடறுத்து கழிவு நீர் செல்லும் வகையில் துருசுக்கள் அமைப்பதுடன், (கல்வெட்டு) வீதியில் மிகவும் மோசமான முறையில் பாதிக்கப்பட்ட சுமார் 300 மீற்றர் தூரத்திற்கு கிரவல் மண் இடப்பட்டு புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த இரண்டு வீதிகளின் புனரமைப்புக்களும் பாரதிபுரம் கிராமத்தின் பொது அமைப்புக்களின் ஊடாக, கரைச்சிப் பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் கண்காணிப்பின் கீழ் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில், புனரமைப்பு பணிகளில் ஏதாவது குறைபாடுகள் காணப்படின் கிராம மக்கள் தனக்கு நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ அல்லது 021 228 5701 அல்லது 070 291 9200 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவோ தொடர்பு கொண்டு தகவல்களையும் மற்றும் முறைப்பாடுக்ளையும் பதிவு செய்ய முடியும் என்றும் அவர் கேட்டுள்ளார். (2-15)

# மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரிடம் ரி-56 ரக துப்பாக்கி, 611 ரவைகள் மீட்பு

## நெடுங்கேணியில் சம்பவம்

(குருமன்காடு)

வவுனியா நெடுங்கேணி பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரிடம் இருந்து ரி-56ரக துப்பாக்கியும், 611 ரவைகளையும் மீட்டுள்ளதாக நெடுங்கேணி பொலிஸார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் வீதி கடமையில் நின்ற போக்குவரத்து பொலிஸார் அவ்வீதியால் பயணித்த மோட்டார் சைக்கிளை இடை மறித்து சோதனை செய்த போதே குறித்த ரி-56 ரக துப்பாக்கியும், ரவைகளும் மீட்கப்பட்டன.

நெடுங்கேணி மாறாயிலுப்பை நாகதம்பிரான் கோவிலடியில் போக்குவரத்துப் பொலிஸார் வீதியால் சென்ற மோட்டார் சைக்கிளை இடை மறித்து சோதனை மேற்கொண்ட போது ஒரு பையினுள் ரி-56 ரக துப்பாக்கியும், 611 ரவைகளும்இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற வவுனியா, குளவிசுட்டான் பகுதியைச் சேர்ந்த (வயது-45)என்ற நபரை கைது செய்துள்ளதாகவும், இதையடுத்து அவரது வீட்டிலும் பொலிஸார் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் தெரிவித்துள்ள் நெடுங்கேணிப் பொலிஸார் குறித்த நபரை வவுனியா நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை இந்தத் துப்பாக்கி உள்ளூரில் தயாரிக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படுவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (2-250-15)

# பெண் நோயியல் மருத்துவப் பிரிவு அமைப்பது தொடர்பில் கலந்துரையாடல்

## கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நடைபெற்றது

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் நெதர்லாந்து அரசாங்கத்தின் நிதியுதவியுடன் நவீன வசதிகளைக் கொண்ட பெண் நோயியல் மருத்துவப் பிரிவினை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் நடைபெற்றுள்ளது.



கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மக்களின் மருத்துவத் தேவையையும் முல்லைத்தீவு மாவட்டத்தின மாந்தை கிழக்கு, துணுக்காய், புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் ஆகிய பகுதிகளைச்சேர்ந்த மக்களுக்கான மருத்துவத்தேவையை வழங்கும் ஒரேயொரு வைத்தியசாலையாக காணப்படுகின்றது.

இந்நிலையில் எதிர்கால நன்மை கருதியும் வைத்தியசாலையின் தேவைப்பாடுகள் கருதியும் 2003ஆம் ஆண்டு தற்போது வைத்தியசாலை அமைந்துள்ள வளாகத்தில் கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கபபட்டு வைத்தியசாலை தற்போது செயற்பட்டு வருகின்றது.

கடந்த 2003ஆம் ஆண்டு மூன்று கட்டங்களாக இதன் கட்டுமானப்பணிகளை முன்னெடுப்பதாக திட்டங்கள் தயாரிக்கப்பட்டு முதற்கட்டப் பணிகள் மட்டுமே முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

அதிக தேவைகளைக் கொண்ட இவ் வைத்தியசாலையின் இரண்டாம் கட்டப்பணிகளை முன்னெடுக்க வேண்டிய தேவையிருப்பதாக பல்வேறு தரப்புக்களும் கோரி வருகின்றனர்.

இதேவேளை நெதர்லாந்து அரசின் 950 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் ஊடாக அமைக்கப்படவுள்ள பெண்நோயியல் மருத்துவப்பிரிவினை கிளிநொச்சி பொதுவைத்தியசாலை வளாகத்தில் அமைப்பதற்கான முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்ட நிலையில் குறித்த வைத்தியசாலையை அமைப்பதற்குரிய இடத்தினை வைத்தியசாலைக் காணியில் அமைப்பதா? அல்லது வேறு இடத்தில் அமைப்பதா? என்பது தொடர்பிலும் இது கிளிநொச்சி பொதுவைத்தியசாலையில் இரண்டாம் கட்ட அபிவிருத்தியாகக் கருதப்படுமா? என்பது தொடர்பில் பல்வேறு தரப்புக்கள் இடையில் பல்வேறுபட்ட கருத்துக்கள் காணப்படுகின்றன.

இந்நிலையில் இது தொடர்பான கலந்துயைாடல் ஒன்று நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணியளவில் கிளிநொச்சி பொதுவைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றுள்ளது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஞா.குணசீலன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சு.பசுபதிப்பிள்ளை, ப.அரியரத்தினம், த.குருகுலராஜா, வை.தவநாதன் மற்றும் சுகாதார அமைச்சினுடைய செயலாளர், கிளிநொச்சி பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி, மாவட்ட பொது வைத்தியசாலையினுடைய பொறுப்பு வைத்திய அதிகாரி மற்றும் வைத்தியர்கள், நோயாளர் நலன்புரிச்சங்க நிர்வாகத்தினர், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-315)

# வருடாந்த பொதுக்கூட்டமும் இணையத்தளம் ஆரம்பிப்பும்

(பனிக்கன்குளம்)

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் பழைய மாணவர் சங்க இணையத்தளம் ஆரம்பித்துவைக்கும் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை பாடசாலையின் ஜயாத்துரை மண்டபத்தில் காலை 9.30மணியளவில் இடம்பெறவுள்ளதாக பழைய மாணவர் சங்க செயலாளர் எஸ்.சுஜன் தெரிவித்துள்ளார்.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய அதிபர் ரி.அமிர்தலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள இக்கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறவுள்ளதால் அனைத்து பழைய மாணவர்களையும் கலந்துகொண்டு பாடசாலையின் வளர்ச்சியில் பங்கேற்குமாறும்தவறாது பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள் கலந்துகொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (2-281)

ஆடு நனைகிறது என்று
ஓநாய் அழுததாம் –தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்களின் அவலத்தை அமெரிக்கா புரிந்துகொள்ள வேண்டும்

விடுதலைப் போராட்டம் நடந்த காலத்திலும் சர்வதேச நாடுகள் எங்களை காப்பாற்றும் என்ற நம்பிக்கை தமிழ் மக்களிடம் இருந்தது.

போர் நடந்த போதும் போருக்கு பின்பும் சர்வ தேச நாடுகள் எங்களை கைவிடாதென்பதே தமிழ் மக்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.

ஆனால், சர்வதேச நாடுகள் தமிழ் மக்களை ஏமாற்றி விட்டன என்பது தான் உண்மை.

அண்டை நாடான இந்தியா தமிழ் மக்கள் மீது கடும் கோபம் கொண்டுள்ளது. இலங்கை அரசுடன் சேர்ந்து போகின்ற, தமிழ் மக்களின் உரிமையை வலியுறுத்தாத தமிழ் அரசியல் தலைமையே தமக்குத் தேவையென்று அந்த நாடு நினைக்கின்றது.

இஃது ஒருபுறம் இருக்க, அமெரிக்காவின் நினைப்பெல்லாம் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி நிலைக்க வேண்டும். அதிலும் ரணில் விக்கிரமசிங்கவே பிரதமராக இருக்க வேண்டும் என்பது தான்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கான ஆதரவு தென்பகுதியில் அதிகரித்த போது, முதலில் அதிர்ந்து போன நாடு அமெரிக்கா என்றே சொல்லவேண்டும்.

அமெரிக்காவை பொறுத்தவரை ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நீடிக்க வேண்டும். அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்க வேண்டும் என்பதாகும்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நிலைக்க வேண்டும் என விரும்புகின்ற அமெரிக்கா, ஈழத் தமிழ் மக்களுக்கான எதிர்காலம் பற்றியோ அவர்கள் எதிர் நோக்கும் அவலம் பற்றியோ சிந்திப்பதாக இல்லை.

இஃது தமிழ் மக்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தையும் மனப் பதற்றத்தையும் தந்துள்ளது.

உண்மையில் இலங்கை மீதான அமெரிக்காவின் கரிசனை என்பது தமிழ் மக்களுக்கான உரிமையைப் பெற்றுக்கொடுப்பதாகவே இருக்க வேண்டும்.

ஆனால் அமெரிக்காவோ, மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஆட்சிக்கு வருவதை தடுத்தால் அது போதும் என்று நினைக்கிறது.

அமெரிக்காவின் இராஜதந்திர முயற்சிகளை முறியடித்துக்கொண்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சியைப் பிடித்தால், தமிழ் மக்களின் எதிர்காலம் என்னவாகும் என்று ஒரு கணம் ஏனும் அமெரிக்கா சிந்திப்பதாகத் தெரியவில்லை.

ஆக, அமெரிக்காவின் இந்த நிலைப்பாடு தமிழ் மக்களுக்கு பாதகமாகவே அமையப் போகிறது.

ஐயா! ஒவ்வொரு ஆட்சி மாற்றத்தின் போதும் தமிழ் மக்கள் ஏங்கி ஏங்கி சாகின்றனர்.

முன்னாள் போராளிகளின் வாழ்வு ஏக்கத்திலேயே கடந்து போகிறது.

இந்த மோசமான நிலைமைக்கு முற்றுப் புள்ளி வைப்பதாக இருந்தால் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு முடிவு கட்டு, வன்னி பெரும் நிலப்பரப்பில் நடந்த போர்க்குற்றங்களுக்கு சர்வதேச விசாரணையை நடத்து என்பதை அமெரிக்கா செய்வதே ஒரே வழியாக இருக்கும்.

# வெளிநாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்டவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக படகு மூலம் அவுஸ்திரேலியா சென்ற இலங்கையர் ஒருவர் நேற்று இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார்.

அவ்வாறு நாடு கடத்தப்பட்ட இலங்கையர் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலைய குற்ற விசாரணை திணைக்கள அதிகாரிகளினால் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் மாத்தளை, களுதேவ பிரதேசத்தை சேர்ந்த 24 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

அவர் கடந்த 2012ஆம் ஆண்டு 44 பேருடன் சட்ட விரோதமாக அவுஸ்திரேலியா சென்றுள்ளதாக ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நேற்று பிற்பகல் மினுவாங்கொட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ம)

# மகிந்தவின் புகைப்படத்தை அலுவலகத்தில் பொருத்திய நபர் பணி இடை நீக்கம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புகைப்படத்தை அரச அலுவலகத்தில் பொருத்திய நபர் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த உள்ளூராட்சி தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கட்சி பெற்றுக் கொண்ட வெற்றியை முன்னிட்டு, மகிந்த ராஜபக்ஷவின் புகைப்படத்தை பொருத்திய நபர் ஒருவர் தனது பணியில் இருந்து இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அரசாங்கத்திற்கு சொந்தமான இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன தலைமையகத்தில், மகிந்தவின் புகைப்படத்தை பொருத்தியமையினால் இலங்கை சுதந்திர ஊழியர் சங்க தலைவரே இவ்வாறு இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன தலைமையகத்தில் பணி புரியும் ஊழியர்களின் கோரிக்கைக் கமைய, இலங்கை சுதந்திர ஊழியர் சங்க தலைவர் கமல் கோமசினால் மகிந்தவின் புகைப்படம் பொருத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன ஊழியர் சபையினால் அந்த புகைப்படத்தை நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எப்படியிருப்பினும் சங்க தலைவர் கமல் கோமசிற்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் விசாரணைகள் நிறைவடையும் வரை மாத்திரம் இவ்வாறு அவர் இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். (ம)

# முச்சக்கர வண்டி விபத்தில் குடும்பஸ்தர் படுகாயம்

(கரணவாய்)

முச்சக்கர வண்டி ஒன்று விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நெல்லியடி நகருக்கு அருகாமையில் இடம் பெற்ற இவ் விபத்தில் புலோலி தெற்கைச் சேர்ந்த சின்னையா சதானந்தன் என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தவராவார்.

கனரக வாகனம் ஒன்றுக்கு இடம் கொடுக்க முற்பட்டபோது அருகில் உள்ள கம்பம் ஒன்றுடன் முச்சக்கர வண்டி மோதி விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-60)

# அரசியல் நெருக்கடி தொடர்பில் உரிய தீர்வு எடுக்க வேண்டும்

## சுமங்கல தேரர் வேண்டுகோள்

(கொழும்பு)

அரசியலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகள் குறித்து, விரைவில் உரிய தீர்வை எடுக்கவேண்டும் என மல்வத்து பீடத்தின் மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் நாட்டின் தற்போதைய அரசியல் மோசமான நிலைமையில் சென்று கொண்டிருக்கின்றது, எனவே, இதற்கு உரிய தீர்வை விரைவாக எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

உரிய தீர்வை மேற்கொள்ள தவறும் பட்சத்தில், நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படுவதோடு தற்போதைய நிலையில் ஸ்ரீலங்கா அபாய கட்டத்தை நோக்கி சென்று கொண்டிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு கடந்த 2015 ஆம் ஆண்டு, அரசாங்கம் நாட்டு மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்பதோடு,

அதனை செய்யாமையின் காரணமாகவே தேர்தலில் தோல்வியை சந்திக்க நேர்ந்துள்ளது எனவும் மல்வத்து பீடத்தின் மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் அந்த கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ம)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### மரணத்திற்குப்பின் செய்யவேண்டியவை?

ஒரு மனிதன் உயிருடன் இருக்கும் போது அவனுக்குச் செய்ய வேண்டியதை விட அதிகமான காரியங்களை அவன் இறந்த பின்பு செய்ய வேண்டும். அவன்தான் இறந்து விட்டானே. அத்தோடு எல்லாம் முடிந்து விட்டதல்லவா? அதாவது மரணத்துடன் எல்லாம் முடிந்து விட்டது. இனி ஒன்றும் செய்வதற்கில்லை என்று சிலர் நினைக்கக்கூடும். இது சரியல்ல.

மரணத்திற்குப் பின் செய்யவேண்டிய காரியங்கள் ஏராளம் உண்டு. மரணத்திற்குப் பிந்திய கர்மங்களைச் செய்யாமல் இருப்பதால் அதைச் செய்ய வேண்டியவர்களுக்கும் இறந்து போன ஆத்மாவிற்கும் பயன் கிடைக்காது என்பது மட்டுமல்ல துயரங்களும் ஏற்படும். எனவே மரணத்திற்குப் பிந்திய கர்மங்கள் அனைத்தையும் செய்யவேண்டும்.

சரீரத்தை விட்டுப் பிரிந்த ஆத்மா பிரேதம் ஆகிறது. அது அங்குமிங்குமாகச் சுற்றித் திரியும். ஒரு வருடத்திற்குப் பின்பே அது மேல் உலகிற்குச் செல்லும். அதற்குள் அனைத்துக் கர்மங்களையும் செய்து முடித்துவிட்டால் அந்த ஆத்மா மேல் உலகில் பிரவேசிக்க முடியும். இல்லையென்றால் அது பிரேதமாக முக்தி கிடைக்காமல் அலைந்து திரிந்து தீங்குகளை விளைவிக்கும். அது கர்மம் செய்ய வேண்டியவனுக்குத் தொல்லைகள் தரும். ஆபத்தை ஏற்படுத்தும் பேய் பிடித்து ஆட்டும். அது அமைதியின்மைக்குக் காரணமாகும்.

ஈமக்கிரியை முடிந்தால் அந்த ஆத்மா தனது முன்னோர்களுடன் சேரும். பிரேதம் முக்தி அடைவதற்கான கர்மங்களைச் செய்யவில்லையெனில் அந்த ஆத்மா பிரேதமாகவே சுற்றித் திரியும். நான்கு சாதியினருக்கும் வெவ்வேறு முறையிலான கர்ம காரியங்கள் உண்டு. ஈமக்கிரியைகள் செய்வதுடன் பிராமணர்களுக்கு தானமும் தட்சணையும் அளிக்க வேண்டும். (தொடரும்)

# வடக்கில் 66 ஆயுர்வேத வைத்தியர்கள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் உள்ள ஆயுர்வேத வைத்திய சாலைகளுக்கு 66 ஆயுர்வேத வைத்தியர்கள் நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமனக்கடிதங்களை மாகாண சுகாதார அமைச்சர் ஞா. குணசீலன் நேற்று முன்தினம் வழங்கினார். மாகாணத்தில் உள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகளில் வைத்தியர்களுக்கான வெற்றிடம் காணப்பட்ட நிலையில், மத்திய அமைச்சினால் 66 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களே என அமைச்சர் தெரிவித்தார்.

புதிதாக நியமனம் பெற்றவர்கள் வடக்கின் 5 மாவட்டங்களிலும் வெற்றிடம் உள்ள வைத்திய சாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார். மேலும் இவ்வாறு வடக்கு மாகாணத்தில் உள்ளவர்களுக்கே வடக்கில் ஆயுர்வேத வைத்தியராக வேலைவாய்ப்பை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை வவுனியா பிரதேசத்தில் கோவில் குளம், ஆச்சிபுரம், சமணன் குளம், மகாமயிலங்குளம், மருதநகர், எல்லப்ப மருதங்குளம், பெரிய கோமரசங் குளம், ஆசிக்குளம், சிதம்பர புரம், கள்ளிக்காட்டி கணேச புரம், பூந்தோட்டம் ஒரு பகுதி ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# ஹோலியின் சாதனை தொடர்கிறது; இறுதிப் போட்டியிலும் இந்தியா வெற்றி

இந்தியா-தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையேயான ஆறாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி செஞ்சூரியனில் நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணி, களத்தடுப்பைத் தேர்வு செய்தது. தென்னாபிரிக்கா அணிக்கு மார்கிராம், அம்லா ஆகியோர் துவக்க வீரர்களாக களம் இறங்கினார்கள்.

அம்லா 10 ஓட்டங்கள் எடுத்த நிலையிலும், மார்கிராம் 30 பந்தில் 24 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வெளியேறினர்.


கடந்த போட்டிகளில் சொதப்பிய டிவில்லியர்ஸ் இந்த போட்டியில் வானவேடிக்கை நிகழ்த்துவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், 30 ஓட்டங்களில் வெளியேறி அதிர்ச்சி அளித்தார்.

டிவில்லியர்ஸ் வெளியேறிய பின்பு தென்னாபிரிக்கா அணி திணற ஆரம்பித்தது. 4 ஆவது வீரராக களம் இறங்கிய சோண்டோ மட்டும் தாக்குப்பிடித்து அரைசதம் அடித்தார்.

தொடர்ந்து விளையாடிய அவர் 74 பந்தில் 3 பவுண்டரி, 2 சிக்சருடன் 54 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

ஒரு கட்டத்தில் 151 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 7 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய தென்னாபிரிக்கா அணிக்கு 8 ஆவது விக்கெட்டுக்கு இணைந்த பெலுக்வாயோ-மோர்னே மோர்கல் ஜோடி தென்னாபிரிக்கா அணியை சரிவில் இருந்து மீட்டனர்.

இந்த ஜோடி 36 ஓட்டங்கள் சேர்த்தப்போது நிலையில் 19 பந்தில் 2 சிக்சருடன் 20 ஓட்டங்கள் எடுத்து மோர்கல் ஹார்திக் பாண்ட்யா பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.





இறுதியாக தென்னாபிரிக்கா அணி 46.5 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 204 ஓட்டங்கள் எடுத்தது.

இந்திய அணி தரப்பில் புவனேஷ்வர் குமாருக்கு பதிலாக சேர்க்கப்பட்ட ஷர்துல் தாகூர் 4 விக்கெட்டும், பும்ரா மற்றும் சாஹல் தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

அதன்பின் களமிறங்கிய இந்திய அணிக்கு துவக்க வீரர்களாக ஷிகர் தவான், ரோகித் சர்மா களமிறங்கினர். கடந்த போட்டியில் அதிரடியாக ஆடி சதமடித்த ரோகித் இந்த போட்டியில் 15 ஓட்டங்கள் எடுத்து வெளியேறி ஏமாற்றம் அளித்தார்.

இதைத் தொடர்ந்து மூன்றாவது வீரராக களமிறங்கிய ஹோலியுடன் தவான் ஜோடி சேர்ந்து நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இருப்பினும் தவான் 18 ஓட்டங்களில் வெளியேறினார். அடுத்து வந்த ரகானே, ஹோலிக்கு நல்ல ஒத்துழைப்பு கொடுக்க, கடந்த போட்டியில் மந்தமான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஹோலி தென்னாபிரிக்கா அணியின் பந்து வீச்சை ஒரு கை பார்த்தார்.

இதனால் இந்திய அணியின் ஓட்டங்கள் விகிதமும் சீரான விகிதத்தில் எகிறியது. சிறப்பாக விளையாடி வந்த ஹோலி 35ஆவது சதம் அடித்து அசத்தினார்.

இந்திய அணி 32.1 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 206 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்திய அணி சார்பில் ஹோலி 96 பந்தில் 129 ஓட்டங்கள் விளாசி கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். இவருக்கு இணையாக ஆடிய ரகானே 50 பந்தில் 34 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இந்த வெற்றியின் மூலம் 6 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை இந்திய அணி 5-1 என்ற கணக்கில் கைப்பற்றி அசத்தியுள்ளது. (க)

# ரன்மிசின் ஹோலி இன்னுமொரு சாதனை

சர்வதேச கிரிக்கெட்டில் குறைந்த இன்னிங்சில் 17,000 ஓட்டங்கள் குவித்த வீரர் என்ற உலக சாதனையை விராட் ஹோலி படைத்துள்ளார்.

இந்தியா - தென்னாபிரிக்கா அணிகள் இடையிலான ஆறாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டியில் இந்தியா அபார வெற்றி பெற்றது.

இப்போட்டியில் இந்திய அணி தலைவர் ஹோலி 129 ஓட்டங்கள் குவித்தார். இது ஒருநாள் போட்டியில் அவரின் 35-வது சதமாகும்.

ஹோலி 31 ஓட்டங்கள் எடுத்த போது சர்வதேச கிரிக்கெட்டில் 17,000 ஓட்டங்களை தொட்டார்.

ஒருநாள், டெஸ்ட், இருபது-20 என மூன்று வித சர்வதேச போட்டிகளிலும் சேர்த்து ஹோலி 17,000 ஓட்டங்களை குவித்துள்ளார்.

இந்த எண்ணிக்கையை தனது 363 ஆவது இன்னிங்சில் அவர் தொட்டிருப்பது புதிய சாதனையாகும்.

இதற்கு முன்னர் தென்னாபிரிக்காவின் ஹசிம் அம்லா 381 போட்டிகளில் 17,000 ஓட்டங்கள் எடுத்ததே சாதனையாக இருந்த நிலையில் ஹோலி அதை முறியடித்துள்ளார். (க)

# தோல்விக்கு முற்றுப்புள்ளி இலங்கை அணி சாதனை

பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதல் இருபது-20 போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றதன் மூலம் தொடர் தோல்விகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

பங்களாதேஷ்-இலங்கை அணிகளுக்கிடையே நடந்த முதல் இருபது-20 போட்டியில் பங்களாதேஷ் அணி நிர்ணயித்த 193 ஓட்டங்களை, இலங்கை அணி 16.4 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 194 ஓட்டங்கள் குவித்து 6 விக்கெட் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது.



கடைசியாக விளையாடிய 8 இருபது-20 போட்டியில் இலங்கை அணி தோல்வியைச் சந்தித்தது. இந்நிலையில் இந்த வெற்றியின் மூலம் தொடர் தோல்விக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

அதுமட்டுமின்றி இருபது-20 போட்டியில் இலங்கை அணி சேஸ் செய்யப்பட்ட பெரிய இலக்கு இது என்ற சாதனையையும் படைத்துள்ளது.

மேலும் பங்களாதேஷ் மண்ணில் முத்தரப்பு தொடர், டெஸ்ட் தொடர் என இரண்டையும் கைப்பற்றியுள்ள இலங்கை அணி, தற்போது நடைபெற்று வரும் இரண்டு போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் 1-0 என்று முன்னிலை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. (க)



நெதர்லாந்தில் நடைபெறும் ரொட்டர்டாம் ஓபன் டென்னிஸ் போட்டியில் ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) அரை இறுதிக்கு நுழைந்தார். அவர் ராபின் ஹாசை 4-6, 6-1, 6-1 என்ற கணக்கில் வீழ்த்தினார்.

இதன்மூலம் உலக தர வரிசையில் பெடரர் முதல் இடத்தை மீண்டும் பிடித்தார். 36 வயதில் முதல் இடத்தை பிடித்ததன் மூலம் அவர் புதிய சாதனை புரிந்தார்.

இதற்கு முன்பு ஆந்த்ரே அகாசி 33 வயதில் முதல் இடத்தை பிடித்து இருந்தார்.

## தாவடி வேத விநாயகர் விளையாட்டுக்கழகத்தின் துடுப்பாட்டப் போட்டி

தாவடி வேத விநாயகர் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் சக்திவேல் ஞாபகார்த்த துடுப்பாட்டப் போட்டி ஒன்று கழகங்களுக்கிடையில் நடத்தப்படவுள்ளது.

அணிக்கு ஏழு பேர் ஆறு பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட போட்டியில் இணைய விரும்பும் கழகங்கள் 077 556 9224, 077 730 4376 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். (க)

# அவுட்டாகனும் என நினைத்தால் கடவுளாலையும் காப்பாற்ற முடியாது

## நியூசிலாந்து வீரரின் சோகக்கதை

அவுஸ்திரேலியா அணிக்கு எதிரான இருபது-20 போட்டியில் நியூசிலாந்து வீரரின் ஹெல்மட் ஸ்டம்பின் மீது விழுந்ததால், அந்த இடத்திலே உறைந்து நின்றார்.

அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான முத்தரப்பு இருபது-20 தொடர் நியூசிலாந்தில் நடைபெற்று வருகிறது. இதில் அவுஸ்திரேலியா- நியூசிலாந்து அணிகளுக்கிடையே நடந்த போட்டியில் நியூசிலாந்து நிர்ணயித்த 243 ஓட்டங்களை அசால்ட்டாக சேஸ் செய்து அவுஸ்திரேலியா அணி வரலாற்று சாதனை படைத்தது.

இப்படி வானவேடிக்கை நிகழ்ந்த போட்டியில், நியூசிலாந்து வீரரின் ஹெல்மட் ஸ்டம்பின் மீது விழுந்த நிகழ்வும் நடந்துள்ளது.

அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளரான பில்லி ஸ்டேன்லேக் வீசிய 18 ஆவது ஓவரை எதிர்கொண்ட நியூசிலாந்து வீரர் மார்க் சேப்மேன், அதை அடித்து ஆட முற்பட்டார் ஆனால் பந்தானது அவரது ஹெல்மட்டை பதம் பார்த்தது.

அந்த ஹெல்மட்டோ பந்து தாக்கிய வேகத்தில் அவரது தலையில் இருந்து கீழே இருந்த ஸ்டம்பின் மீது விழுந்தது. இதைக் கண்ட அவர் பட்டை வைத்து தடுக்க முற்பட்ட போதும், அது முடியாமல் போனதால் ஏமாற்றத்துடன் பெளலியன் திரும்பினார். (கு)

## மகிந்தவை போர்க்...

பலம் இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கிய கால அவகாசத்தை நிறுத்துமாறு தாங்கள் வலியுறுத்திவரும் நிலையில் ஜெனிவாவில் உள்ள பிரித்தானிய தூதுவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஜெனிவா வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்குமாறு கோரிக்கை விடுத்தமையானது மேலும் இலங்கைக்கு கால அவகாசத்தை வழங்குவதற்கான வாய்ப்பினையே வலியுறுத்தியிருப்பதாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் உள்ள பிரித்தானிய தூதுவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடந்த இந்தக் கூட்டத்தில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளின் 26 நாடுகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட 40 பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர். அங்கு உரையாற்றிய சுமந்திரன் தேர்தல் முடிவுகளால் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்களைக் காரணம் காட்டி, இலங்கை அரசாங்கம் ஜெனிவா தீர்மானத்தை நிறைவேற்றுவதில் இருந்து பின்வாங்குவதற்கு, அனைத்துலக சமூகம் இடமளிக்கக் கூடாது என்றும், ஜெனிவா வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் கூறியிருக்கின்றார்.

இந்த விடயத்தை மேலோட்டமாகப் பார்க்கின்றபொழுது ஏதோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த எட்டு வருடங்களாக அரசாங்கத்தைக் காப்பாற்றுகின்ற நிலையில் இருந்து விலகி தேர்தலுக்குப் பின் திருந்திவிட்டது போன்றும் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தத்தைக் கொடுப்பது போன்ற ஒரு தோற்றத்தையே காட்டுகின்றது. ஆனால் அவர் ஜெனிவாவில் கூறிய கருத்துக்களின் ஆழமான உள்ளடக்கத்தை நாங்கள் பார்க்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகளில் அதிருப்தியடைந்தமையாலேயே கடந்த தேர்தலில் மக்கள் அவர்களுக்கு எதிராக வாக்களித்தனர். எனினும் தேர்தல் முடிந்து அடுத்த வாரத்திலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தைப் பாதுகாக்கின்ற வேலைகளில் ஈடுபடத் தொடங்கிவிட்டது.

தேர்தல் பரப்புரைக் கூட்டங்களின்போது தமக்கு ஆணை வழங்காவிட்டால் அது மகிந்த ராஜபக்ஷவை பலப்படுத்தும் என கூறிவந்த சுமந்திரன் இன்று அதே மகிந்த ராஜபக்ஷவை போர்க்குற்றக் குற்றச்சாட்டுக்களில் இருந்து காப்பாற்றுவதற்கான செயற்பாடுகளிலேயே ஈடுபட்டுள்ளார். (30/1) தீர்மானம் மிகத் தெளிவாக உள்ளக விசாரணையை வலியுறுத்தியிருக்கின்றது. குறித்த தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முதல் ஐ.நா ஆணையாளர் ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார். அவரது அறிக்கையில் இலங்கையின் நீதித்துறை அதன் நம்பகத்தன்மையை இழந்துவிட்டதாகவும் அந்தவகையில் உள்ளக விசாரணை சரிவராது எனவும் ஆகக் குறைந்த பட்சம் கலப்பு நீதிமன்றம் உருவாக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தது.

எனினும் உறுப்புநாடுகள் இணைந்து (30/1) தீர்மானத்தினூடாக உள்ளக விசாரணையினைக் கோரின. ஆணையாளரின் அறிக்கைக்கும் (30/1) தீர்மானத்துக்கும் இடையிலான வேறுபாட்டைச் சுட்டிக்காட்டியே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இது உள்ளக விசாரணையே என மக்கள் மத்தியில் தெளிவுபடுத்திவந்தது.

தற்போது ஐ.நா மனித உரிமைகள் கூட்டம் நடைபெறவுள்ள நிலையில் கடந்த ஒரு மாதகாலமாக (30/1) தீர்மானத்தை ஆதரித்த பல நாடுகளின் பிரதிநிதிகள் எங்களைச் சந்தித்தனர். அவர்களிடம் நீங்கள் இலங்கை அரசாங்கம் கலப்பு நீதிமன்றப் பொறி முறையினை நடைமுறைப்படுத்தப்போவதில்லை என உறுதியாகக் கூறிவருவதைச் சுட்டிக் காட்டியபோது அவர்கள் எம்மிடம் குறித்த தீர்மானத்தில் கலப்புப் பொறிமுறை பற்றியே இல்லை எனக் கூறினர். எனவே மிகத் தெளிவாக குறித்த தீர்மானத்தைக் கொண்டுவந்த நாடுகள் கூட இது கலப்பு பொறிமுறையை வலியுறுத்தவில்லை என ஒப்புக்கொண்டிருக்கின்ற நிலையில் உள்ளக விசாரணையினை வலியுறுத்துகின்ற (30/1) தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வலியுறுத்துமாறு கேட்பதென்பது பாதிக்கப்பட்ட மக்களுக்கு செய்கின்ற மிகப்பெரிய துரோகம் என்பதை நாங்கள் மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றோம் என்றார். (ம-4)

## மகிந்தவுக்கு கிடைத்த...

கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

நேற்று சனிக்கிழமை யாழிற்கு விஜயம் செய்திருந்த அவர், வடமாகாண பெற்றோலியக் கூட்டுத்தாபன முகவர்களைச் சந்தித்து கலந்துரையாடியிருந்தார். இதன் பின்னர் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், நடைபெற்ற தேர்தல் நாடாளுமன்றத் தேர்தலோ அல்லது ஜனாதிபதித் தேர்தலோ அல்ல. இதில் தடுமாறுவதற்கோ, பயப்படுவதற்கோ ஒன்றுமில்லை. ஆனால் மொட்டுக்கு வாக்களித்தவர்கள் அரசாங்கத்திற்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

கொலை கொள்ளை மோசடி செய்தவர்களுக்கு தண்டனை வழங்கியிருந்தால், இந்த நிலைமை வந்திருக்காது. இது சம்பந்தமாக அமைச்சரவையில் பத்திரம் தாக்கல் செய்துள்ளோம். இவை தொடர்பில் ஜனாதிபதியும் பிரதமருமே பார்க்க வேண்டும். இந்தத் தேர்தல் வெறுமனே எமக்கு கிடைத்த எச்சரிக்கையாகவே கருதலாம்.

எதிர்வரும் காலங்களில், ஜனாதிபதியோ, பிரதமரோ கட்சியைப் பார்த்து செயற்படாமல், மக்களை பார்த்து செயற்பட வேண்டும்.

தேவையற்றவர்களுடன், தேவையற்ற தொடர்புகளை வைத்து நாட்டினை கவிழ்க்கலாம் என நினைப்பவர்களுக்கும், தவறான வழியில் நாட்டினைத் திசை திருப்ப நினைப்பவர்களுக்கும் அடுத்த தேர்தலில் நல்ல பாடம் கற்பிக்கப்படும். நாட்டு மக்களுக்கு விரோதமாக செயற்படுவர்களுக்கு சரியான முறையில் தண்டனை வழங்கப்படவேண்டும் என்று கூறினார். (ம-4)

## காங்கேசன்துறை...

சன்துறை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக கனிய வளங்கள் மற்றும் பெற்றோலிய அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் ஏற்பாட்டில் வட பிராந்திய பெற்றோலிய கூட்டுத்தாபன விற்பனை முகவர்களுடனான சந்திப்பொன்று யாழ்ப்பாணத்தில் நேற்று இடம் பெற்றது. யாழ் பொது நூலகத்தில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் கனியவளங்கள் மற்றும் பெற்றோலிய அமைச்சர் அர்ஜுன ரணதுங்க பிரதம அதிதியாக கலந்துகொண்டு வடபிராந்திய பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் கேட்டறிந்தார்.

இதனடிப்படையில் வடமாகாணத்தில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் கீழுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நிலவும் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் எரிபொருள் விற்பனை நிலைய உரிமையாளர் இதன்போது வெளிப்படுத்தினர். குறிப்பாக வடக்கில் அடிக்கடி நிலவும் பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதுடன், நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களை புனரமைத்து தருமாறும் இவர்கள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்

இதற்கான நீண்டகால திட்டமொன்றை யாழ்.மாவட்டத்தை முன்னிலைப்படுத்தி தாம் முன்னெடுக்கவிருப்பதாக அமைச்சர் இங்கு உரையாற்றுகையில் குறிப்பிட்டார். இந்த கலந்துரையாடலில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தபான முகாமையாளர் சஞ்சீவ விஜயரட்ண, அமைச்சின் அதிகாரிகள் வடமாகாண பெற்றோலிய கூட்டுத்தபானத்தின் முகாமையாளர்கள், உயர் அதிகாரிகள், முகவர்கள் எனப் பலர் கலந்து கொண்டுள்ளனர். (ம-4)

## நல்லூர், கரவெட்டி...

அமைப்பதற்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவென்று கேட்டபோதே மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நாம் தனித்து கூடிய ஆசனங்களைப் பெற்ற சபைகளின் தவிசாளர்கள், உப தவிசாளர்களை நியமிப்போம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அந்தச் சபைகளில் நாங்கள் ஆட்சி அமைப்போம். ஐக்கிய தேசியக் கட்சி, ஈ.பி.டி.பி ஆகியன ஆட்சி அமைக்கும் கட்சிகளுக்கு வெளியில் இருந்து ஆதரவு வழங்கும் என்று தெரிவித்துள்ளன. அவர்கள் ஆதரவு வழங்குவது என்பது தொடர்பில் தெளிவான கருத்து இல்லை என்றும் கூறியுள்ளார்.

இவ்வாறான நிலையில் இதற்குப் பதில் சொல்வது பொருத்தமாக இருக்காது எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராசா குறிப்பிட்டுள்ளார். (ம)

## நாமலுடன் பேசிப்...

வதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் தளத்தில் பதிவிட்டமை தொடர்பாக நேற்று முதலமைச்சரிடம் கேட்ட போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், நாமலின் தந்தையாரான முன்னாள் ஜனாதிபதி மகிந்த இன ரீதியான சில கருத்துக்களை முன்வைத்து வாக்குகளை பெற்றுள்ளார். இந்த நிலையில் மகனைக் கொண்டு மகிந்த இவ்வாறானதொரு கருத்தை முன்வைத்துள்ளதற்கு இனரீதியான விரிசல் ஏற்படக்கூடாது என்ற எண்ணமே காரணமாகும் என நான் நம்புகின்றேன். இந்த நிலையில், நாமல் ராஜபக்ஷவுடன் பேசி நல்லதொரு முடிவினை எடுக்கலாம் என்றும் யோசிக்க முடியும்.

அதேவேளை, கொள்கைகளின் அடிப்படையில அனைவரும் ஒன்றிணைய வேண்டும். தமிழ் மக்களின் விடுதலைக்காக என்ன கொள்கைகளை வைத்திருக்கின்றோமோ, அந்தக் கொள்கைகளின் அடிப்படையில் ஒற்றுமை இருந்தால், எமது பிரதிநிதிகள் ஒன்றிணைய வேண்டும்.

தெற்கில் ஏற்பட்டுள்ள குழப்பநிலைகள் வித்தியாசமானவை. வெளிநாடுகளின் உள்ளீடுகள் இருப்பதாக தெரியவருகின்றது. சர்வதேச நாடுகள் அரசாங்கத்தினை பிளவுபட விடமார்கள் என்ற தோற்றப்பாடு காணப்படுகின்றது. தற்போதைய அரசாங்கம் தொடர்ந்தும் நீடிக்குமென நம்புகின்றேன். எவ்வாறான நிலை ஏற்படுமென தற்போது கூறமுடியாதுள்ளது என தெரிவித்துள்ளார். (ம-9)

## 50 முன்னாள் போராளி...

காப்பு படைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சியின் மேற்பார்வையில், யாழ்.பாதுகாப்பு படைத் தலைமையகத்தில் கடந்த வியாழக்கிழமை இந்த நிகழ்வு இடம் பெற்றது. இந்த நிகழ்வில் யாழ்.பாதுகாப்பு படைத் தளபதி மற்றும் இராணுவ சிரேஷ்ட அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

இந்த முன்னாள் போராளிகளுக்கு மாதாந்தம் 40,000 ரூபாய் சம்பளமும் மருத்துவ வசதிகளும், 55 வயதின் பின்பு ஓய்வூதியமும் வழங்கப்படவுள்ளதோடு இவர்கள் யாழ். பலாலியிலுள்ள இராணுவப் பண்ணைகளில் தென்னை மரங்களை பராமரிப்பதற்கான சேவையிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். புதிதாக நியமனம் பெற்ற இளைஞர் மற்றும் யுவதிகள் ஒரு நாளுக்கு 8 மணித்தியாலம் சேவையில் ஈடுபட வேண்டும் எனும் நிபந்தனைகளுக்கமைய இவர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். (ம)

## எழுதுமட்டுவாளில்...

(வயது 56) என அடையாளம் காணப்பட்டுள்ளார். உயிரிழந்த நபர் கடந்த 11ஆம் திகதி வீட்டில் இருந்து உறவினரது திருமணத்திற்காக கொழும்பு செல்வதாக கூறி சென்றுள்ளார். ஒரு வாரமாக காணாமல் போயிருந்த இவா நேறறுக் காலை எழுதுமட்டுவாள் நாகா கோயில் குளத்துக்கு அருகில் எரிந்து எலும்புக்கூடாகிய நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம)

## 7 ஆயிரத்து 95 பேர்...

தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இம் மாதம் இதுவரையான காலப் பகுதியில் 1921 பேர் பதிவாகியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த வருடத்தில் 185969 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளமை சுட்டிக் காட்டத்தக்கது.

அவர்களில் அதிகமானவர்கள் மேல் மாகாணத்தினை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## ஐ.நா மனித உரிமை...

இலங்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தும் நோக்கில் விசேட பிரதிநிதிகள் குழுவொன்று ஜெனிவாவிற்கு அனுப்பி வைக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக மனித உரிமை விவகாரங்களில் இலங்கை அடைந்துள்ள அபிவிருத்தி குறித்து தெளிவுபடுத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் மார்ச் மாதம் 21 ஆம் திகதி இலங்கை தொடர்பில் விளக்கம் அளிக்கப்பட உள்ளது. (ம)

## ஜனாதிபதி-சம்பந்தன்...

தெரிவித்தார்.

குறித்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது தொடர்பில் ஊடகங்களுக்கு வெளிப்படுத்தப்படவில்லை. (ம)

## 48 மணி நேரத்தில்...

கூட்டு எதிரணி அமைச்சு பதவிகளை ஏற்று கொள்ள இணங்கினால், நிலையான அரசாங்கம் ஒன்றை அமைக்க எந்த விதமான பிரச்சினைகளும் ஏற்படாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது குறித்த கலந்துரையாடல் ஒன்று இடம்பெறும் எனவும் அவர மேலும் குறிப்பிட்டார்.

எனினும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எந்த ஒரு நிலையிலும் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுவது தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

## நல்லாட்சி அரசாங்கத்தின்...

தினங்களுக்குள் வெளியாகும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசின் அடிப்படையில் ஜனாதிபதியினால் திட்டமிடப்பட்டுள்ள புதிய அமைச்சரவையில்,

பிரதமராக ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த கரு ஜயசூரிய நியமிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுவதுடன் புதிய அமைச்சரவையில் 24 அமைச்சரவை அந்தஸதுள்ள அமைச்சர்களை நியமிக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.(ம)

## இனப் பிரச்சினைக்கு...

போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ,

கொள்கை அடிப்படையில் தமிழர்களின் விடிவுக்காக எமது பிரதிநிதிகள் ஒன்றிணைய வேண்டும். தெற்கில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்களில் பிறநாடுகளின் உள்ளீடுகளும் இருப்பதாக தெரிகின்றது. அதனால் தற்போதுள்ள அரசாங்கம் பிளவுபட அவர்கள் விரும்ப மாட்டார்கள் எனும் தோற்றம் உள்ளது. அதனை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். இந்த அரசாங்கம் தொடர்ந்து இரண்டு வருடத்திற்கு ஆட்சியில் இருக்கும் என்றே நான் நம்புகின்றேன்.

தெற்கில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள் கூடியளவில் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்கவும் உதவலாம். அல்லது தமிழ் மக்களை ஒதுக்கி வைக்கவும் முயலலாம். எந்த மாதிரியான நிலைப்பாட்டை எடுக்கப் போகின்றார்கள் என்பது தெரியவில்லை.

அத்துடன் நாட்டில் உள்ள ஒன்பது மாகாணங்களிலும் சமஷ்டி முறையிலான ஆட்சி அமைக்கப்பட்டால் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வினை எட்ட முடியும் என நம்புகின்றேன்.

நாட்டில் உள்ள ஒன்பது மாகாணங்களிலும் ஏன் சமஷ்டி ஆட்சி அமைக்க கூடாது என கருத்தை முன் வைத்துள்ளேன். 13ஆம் திருத்த சட்டத்தை வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு கொண்டு வந்த போது , ஜே.ஆர் ஜெயவர்த்தன அதனை முழு நாட்டுக்கும் ஏற்புடையதாக செய்தார்.

அதேபோல் ஒரு சமஷ்டி அரசியல் யாப்பை முழு நாட்டுக்கும் கொண்டு வந்தால் நல்ல அரசியல் தீர்வு கிடைக்கும் என எண்ணுகிறேன். அது தொடர்பில் சிங்கள கட்சிகள் என்ன நிலைப்பாட்டை எடுக்கின்றார்கள் என்பதனை பொறுத்தே ஒரு நிரந்தரத் தீர்வை எட்ட முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## வாடகைக்கு

கிளிநொச்சி விவேகானந்த நகரில் (ரெலிகொம் கோபுர அண்மையில்) 5 அறைகளுடன் சகல வசதிகள் கொண்ட விசாலமான வீடு உடன் வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் / குடும்பத்துக்கு ஏற்றது. தொடர்பு: 0774678776, 0768604501

## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
(சு-1636)

## SB Travels and Tours (Pvt) Ltd

நேரடி முகவர்

நம்பமுடியாத விலைக்கழிவில் **சென்னைக்கு சென்று வருவதற்கு** 18,000/= இருந்து பெற்றுக்கொள்ளலாம். இடைத்தரகர்கள் தேவையில்லை. ஒருமுறை எங்கள் நிறுவனத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி தெரிந்து கொள்ளுங்கள்.

| கொழும்பு-15 | கொழும்பு-13 | கொழும்பு-06 |
|---|---|---|
| 0112540111 | 0112333322 | 0112058625 |
| Jaffna 0212228555 | Jaffna 0212227666 | Hotline 0771083480/81 |

## ஒடியல் கூழ்

சைவம், அசைவம்

பைறட் சிக்கன் -றைஸ் & பைட்ஸ்
Fried Chickan - Rice & Bites

யாழ் பாடியில் (C-1602)
49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353, 075 987 5800

## கொள்ளை, வழிப்பறிகளுடன்...

பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 14ஆம் திகதி திருநெல்வேலி - நல்லூர் வீதியில் சென்று கொண்டிருந்த பெண்ணின் நகையை பறித்துச்சென்றதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக இடம்பெற்ற விசாரணையிலேயே இந்தக் கும்பல் கைது செய்யப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் நாவற்குளி பகுதியைச் சேர்ந்த 20 தொடக்கம் 23 வயதுகளையுடைய மூவரே கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் பல கொள்ளை மற்றும் வழிப்பறிகளுடன் தொடர்புபட்டிருப்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. சந்தேகநபர்களிடமிருந்து கொள்ளையிடப்பட்ட 15 பவுண் உருக்கப்பட்டு உருமாற்றப்பட்ட பவுண் கட்டிகள் இரண்டு மீட்கப்பட்டன. அவர்கள் பயன்படுத்திய இரண்டு மோட்டார் சைக்கிள்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

கொள்ளைக் கும்பலின் திருட்டு நகைகளைப் பெற்று அதை உருமாற்றும்வேலை செய்துவந்த கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த நகைக்கடைக்காரர் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம)

## உடனடி வேலைவாய்ப்பு

- சமையலாளர்
- சமையல் உதவியாளர்

மாலை 4 மணிக்கு பின் நேரில் வரவும்.

**இடியப்பக் கடை**
மருதனார்மடம் (2819)

## தவறிவிட்டது

கோப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட தம்பிமுத்து சந்திரபோஸ் என்பவருடைய 680421552V எனும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை, வாகன அனுமதிப் பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம் அடங்கிய பேர்ஸ் கோப்பாய் இராச வீதிக்கும் நல்லூருக்கும் இடையில் 12.02.2018 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: 0776233111 (2825)

## காணி 5 வருட குத்தகைக்கு

461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் (ஆரியகுளச் சந்திக்கு அருகாமையில், புகையிரத நிலையத்திற்கு பின்புறமாக) அமைந்துள்ள 8 பரப்பு 1.7 குளி காணியும், கட்டடமும் 5 வருட குத்தகைக்கு விடப்படும். (2821)

**தொடர்புகளுக்கு: 0750412552**

## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

EXPRESS Courier Services

அண்ணா பொதிகள் சேவை

975, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்
021 221 5656, 070 330 5500

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | வேலணை | சாவகச்சேரி | மீசாலை | முல்லைத்தீவு | கிளிநொச்சி | வவுனியா | திருகோணமலை
(C-1616)

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK - 550*/=Kg
கனடா - 1050*/=Kg

DELIVERY IN 3-5 DAYS

தொடர்புகளுக்கு: 0768226240

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS (C-1566)

## காணி விற்பனைக்கு

யாழ். கொழும்புத்துறை வீதியில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட 3 1/2 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு - 077 606 8834, 076 305 3332, 077 342 9846 (C-1601)

## நன்றியுடன் பாராட்டுகின்றேன்



அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய வாக்காளப் பெருமக்களே!

நடந்த முடிந்த யாழ்.மாநகர சபைக்கான தேர்தலில் 25-ம் வட்டாரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட என்னை வெற்றி பெற வைத்த அனைத்து மக்களுக்கும் எனது மனம் கனிந்த, இருகரம் கூப்பி நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன். உங்களது நன்றியை நான் என்றும் மறக்க மாட்டேன்.

எனது பணி மக்கள் சேவையே என்பதை உறுதிப்பாட்டுடன் உங்களுக்கும் எனக்கு வாய்ப்பு வழங்கிய கட்சியினருக்கும் நன்றி உள்ளவனாகவும் விசுவாசத்துடனும் செயல் புரிவேன். அத்துடன் இன்று 18.02.2018 பிற்பகல் 3 மணிக்கு கொட்டடியில் நடைபெறும் எனது பாராட்டு விழாவிலும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறிப்பாக, எனக்கு தோள் கொடுத்த நண்பர்கள் உள்ளனர் அவர்களை நான் என்றும் கைவிடமாட்டேன். இது சத்தியம்.

"புயல் வீசினும் மழை கொட்டினும்
நாம் குடியிருந்த வீட்டினை கைவிடோம்"

*மக்கள் சேவையில்...*

**லயன் கலாநிதி நா. தனேந்திரன் (JP, M.A.F)** (2827)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு. பேராயிரம்பிள்ளை இளமுருகன்

(Attorney at Law
B.Sc Diploma)
(கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி- ஆசிரியர்)

அவர்கள்
15.02.2018
அன்று
உயர் நீதிமன்ற
சட்டத்தரணியாக
கொழும்பு உயர்
நீதிமன்றில்
சத்தியப்பிரமாணம்
செய்துகொண்டார்.
இவர் மேன்மேலும்
பல பட்டங்களைப்
பெற்று
உயர இறைவனை
வேண்டி
வாழ்த்துகின்றோம்.

27, 1/1, இணுவில் கந்தசுவாமி கோவிலடி, இணுவில் மேற்கு, இணுவில்.

பாராட்டுவோர்:
நண்பர்கள்
076 644 3385 (2829)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.02.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 154

வள்ளுவர் ஆண்டு 2049 | 18.02.2018 | தொலைபேசி : 021 222 3378




# தேர்தல் தந்த பாடம்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**பண்டிதர்** பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று பண்டிதர் அறிவிக்க, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

**வாத்தியார்:** ஒரு மாதிரியாக உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடந்து முடிந்திற்றுது.

**விதானையார்:** உள்ளூராட்சி சபைத் தேர்தல் பலருக்கும் நல்ல பாடம் புகட்டியிருக்குது. தேர்தலை ஒரு பாடமாக வைத்து மக்களின்ர மனநிலை எப்படி இருக்குது என்பதை தமிழ் அரசியல்வாதிகள் புரிந்து கொண்டால் எதிர்காலமாவது தப்பிக் கொள்ளும்.

**மூப்பர்:** பண்டிதர் ஐயா தெரியாமல்தான் கேட்கிறன் சிவராத்திரி தினத்தில பட்டிமன்றம் நடத்துறது பிழையோ?

**பண்டிதர்:** சிவராத்திரி தினத்தில பட்டிமன்றம் நடத்துறது பிழையில்ல. ஆனா இந்தியத் துணைத் தூதரகம் நடத்துறதும் அதில பத்திரிகை ஆசிரியர் ஒருவர் பேசுறதும் தான் ஒரு சிலருக்குப் பிரச்சினை.

**மூப்பர்:** அட சங்கதி அப்படியோ. நான் நினைத்தன் சிவராத்திரி தினத்தில பட்டிமன்றம் நடத்தக் கூடாது எண்டு.

**வாத்தியார்:** மூப்பர் இந்து சமயப் பேரவையின் செயலாளர் இந்தியத் துணைத்தூதருக்கு எழுதிய கடிதத்தில பட்டிமன்றத்தை நிறுத்த வேணும் எண்டு தான் சொன்னவராம்.

**கங்காணி:** ஏன் அப்படிச் சொன்னவராம்.

**வாத்தியார்:** பேராசிரியர் சாலமன் பாப்பையா, பட்டிமன்றப் பேச்சாளர் ராஜா இவர்கள் கத்தோலிக்க சமயத்தவர்களாம். அதால பட்டிமன்றத்தை நிறுத்த வேணும் என்பது தான் இந்து சமயப் பேரவைச் செயலாளரின் கோரிக்கை.

**சாத்திரியார்:** அட, நாசமறுப்பு பேராசிரியர் சாலமன் பாப்பையா சைவசமயத் திருமுறைகளைக் கரைத்துக் குடித்தவர். இன்னொரு சமயத்தவர் எங்கட மண்ணுக்கு வந்து எங்கட சைவசமயத்தைப் புகழ்ந்து பேசுறது எங்களுக்குப் பெருமைதானே.

**விதானையார்** ஏன் எங்கட தனிநாயகம் அடிகளார் திருவாசகத்தின் பெருமை பற்றிப் பேசி சைவமக்களின் மனங்களைக் கவர்ந்தவர் தானே. அதே போல திருமறைக் கலாமன்றத்தின் பிதாமகர் மதிப்புக்குரிய மரியசேவியர் அடிகளார் சைவசித்தாந்தத்தில கலாநிதிப் பட்டத்தைச் செய்தவர். உமாபதி சிவாச்சாரியாரின் கொடிக்கவியை இறுவெட்டில பதித்து எங்கட சைவசமயத்திற்கு எவ்வளவு பெரிய துணை செய்தார்.


அப்ப இதையெல்லாம் இந்து சமயப் பேரவையின் செயலாளர் தடுத்தல்லோ இருக்க வேணும்.

இதை விட்டிட்டு கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தில பேராசிரியர் சாலமன் பாப்பையாவின்ர பட்டிமன்றத்தை நடத்தாமல் நிறுத்த வேணும் எண்டு கேட்கிறது எந்தவகையில நியாயமாகும்.

**வாத்தியார்:** விதானையார் சிலர் காந்தியாக வாழ நினைப்பினம். இன்னும் சிலர் கோட்சேயாக இருந்தாலும் பெயர் அடிபடும் தானே என்று நினைப்பினம். இதுதான் எங்கட மண்ணில இப்ப இருக்கிற பிரச்சினை.

என்னவாக இருந்தாலும் இந்து சமயப் பேரவைச் செயலாளர் பட்டிமன்றத்தை நிறுத்தச் சொல்லி இந்தியத் துணைத் தூதருக்கு எழுதின கடிதம் தொடர்பில,

இந்து சமயப் பேரவைச் செயலாளர் மற்றும் பேரவை உறுப்பினர்கள், பட்டிமன்றப் பேச்சாளர்கள் எல்லோரையும் அழைத்து கடந்த 12 ஆம் திகதி 4 மணிக்கு ஒரு சந்திப்பைச் செய்ய யாழ்ப்பாண இந்தியத் தூதரகம் அழைப்பு விட்டது.



## பட்டிமன்றத்திற்கு கோடிக்கணக்கில் செலவு என்ற செய்தி பச்சைப்பொய்

இந்து சமயப் பேரவையின் செயலாளர் அன்றைய தினம் 4 மணிக்கு அந்தச் சந்திப்புக்கு வருவதாகச் சம்மதம் தெரிவித்துவிட்டு பின்னர் சந்திப்புக்கு வராமல் இரண்டு பிரதிநிதிகளை அனுப்பியிருந்தார்.

இதெல்லாம் ஒரு ஒழுங்கான செயல் அல்ல. சந்திப்புக்கு தான் வரமுடியாது. எனது இரண்டு பிரதிநிதிகளை அனுப்பி வைக்கிறேன் என்று முன்கூட்டியே அவர் சொல்லியிருக்க வேணும்.

**விதானையார்:** நான் அறிந்தமட்டில பட்டிமன்றத்தை நிறுத்தவேணும் என்ற ஒரு செய்தியும் பட்டிமன்றத்தை நடத்துவதற்கு கோடிக்கணக்கில செலவு என்று இன்னொரு செய்தியும் ஒரு ஊடகத்தில வந்ததால பேராசிரியர் சாலமன் பாப்பையா, ராஜா, பாரதி பாஸ்கர் ஆகியோர் குழம்பிப் போயிற்றினமாம்.

**வாத்தியார்:** பின்ன குழம்பமாட்டினமோ. சமுதாய முன்னேற்றத்திற்குப் பெரிதும் துணை செய்வது அறிவியலா? ஆன்மீகமா என்ற விடயத்தில பட்டிமன்றம் செய்யிறதும் பிழை என்றால்...

**பண்டிதர்:** அதுமட்டுமல்ல, இந்து சமயப் பேரவையின்ர பிரதிநிதிகள் இந்தியத் துணைத்தூதரக சந்திப்பில் கலந்து கொண்ட போது கோடிக்கணக்கான ரூபா செலவில இப்பட்டிமன்றம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டதாகவும் அந்த ஊடகத்தில ஒரு செய்தி வந்ததல்லோ.

அந்தச் செய்தி பச்சைப் பொய். அப்படி எதுவும் அங்கு சொல்லப்படவில்லை என்பதை அந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட இந்து சமயப் பேரவையின் பிரதிநிதியும் இலங்கை கல்வி நிர்வாக சேவையில இருக்கிற வருமான அந்த அன்பர் சொல்லியிருக்கிறார்.

**சாத்திரியார்:** அடக் கடவுளே! சொல்லாத ஒன்றைச் செய்தியாக்கி மற்ற வர்களின்ர முகத்தில கரியப் பூசுகிறதில இவ்வளவு ஆர்வமோ.

**வாத்தியார்:** சாத்திரியார் கடவுள் இருக்கிறான். இப்படியான பொய்களைப் பரப்பிற அநியாயத்தை யார் செய்தாலும் கீரிமலை நகுலேஸ்வரப் பெருமான் அதைப் பார்த்துக் கொள்ளுவான். அதை அவன் பொறுப்பில விட்டிடுவம். ஆனால்...

**விதானையார்:** என்ன வாத்தியார் ஆனால் என்று சொல்லிப் போட்டு நிறுத்திப் போட்டியள்.

**வாத்தியார்:** யாழ்ப்பாணத்தில பட்டிமன்றம் நடத்துறதுக்காக நாங்கள் ஐந்து சதம் வாங்குவதில்லை. எங்கட யாழ்ப்பாணத்துத் தமிழ்ச் சகோதரர்களைச் சந்திப்பதுதான் எங்களுக்குப் பேரானந்தம் என்று பட்டிமன்றப் பேச்சாளர் ராஜா சொன்ன போது அங்கு கூடிநின்றவர்கள் தங்கள் கண்களைத் துடைத்துக் கொண்டவியளாம்.

**பண்டிதர்:** என்ன இருந்தாலும் கோடிக்கணக்கில செலவு என்று இந்து சமயப் பிரதிநிதிகளிடம் சொல்லப்படாத ஒரு செய்தியை இந்து சமயப் பிரதிநிதிகளிடம் இந்தியத் துணைத்தூதரக அதிகாரிகள் சொன்னார்கள் எனச் செய்தி வந்தபோது,

அதனை இந்து சமயப் பேரவைச் செயலாளர் மறுத்திருக்கவேணும். அது தான் தர்மம். ஆனால் அதை அவர் செய்யவில்லை.

பரவாயில்லை. யாழ்ப்பாணத்து மாநகர சபையில ஒரு கத்தோலிக்கர் மேயராக வந்தால், நல்லூர்க்கந்தன் கோயில் அமைந்த வட்டாரத்தில ஒரு நொன்ஆர்சி பெண்மணி உறுப்பினராகப் பதவியேற்றால் அதையெல்லாம் இந்து சமயப் பேரவைச் செயலாளர் தடுக்க வேணும். இதற்காக அவர் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்த வேணும். இதைவிட்டிட்டு பட்டிமன்றத்தை மட்டும் நிறுத்துவதே அவரின் நோக்கம் எண்டால் அது பற்றி எல்லோரும் சிந்திக்க வேண்டும்.


**பண்டிதர்:** சரி... சரி... நேரம் ஆகுது. ஒரு சிறந்த பட்டிமன்றத்தை நடத்தி சுமார் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் அதனைக் கேட்டு மகிழ்ந்துள்ளனர் என்பதுதான் உண்மை.

இப்பட்டிமன்ற நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து தந்த இந்தியத் துணைத் தூதுவர் ஸ்ரீமான் ஆர்.நடராஜனுக்கு நன்றி தெரிவித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றுவம்.

இவ்வாறு பண்டிதர்கூற அதனை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு அனைவரும் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# தேர்தல் தந்த பாடம்



நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் அதில் பங்குபற்றிய ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் தங்களை சுயமதிப்பீட்டிற்கு உட்படுத்திக் கொண்டால், ஆச்சரியமான பல விடயங்களைக் கண்டறிய முடியும்.

வடபுலத்தைப் பொறுத்தவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகப்பெரிய சவாலைச் சந்தித்துள்ளதென்பது நிறுதிட்டமான உண்மை.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்கள் தங்களின் தீர்ப்பை மிகப் பௌவியமாக வழங்கியுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தான் நினைத்த மாதிரியெல்லாம் செயற்பட முடியாதென்பது தமிழ் மக்களின் ஒட்டுமொத்த நிலைப்பாடென்பது இத்தேர்தல் மூலம் மிகத் தெளிவாக வலியுறுத்தப் பட்டுள்ளது.

உண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மிகக் கணிசமான வாக்குகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இழந்துள்ளது. இதற்கான காரணம் என்ன என்பதை நடுநிலை நின்று ஆராயக் கூடிய வல்லமை அந்தக் கட்சியிடம் உள்ளதா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

எதுவாயினும் தமிழ்மக்களின் ஏகத்தலைமை என்ற இறுமாப்பில் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் தோல்விக்கான காரணத்தைக் கண்டறிய நடுநிலையானவர்களை உள்ளடக்கிய குழுவொன்றை நியமித்துச் செயற்படுமாக இருந்தால், தமிழ்மக்களின் மனநிலை எவ்வாறு உள்ளதென்பது தெரியவரும்.

அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அடியோடு சரித்து விடவேண்டும் என்ற நிலைப்பாடும் தமிழ்மக்களிடம் இல்லை என்பதும் புரிதலுக்குட்பட்டது.

இத்தகைய நிலைப்பாட்டை; கூட்டமைப்பு எதிர்த்துப் போட்டியிட்ட அரசியல் கட்சிகள் அடிமட்டக் கிராமங்களுக்குத் தமது பிரசாரங்களை எடுத்துச் செல்வதில் விட்ட தவறும் அசமந்தப் போக்கும் ஊக்குவித்திருக்கலாம்.


எதுவாயினும் ஒரு பெரும் அமைப்பின் சரிவு என்பது நிறுத்தப் படவேண்டுமாக இருந்தால், அதற்கான முயற்சிகளும் வேலைத் திட்டங்களும் மிகப்பெருமெடுப்பில் அமைய வேண்டுமென்பது மறுதலிக்க முடியாத உண்மை.

இவற்றையெல்லாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கரிசனையில் எடுக்குமா என்பதை காலமே பதிலளிக்க வேண்டும்.

எது எவ்வாறாயினும் 2018 ஆம் ஆண்டின் தொடக்கமே தேர்தலில் தான் ஆரம்பித்துள்ளது. தேர்தலில் ஆரம்பித்த இந்த ஆண்டு தேர்தலோடு தான் தன் காலத்தையும் முடிவுறுத்தப் போகிறது.

ஆம், இந்த ஆண்டின் இறுதிப் பகுதிக்குள் மாகாண சபைத் தேர்தல் நடந்தாக வேண்டும்.

## மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் என்ற பதத்தை மக்களே முடிவுறுத்தினர்



எனவே உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு அடுத்தபடியாக மாகாண சபைத் தேர்தலை தமிழ் அரசியல் கட்சிகள் சந்திக்கத் தயாராக உள்ளன.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முன்பாக சர்வ வல்லமை பொருந்திய தலைமையாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏலவே தேர்தலில் தோற்றிருந்த தமிழ் அரசியல் கட்சிகளை தமிழ் மக்களால் நிராகரிக்கப் பட்டவர்கள் என்றே விமர்சித்து வந்தது.

இப்போது தமிழ்மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் என்ற பதத்தைத் துணிந்து சொல்ல முடியாத அளவுக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாய்ப்பூட்டுப் போட்டுள்ளது.

அதேசமயம் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கணிசமான வாக்குகளைப் பெற்று தனக்கான ஒரு இடத்தை நிலைப்படுத்தியுள்ளது.

ஆக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீதான நம்பிக்கையீனங்கள் மாற்றுத் தலைமைக்கான தளத்தை அமைத்துள்ளதென்பது நிறுதிட்டமான உண்மை.

இத்தகைய சூழ்நிலையில் எதிர்வரும் செப்டெம்பர் மாதமளவில் நடைபெறக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்ற வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் அரசியல் கட்சிகளின் போட்டிகள் வலுவடையும் என்பதையும் ஏற்றுத்தானாக வேண்டும்.

இருந்தும் வடக்கு- கிழக்கு மாகாண சபைத் தேர்தல் என்று வரும்போது அந்தத் தேர்தலின் முடிவைத் தீர்மானிப்பவராக வடக்கு மாகாண சபை முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் இருப்பார் என்பதை அறுதியிட்டுக் கூறமுடியும்.

உள்ளூராட்சித் தேர்தலைப் பொறுத்தவரை வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் கருத்துரைப்பவராக அல்லது நடுநிலை நின்று தனது நிலைப்பாட்டைத் தெரிவிப்பவராகவே இருந்துள்ளார்.

ஆனால் எதிர்வரும் வடக்கு மாகாண சபைத்தேர்தலில் அவர் பங்குபற்றுநராக இருக்கின்ற சந்தர்ப்பம் நிறையவே உண்டு.

ஆனால் அவர் தேர்தலில் பங்குபற்றுதல் என்பது எங்ஙனமாக அமையும் என்பதே இப்போதிருக்கின்ற மிக முக்கியமான கேள்வி.

அதாவது உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அதிர்ச்சி வைத்தியத்திற்கு உட்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு மீண்டும் இடம் கொடுப்பது என்ற முடிவுக்கு வரவேண்டிய ஒரு இறுக்கமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

தேர்தல் முடிந்த கையோடு வடக்கின் முதலமைச்சருக்குப் பாடம் புகட்டுவோம் என்று கூறியவர் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா அவர்கள்.

அதேவேளை அண்மையில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்ட வர்த்தகத் துறை சார்ந்த ஒருவர் தேர்தலுக்கு முன்பாக தனது நண்பர்களிடம் கருத்துரைக்கையில்,

தேர்தல் முடிந்த கையோடு முதலமைச்சர் விக்னேஸ்வரனை வீட்டுக்கு அனுப்புவோம் என்று கூறியுள்ளார்.

ஆனால் இவை எதனையும் செய்ய முடியாத அளவில் தேர்தல் முடிவுகள் அமைந்துவிட்டன. இப்போது முதலமைச்சர் விக்னேஸ்வரனை வீட்டிற்கு அனுப்புவதை விட வீட்டுக்குள் வைத்திருப்பது தான் உத்தமம் என்று முடிவு செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எது எவ்வாறாயினும் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் எடுக்கின்ற முடிவில்தான் எல்லாமும் தங்கியுள்ளதென்பது ஏற்புடைய உண்மை.

விதுரன்




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம் பகுதியில் உங்கள் ஆக்கங்கள் இடம்பெற வேண்டும் என்றால் உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.

# வெற்றிக்கனி



கிருஷ்ண தேவராயர் ஒரு முறை எதிரியைத் தாக்கப் படையோடு புறப்பட்டுப் போனார். ஒரு ஆற்றங்கரையைக் கடக்க வேண்டிய நேரத்தில், அரசவை ஜோசியர், "மன்னா, இன்றைக்கு நாள் நன்றாக இல்லை. அடுத்த திங்கள் கிழமை போருக்குப் போனால் வெற்றி நிச்சயம்" என்று சொன்னார்.

கிருஷ்ண தேவராயர் குழம்பினார். அவ்வளவு நாட்கள் கொடுத்தால், எதிரி உஷாராகிவிடுவான். அவன் எதிர்பாராத நேரத்தில் உடனே தாக்கினால்தான் வெற்றி. ஆனால், ஜோசியர் சொன்ன பின் சந்தேகம் வந்து விட்டது. தெனாலி ராமனிடம் ஆலோசனை கேட்டார்.

தெனாலிராமன் ஜோசியரை அழைத்தான். "எல்லோருக்கும் ஆரூடம் சொல்கிறீர்களே, நீங்கள் இன்னும் எத்தனை வருடம் உயிரோடு இருப்பீர்கள் என்று சொல்ல முடியுமா?" என்று கேட்டான்.

"இன்னும் இருபது வருடங்கள் வாழ்ந் திருப்பேன்" என்றார் ஜோசியர்.

தெனாலிராமன் சடக்கென்று வாளை உருவி அவர் கழுத்தில் பதித்து, "இந்த விநாடியே உங்கள் ஆரூடத்தை என்னால் பொய்யாக்க முடியுமா, முடியாதா?" என்று கேட்டான்.

ஜோசியரின் விழிகள் அச்சத்தில் பிதுங்கின. "முடியும்... முடியும்" என்று அலறினார்.

"அவ்வளவுதான் மன்னா ஜோசியம்! உங்களுக்கு எதிரான எந்த ஜோசியத்தையும் உங்களால் பொய் யாக்க முடியும்" என்று புன்னகைத்தான் தெனாலிராமன்.

கிருஷ்ண தேவராயர் ஆற்றைக் கடந்தார். எதிரியை வெற்றி கொண்டார்.

நீங்கள் தீர்மானமாக இருந்தால், கோள்களால் உங்களை எதுவும் செய்ய முடியாது.

வீண் சந்தேகங்களை விலக்கி, உங்கள் மீது நம்பிக்கை வைத்துத் திறமைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். முழுமையான ஈடுபாட்டுடன் செயற்படுங்கள். தானாகக் கனிந்து வரும் வெற்றிக்கனி!

தேசிய அலைவரிசையில் ஒரு புரட்சி
நல்லிணக்கத்திற்கான புதிய பாதை
nethra நேத்ரா tv
CHANNEL Eye
தமிழ் பேசும் மக்களுக்காக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின்
புதிய அலைவரிசையின்
ஆரம்ப விழா
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின்
அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன
அவர்களின் தலைமையில்
கௌரவ பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்களின்
பங்குபற்றுதலுடன்
பெப்ரவரி மாதம் 20ம் திகதி 2018 அன்று பி.ப 2 மணிக்கு
இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் இடம்பெறும்
என்பதை அபிமானத்துடன் அறியத்தருகின்றோம்.
கொழும்பு UHF 57 - 758 - 766 MHZ
ஹந்தானை UHF 30 - 542 - 550 MHZ
கொக்காவில் UHF 35 - 582 - 590 MHZ
யாழ்ப்பாணம் UHF 33 - 566 - 574 MHZ
மடுல்சீமை UHF 57 - 758 - 766 MHZ
எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்
www.rupavahini.lk
www.nethratv.lk






## வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள், இல.3,2 ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



**புலிகளின் வெற்றிக்கு கூட்டமைப்பு காரணம் என்றால் தோல்விக்கு...**

**கூட்டமைப்பின் போக்கு பிழை யானது ஏன் ஒருவர் கூட எதிர்...**

**வீதி சமிக்ஞை பலகைகளில் தேர்தல் விளம்பர பதாகைகளை...**

மதுசன் — நல்லூர்

**காதலர் தினத்திற்கு ஒரு கவிதை சொல்லுங்கள்?**

வார்த்தைகளால் பார்வைகளால்
உயிருக்குள் நுழைந்து
விதையாகி முளைவிட்டு
உயிருக்குள் விருட்சமாகி
உணர்வுகளால் வர்ணிக்க முடியாத
மன நிறைவைத் தரும்
மரணத்தையும் தரும்
இந்த மாமக் காதல்

அன்பன் — யாழ்ப்பாணம்

**வீதி சமிக்ஞை பலகைகளில் தேர்தல் விளம்பர பதாகைகளை ஒட்டியவர்கள் பற்றி?**

புத்தி மத்திமமானவர்கள் பற்றி இவ்விடத்தில் பேசிப் பயனில்லை விட்டு விடுங்கள்.

ஜென்சிகா — இருபாலை

**ஒருவருக்குப் பிடித்தது இன்னொருவருக்கு பிடிக்காததற்கான காரணம்?**

அலுவலகத்தில் என்னுடன் இணைந்து சாப்பிடும் நண்பருக்கு கருவாட்டுப் பொரியல் பிடிக்காது. எனக்கு பொரியல் என்றால் அதுவும் கருவாட்டுப் பொரியல் என்றால் அலாதிப் பிரியம்.

அவர் குழம்பை சோற்றில் முற்றிலும் ஊற்றி பிசைந்து சாப்பிடுவார். எனக்கு என்னவோ குழம்பை அளவாக விட்டு பிசைந்து உண்ணவே பிடிக்கும். சோறு - கறி - பொரியல் இதுபோல் தான் வாழ்க்கையும்.

பிறேம் — வதிரி

**புலிகளின் வெற்றிக்கு கூட்டமைப்பு காரணம் என்றால் தோல்விக்கு யார் காரணம்?**

யாரை தமிழரின் ஏக பிரதிநிதிகள் என்று பிரபாகரன் கை காட்டினாரோ அவர்கள் புலிகளின் அழிவைப் பார்த்துக் கொண்டு அமைதியாய் இருந்தார்கள் என்பது தான் உண்மை.

சுதன் — குப்பிளான்

**கூட்டமைப்பின் போக்கு பிழையானது ஏன் ஒருவர் கூட எதிர்க்கவில்லை?**

கேட்டால் அடுத்த முறை சீட் கிடைக்காது. அதனால் கேட்காமல் எடுக்கும் முடிவுகளுக்கு தலையாட்டிக் கொண்டிருந்தால் வாழ்நாள் முழுவதும் சீட் கன்போம் தட் இஸ் ஒகே.

நகுலன் — நல்லூர்

**காதல் செய்வது சரியா தவறா?**

என் மனைவியிடம் கேட்டுட்டு சொல்கிறேன்.

நந்தகுமார் — மானிப்பாய்

**இந்த தேர்தல் முறை எப்படி?**

வட்டாரம், விகிதாசாரம் புதிய விடயம் தான். கட்சிகளுக்கு விழும் வாக்குகளின் விகிதாசாரப்படி போனஸ் ஆசனங்கள் வழங்கும் முறை. மக்கள் பிரதிநிதிகள் மக்களுக்கு சேவை செய்ய ஒரு நல்ல சந்தர்ப்பத்தை வழங்கும் முறையாக உள்ளது.

தமிழ் — பருத்தித்துறை

**நடைபெற்று முடிந்த தேர்தல் பற்றி உங்கள் கருத்து?**

ஓ! தமிழ்த் தலைமையே இனியும் பதவிகளையும் கதிரைகளையும் தக்க வைத்துக் கொண்டு எம் தமிழ் மக்கள் தலைகளில் மிளகாய் அரைக்கலாம் எனக் கனவு கண்டு விடாதீர்.

மக்களின் ஆணையை புரிந்து கொண்டு உம் முடிவை மாற்றி சில ஆட்களை மாற்றி தமிழினத்திற்கான தமிழர் உரிமைசார் விடயத்தில் கவனஞ் செலுத்தி அவர்களுக்காய் பாடுபடும் ஒரு அமைப்பாய் உம்மை மாற்றிக்கொள். இல்லையேல் இதைவிட பலத்த அடி விழும் கவனம்.

கலை — பரந்தன்

**காதல் பற்றிச் சொல்லுங்கள்?**

வார்த்தைகளில் வர்ணிக்க முடியாதது.
எழுத்துக்களுள் அடக்கிவிடமுடியாதது.
சைகைகளில் காட்டிவிடமுடியாதது.

உணர்வுகளால் மட்டும் உணரக்கூடியது. அதுதான் அதன் புனிதத்தை பலரும் புரிந்து கொள்வதில்லை.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 எனும் இலக்கத்திற்கு SMS அனுப்பவும்**

குமார் — மானிப்பாய்

**இனியாவது ஒற்றுமை நிலைக்குமா?**

இனியும் நாம் நமக்குள் ஒன்றுபடாமல் இருப்போமாக இருந்தால் அது தமிழ் இனத்தின் அழிவுக்கு வழிசமைத்து விடும். தென்பகுதியின் அரசியல் நிலவரம் முற்றிலுமாக மாறுபட்டுச் செல்கிறது. இந்த நேரத்தில் நாம் பிரிந்து நிற்பதென்பது சிங்கங்கள் வேட்டையாட பிரிந்து நிற்கும் எருதுகளுக்கு சமம்.

எனவே எமது தமிழ் தலைமை சிந்தித்து செயற்பட வேண்டிய நேரமிது. அதைவிட்டு விட்டு மீண்டும் ஒருசிலரின் அதிகாரப் போக்குடைய தன்மைக்கு கட்சியை அடகு வைத்தால் தமிழனின் நிலை கவலைக்கிடமே.

பரமேஸ் — வதிரி

**மத்திய ஆட்சியின் நிலை?**

நல்லாட்சி என்று பெயரளவில் சொல்லப்பட்டாலும் அது நல்ல ஆட்சியாக நடக்கவில்லை. இந்த ஆட்சியில் தமிழருக்கு நடந்த நன்மை என்று சொல்லப்போனால் அது எதிர்க்கட்சித் தலைமை தமிழ் தலைமைக்கு கிடைத்தது மட்டுமே என்றுதான் கூற முடியும். கிடைத்த எதிர்க்கட்சித் தலைமைப்பதவியை வைத்து தமிழருக்கு எதுவும் செய்யாதது வேறு கதை. நல்லாட்சியின் பலவீனம் மகிந்தவின் எழுச்சியை உறுதி செய்து விட்டது.



## வியாசரின் வியாக்கியானம்

தேர்தல் என்டால் இதுல்லோ தேர்தல். காலையில் ஏழு மணிக்கெல்லாம் வாக்களிக்க தொடங்கிட்டு சனங்கள். சாரை சாரையாய்ப் போய் வாக்களிச்சதுகள். அப்பாடா பாக்கச் சந்தோசமாக இருந்தது. வாக்களிக்கிறது எங்கட உரிமை. அதை நிச்சயம் நாம் ஒவ்வொருவரும் செய்ய வேணும்.

யாருக்கு வாக்களிக்கிறம் என்டுறது அடுத்த விசயம் வாக்களிச்சம் என்டுறது தான் முதல்விசயம். எனக்கு இந்த முறை வீட்டுக்குப் பக்கத்தில தான் வாக்களிப்பு நிலையம். அதாலை அலைச்சல் இல்லை. போய் என்ர ஜனநாயக உரிமையை அளிச்சிட்டு வர, கொஞ்ச பெட்டுகள் சின்னிவிரலை நீட்டிப்பிடிச்சுக் கமராவில செல்பி எடுக்குதுகள். டேய் தம்பி என்னடா அங்காலை பொலிஸ் நிக்கிறான். இந்த முறை தேர்தல் ஆணையாளர் சரியான கட்டுப்பாடுகள் போட்டிருக்கிறார். பத்திரிகையில படிக்கேல்லையோ என்டன்.

அதில ஒண்டு சொல்லிச்சுது மாற்றத்திற்காக வாக்களித்தேன் என்டு பேஸ்புக்கில போடவேண்டும் அதுதான் எடுக்கிறம் என்டு. என்னடா நம்பி மாற்றம் என்டன். இந்த முறை ஒருசிலருக்கு நல்ல பாடம் புகட்ட வேணும் ஐயா.. அதுதான் இந்த மாற்றத்துக்கான வாக்கு என்டான் பொடியன். சத்தியமா ஒண்டும் எனக்கு விளங்கையில்லை.

வன்னிப் போரில் எங்கட தமிழ் சனம் பட்டபாடு கொத்துக் கொத்தாய் சனம் இறந்து போனதையும் தாய் தந்தையை இழந்து இண்டைவரைக்கும் இல்லங்களில அன்புக்காக ஏங்கித் தவிக்கிற பிஞ்சுகளை நினைக்க நெஞ்சு வெடிக்குது. இதுக்கெல்லாம் நீதி கிடைக்கவேணும். நீதியைப் பெற்றுத்தருவினம் என்டு யாருக்கு வாக்களிச்சமோ அவையள் கோடிகளுக்கு விலை போனதை நினைச்சுத்தான் இந்த முறை என்ர வாக்கை அளிச்சனான். தேர்தல் முடிவுகள் எல்லாம் பெரிய மாற்றத்தோட வந்தது. இனியும் எங்கட தலைமை திருந்தாட்டி இன்னும் பேரடியைச் சந்திக்கும் என்டு நினைச்சுக் கொண்டிருக்க செல்பி எடுத்த இளம்வட்டு கூப்பிடுது. ஐயா மாற்றத்துக்கான வாக்கு எப்படி என்று. ஓ..... என்ர சிந்தனையும் அந்த இளசுகளின்ர சிந்தனையும் ஒண்டா இருக்கு என்டு மனம் நிறைவாயிருந்தது.




## சிதறுண்டுபோன வார்த்தைகள்

இன்றே வா!
என் இதயக் கதவுகள்
உன் வருகைக்காய் காத்திருக்கும்

உன் வீட்டு சீதனமாய்
உன்னுடன் எடுத்து வர
எதுவும் வேண்டாம்

எல்லாமாய் நீ வந்தால் போதுமென்றேன்

தங்கக் கொலுசில்லை- என்னவளே
நீ எனக்குத் தங்கம்

பூவாலே மஞ்சமிட தேவையில்லை
பூவே நீ உறங்கு
என் மார்மீது

என் வீட்டு அறைகளில்
எது அதிகமில்லையோ- ஆனாலும்
அது நிறைய அன்பு என்றேன்

ஆயுள் வரை
கூடவர நானொருவன்
ஆசையாய் காத்திருப்பேன் என்றேன்

சீச்சீ..
இது பொய் என்றாய்
தாமரை உன் முகம் தளர்ந்து போய்
தயங்கி நின்றாய்...

புழுதியில் வீழ்ந்து பொசுங்கியது
என் காதல் வரிகள்

மா. சிவா
கரவெட்டி

## மனிதம் கொண்ட புது உயிரி

மாற்றங்களுக்கு மட்டுமே
மண்டியிட்டு கிடக்கும் உலகில்- இனி
மாறவேண்டியவன் நானே

அகிலத்து அரங்கில் ஓர்
அந்தஸ்து காண- என்
அடையாளம் தொலைத்து
மாறவேண்டியவன் நானே...

தர்மவழி நின்று...
தலைகுனிந்த பின்பும்
உதவி பல செய்தும்... உறவுகள்
உதறித் தள்ளிய பின்பும்
பிறர் தேவைக்கு மட்டுமே...
பிறவி நான் கொண்ட பின்பும் இங்கு
மாறவேண்டியவன் நானே

ஓடும் காலச்சக்கரம் எனக்கு
ஒவ்வாமை ஆன பின்பு இனியும்...
மாறவேண்டியவன் நானே

மனிதனாய் மட்டும்
மரித்திட நினைக்கும்- பெரு
மாந்தர்கள் நடுவே...
மனிதத்துடன்
மண்ணுள் உறங்க நினைக்கும் நான்
மாறவேண்டியவனே...
மனிதனாய் இல்லை
மனிதம் கொண்ட புது உயிரியாய்...

வேலணையூர் தனு

## மனிதனாய் வாழ்ந்திடப் பழகு

இயற்கையாய் வளர்வது காடு- இதை
அழித்தால் மனிதர்க்கு வரும் கேடு
வானம் பொழியும் மழையைப் பாரு- இதை
சேமித்தால் விளையும் பயிர்கள் பாரு
இயற்கைப் பசளையை போடு- இதனால்
என்றும் உனக்கு வராது கேடு
உன் பிள்ளைக்கு நீயே ஊட்டுகிறாய் நஞ்சு
நோய் வந்தால் வெடித்துவிடும் உன் நெஞ்சு
தெரிந்தே செய்கிறாய் தவறு- நீயும்
திருந்தாவிடில் பிள்ளையைத் திருத்துவது தவறு
வீட்டினில் செய்திடு சிறுதோட்டம்- உன்
வாழ்வுக்கு வழிவகுக்கும் இத்திட்டம்
சின்னதாய் சேமிக்கும் பழக்கம்- ஒருநாள்
சிறப்பாய் அமைவது வழக்கம்
மழைநீரைச் சேமித்து வைத்திடு- அதை
வீணாக்காமல் என்றும் பயன்படுத்திடு
மதுவை விலக்கிடப் பாரு என்றும்- உனக்கு
மதிப்பளிக்கும் நீ வாழ்ந்திடும் ஊரு
மனிதனாய் வாழ்ந்திடப் பாரு-உனக்கு
நல்ல மனிதன் என்று கிடைக்கும் பேரு
ஊருக்கு உதவிடும் எண்ணம்- உன்
வாழ்க்கையை சீராக்கும் திண்ணம்

குட்டிநகர் பாவரன்
மகாறம்பைக்குளம்
வவுனியா

## பழி தீர்ப்பு

விடிந்தது வானம் என்று
வாயாலே வம்பளந்து
தெருவுக்கொரு சேவைமையம்
சேருங்கள் எங்களுடன்- என
கழகங்கள் அமைத்து
கலகங்கள் செய்தாரே

வடிவுக்கொரு வார்த்தையென்று
இடித்துரைப்பு ஏராளம்
ஊருக்கே உனக்கில்லையென்று
கை நீட்டல் தாராளம்


சைவமும் தமிழும் தழைத்தோங்கும்
நல்சான்றோனின் சேவைகளை
தள்ளி தள்ளி புறம் தள்ளி
என்ன கண்டீர் எதைக் கண்டீர்?

தின்ன வழியின்றி தமிழன் நிலை
தேரோடுதென்கிறீர் வீதியிலே
அள்ளக்குறையாத தரணியதை
அள்ளி ஏப்பம் விட்டதை யாரறிவார்?


கோடிகள் வாங்கினீர் ஒத்துக்கொண்டீர்
கொஞ்சமேனும் மக்களுக்கு தெளித்தீரோ?
கோடியாய் சுருட்டி மாடிகட்டி
மரண பூமியில் உல்லாசம்

வந்தது எமக்கொரு சந்தர்ப்பம்
வடுக்களைத் தீர்த்திட திடசங்கல்பம்
முந்தி நீர் எப்படி அப்படியே
மாறவும் இல்லை மாறவும் மாட்டீர்


மாவை. நா.கஜேந்திரன்







# மௌனத்தின் தேடல்- 387



## ஏங்குதே ஏழை நெஞ்சு

சாலையோரத்தின் கரையிலே
ஒரு பிடி சோற்றுக்காக
ஏங்குதே? ஏழை நெஞ்சு!
சாலையில் உண்டு தூங்கும்
சரித்திரங்கள் மறையும் வரை
ஏழை வாழ்வில் என்றுமே! விடியலில்லை
ஏழைத்தாய் எதற்கோ ஏங்க
பசியின் அழுங்குப் பிடியில்
பிஞ்சுப் பாலகனின் கரங்கள்- பெத்தவளின்
விழிநீரைத் துடைத்து- அழாதேம்மா!
எனக்கு இப்ப பசிக்கல- பசிக்குதுன்னு
சும்மாதான் சொன்னேன்- எனத்
தேற்ற நினைக்கின்றது
ஏழைப் பிஞ்சு நெஞ்சம்

ச. காயத்திரி
கொடிகாமம்

## உண்மைத் தலைவன்

தன் குடும்பத் தலைவனின்
கதி அறியாத தாய்
மனக்கவலையில் சோர்ந்துவிட்டாள்
பிரிவின் வேதனையில் அழுகிறாள்
பிரிவின் வேதனையை உணராத
பிள்ளை தாய்ப்பாசமுடன்
கண்ணீரைத் துடைக்கிறான்
நிர்க்கதியான மக்களின்
துன்ப துயரங்களை துடைப்பவனே
உண்மையான நேசமுள்ள
மக்கள் தலைவன்!

சி.சுகிர்தமலர்
உரும்பிராய்

## கண்ணீர் துடைக்கும் கரம்

கண்ணீர் துடைக்கும் கரம்
காலங்கள் பல கடந்தாலும்
காயங்கள் ஆறாத மனதோடு
அன்னை சிந்தும் கண்ணீரை
அன்புடன் துடைக்கும் சிறுவனே!
அறுதியிட்டுச் சொல் இங்கே
வறுமை எனும் தடைக்கல்லை
கல்வி எனும் ஒளிக்கீற்றால்
உறுதியாக உடைத்திடுவேன்

பீ.மேரிசிந்துஜா
மிருசுவில்

## வாக்கும் வறுமையும்

தான் ஆடாவிட்டாலும்
தசையாடுமென்பார்கள்
தாயின் கண்ணீரைத் துடைக்கும்
சேயின் கனிவு இதையுணர்த்தும்
வாக்கு வேட்டைக்கு வருகையில்
வாக்குறுதிகள் தாராளம்
பசுமைப்புரட்சி போல்- பின்
வறுமையே புரட்டியெடுக்கும்
திட்டங்கள் நிறைவேறாமல்
மட்டம் தட்டலே நடக்கும்
இனியாவது திட்டமிட்டபடி
இவை ஏழைகளைக் காக்கவேண்டும்

க.நாகராசா
நுணாவில்

## கண்ணீர் பலதரப்பட்டது

பெற்ற தாயின் கண்ணீரைத்
துடைக்கும் சிறுவனே!
கண்ணீருக்கு காரணம் புரிந்ததா?
நீயோ சிறுவன்
உலகம் புரியாத பாலகன் அன்றோ
பலம் கொண்ட கண்ணீரோ
பலதரப்பட்டது
பசிக்கொடுமையா
யாரோ இழிவு செய்தானா?
உறவை இழந்தாயா?
எதுவானாலும் கண்ணீர்
துடைக்கும் சிறுவனே!
காலமெல்லாம் உன் ஆறுதல் வேண்டும்
உன் அன்னைக்கு!

அபி குலமாலிகா
சங்கானை

## அழாதே அம்மா

என் கண்ணில்- நீர்
வர மறுத்த
உன் நெஞ்சில் -இன்று
கவலைகள் ஆயிரம்
என் கரம் கொண்டு
துடைக்கிறேன்-உன்
கண்ணீர்
இனி ஒருமுறை
அழாதே அம்மா என்று...

அலெக்ஸன்
குருநகர்

## அன்னையின் துடிப்பு

ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அம்மாவைப் போல் வருமா?
எமக்கு வருத்தமென்றால்
பத்தியம் இருந்து பாதுகாப்பாள்
உணவில்லாதவேளை
எமக்கு ஊட்டிவிட்டுத்
தான் பட்டினி கிடப்பாள்
அத்தகைய அன்பு அம்மா
கண்ணீர் வடிப்பதை
பொறுக்க முடியாத பிள்ளை
துடைத்துவிடுகிறான் பாசத்தோடு

அகிம்சா
மட்டுவில் தெற்கு

# மௌனத்தின் தேடல் -388



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகள் மற்றும் வியாசர் பதிலுக்கான கேள்விகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 21.02.2018 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.


குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

சி.காசிப்பிள்ளை, கொடிகாமம்

சிறுகதை

# கடவுளை நம்பினோர்



அந்த ஊரிலே விநாயகம் சிறந்தொரு விவசாயி எனப் பலராலும் பேசப்படுவதுண்டு. அவரின் வீட்டிற்கு அருகாமையிலே ஒரு ஏக்கர் நிலத்தில் தோட்டமிருந்தது. இத்தோட்டத்தில் வெங்காயம், மிளகாய், கத்தரி எனப் பல பயிர்களையும் காலநிலைக்கு ஏற்ற மாதிரிப் பயிரிடுவது வழக்கம். வேலியோரங்களில்நடப்பட்ட வாழை மரங்கள் உயர்ந்து வளர்ந்து நின்றமை பார்ப்போர் கண்களைக் கவரும் காட்சியாகவே இருந்தன.

மனித இனத்திற்குத் தீங்கிழைக்கும் புகையிலை போன்ற பயிர்களை விநாயகம் ஒருபோதும் உற்பத்தி செய்வதில்லை. இதே போல இரசாயனப் பசளைகளையும் கிருமி நாசினிகளையும் முடிந்தளவு தவிர்த்தே விவசாய உற்பத்திகள் நடைபெற்றன. இதனால் அவ்வூரிலே அவர் உற்பத்தி செய்யும் மரக்கறி வகைகளுக்கு நல்ல சந்தை வாய்ப்பிருந்தது.

விநாயகம் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டாலும் என்றும் எப்போதும் அவர் நினைவுகளெல்லாம் கடவுளிடம் ஒன்றரக் கலந்ததாகவே இருந்தன. அதிகாலையில் தன்வீட்டின் பூசை அறையில் குறைந்தது அரை மணி நேரமாவது வழிபாடு செய்வார். மாலையிலும் இவ்வாறே தொடரும். இதை விட தோட்டத்தின் மத்தியில் சிறிய பிள்ளையார் சிலையொன்றை வைத்து அதற்குடம் தினமும் மலர்கள் தூவி கண்ணீர் கசிய கைகூப்பிய பின்பே தோட்ட வேலைகளைத் தொடங்குவார்.

இப்படியே இவ்வுலகத்தையும் உயிர்களையும் படைத்த கடவுளை தினமும் வணங்கி வந்ததனால் அவரின் உள்ளம் எவ்வித கொதிப்புமின்றி அமைதியாகவேயிருந்தது. இதன் பயனாய் ஒருபோதும் பொய் பேசியதில்லை. மற்றவர்களைத் துன்புறுத்தும் வார்த்தைகளைச் சொல்வதுமில்லை. பிறரின் துன்பங்களைக் கண்டு மனம் வருந்துவதுடன் அதை அகற்றுமாறு கடவுளிடம் மன்றாடி நிற்பார். தம்மூரிலுள்ள ஏழைகளுக்கும் முடிந்தளவு உதவிகள் செய்வார்.

கடவுளின் கருணையென்று தான் சொல்லலாம். கடந்த இரண்டு வருடங்களாக விநாயகத்திற்கு பல இலட்சம் ரூபாக்கள் வரையில் விவசாய உற்பத்திகள் மூலம் இலாபம் பெறக் கூடியதாக இருந்தது.

இதைக்கண்ட விநாயகத்தின் மனைவி பாக்கியம் தானும் தோட்ட வேலைகளில் முன்னரையும் விட அதிக நேரம் உதவிசெய்யத் தொடங்கினாள். பாக்கியம் மட்டுமல்ல மகள் மரகதமும் மாலை வேளைகளிலும் லீவு நாட்களிலும் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுதல், விற்பனைக்காக மிளகாய், கத்தரி, தக்காளி ஆகிய பயிர்களில் காய் பிடுங்குதல் போன்ற வேலைகளில் ஈடுபட்டாள். மரகதம் பல்கலைக்கழகத்தில் இசைத்துறையில் கல்வி கற்றாள். கல்வி கற்றலாலும் பிரயாணத்தாலும் ஏற்படும் களைப்பு தோட்டத்தில் நுழைந்தவுடன் காற்றுடன் பறந்துவிடுவது போலிருந்தது அவளுக்கு.

பச்சைப்பசேலென தலைதூக்கி நிற்கும் பலவகையான பயிர்களும் அவற்றிலுள்ள பூக்களையும் காய்களையும் காற்று அசைத்தாட்டும் போது அதன் அழகை எப்படிச் சொல்வது? இது மட்டுமா? தோட்டத்தின் மத்தியிலுள்ள பிள்ளையார் சிலையைச் சுற்றி நிற்கும் சூரியகாந்தியும் றோசாக்களும் நூற்றுக்கணக்கான பூக்களுடன் காணப்படுவதைப் பார்த்தால் மனம் எவ்வளவு சந்தோசப்படுகுது. இதைவிடத் தினமும் மரக்கறி வகைகள் விற்பனையால் வரும் வருமானமும் மனமகிழ்வுக்குரியதே. இதையெல்லாம் தொகுத்துப் பார்க்கும் போது விவசாயம் செய்வது போல மகிழ்ச்சியான தொழில் வேறில்லை என்றே மரகதத்திற்குப் பட்டது.

விநாயகத்தின் மனைவி பாக்கியமும் குடும்ப விடயங்களில் மட்டுமல்ல நாட்டு நடப்புக்களிலும் அதிக கவனம் செலுத்துபவர். ஓய்வாக இருக்கும் வேளைகளில் பக்கத்து வீடுகளில் ஏதாவதொரு பத்திரிகையை இரவல் வாங்கியாவது நெருக்கடி அதிகரித்த அரசியல் நிலைவரங்கள்... விபத்துக்களால் தொடரும் மரணங்கள்... மலிந்து போன கேரளக் கஞ்சாக் கடத்தல்கள்... கொள்ளையர்களின் அட்டகாசங்கள் எனத் தொடர்கதையாகும் செய்திகளை அறிந்து கொள்வாள்.

வழக்கம் போல் பக்கத்துவீட்டு புஷ்பலிங்கத்திடம் அன்றைய பத்திரிகையை வாங்கிப் பார்த்தாள் பாக்கியம். முதற்பக்கச் செய்தியாக தாவடி, இணுவில், மானிப்பாய் ஆகிய இடங்களிலுள்ள பல வீடுகளில் பணமும் நகையும் கொள்ளை. வீட்டிலிருந்தோர் வாள்வெட்டுக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தொடர்ந்தது அச்செய்தி.

இதை வாசித்தவுடன் பாக்கியத்திற்கு தலை விறைத்தது. உடலெங்கும் ஒருவித நடுக்கம் ஏற்பட்ட நிலையில் மகள் மரகதத்தைக் கூப்பிட்டு இன்றையான் பேப்பரைப் பாரும்... பல இடங்களில் வாள்வெட்டுக் குழுவினரால் கொள்ளைகள் நடந்திருக்கு... அப்பாவுக்கு சொன்னாலும் கேட்பதாயில்லை. நகைகளையும் காசையும் ஒரு பழைய பெட்டகத்தில் வைத்துப் பூட்டியிருக்கிறார்.

அம்மா... உதைப்பற்றிய சிந்தனைகள்தான் என்னையும் ஆட்டிக் கொண்டிருக்கு. நகைகளையும் காசையும் வீட்டில வைத்திருக்கிறதாலை எங்கட உயிருக்கே ஆபத்து வரலாம். வாருங்கோ... பேப்பரையும் காட்டி அப்பாவோடை கதைச்சுப் பாப்பம்.

அம்மாவும் மகளும் தோட்டத்தில் நுழைந்தவுடன் இஞ்சை பாருங்கோ... இன்றையான் பேப்பரை... என அம்மா தொடர்ந்தாள். எத்தினை இடத்தில வாள் வெட்டுக்குழு தன் கைவரிசையைக் காட்டி அள்ளிக் கொண்டு போயிருக்கான்கள் என்று... உங்களுக்குப் பல தடவை சொல்லிப் போட்டன் காசைக் கொண்டு போய் அரச வங்கியொன்றிலை வைப்புச் செய்துபோட்டு நகையளை எங்காவது மண்ணுக்கை புதைத்து விடுவமென்று. அம்மா சொல்லி வாய் மூட முன்பே மகள் மரகதம் தன்னுள்ளத்திலுள்ளதையும் வெளிப்படுத்தினாள்.

காசை மட்டுமல்ல நகைகளையும் வங்கியில் பாதுகாப்பாக வைக்கலாம். எங்களுக்குத் தேவையான போது எடுக்கலாம். இதற்காக சிறிய தொகையையே கொடுக்க வேண்டி வரும்'. வங்கியில் காசை வைப்பிலிடுவதனால் வட்டியும் கிடைக்கும் என்றாள்.

விநாயகம் இதையெல்லாம் கேட்ட பின் தொடர்ந்தார். எங்களுக்குக் கடவுளைத் தவிர வேறு யாருமே பாதுகாப்பாக இல்லை. வன்னிப் பகுதியில் நடந்த யுத்தம் எத்தனை ஆயிரம் பேருக்கு எவ்வளவோ துன்பங்களைச் சுமத்தியது தாய் தந்தையை இழந்தும் உடன் பிறப்புகளை இழந்தும்... பிள்ளைகளை இழந்தும்... கை கால்களை இழந்தும்.... இன்று வரை கவலையுடனேயே கண்ணீர் சிந்திக் கொண்டேயிருக்கிறார்கள்.

" யுத்த காலத்தில் நாங்களும் அங்கேதான் இடம்பெயர்ந்து இருந்தோம்" எங்களுக்கு ஏதாவது இழப்புக்கள் வந்ததா? நான் தினமும் கடவுளை நினைத்து மன்றாடினேன். கண்கள் கசிய கையேந்தினேன். இதன் பயனாய் எங்களுக்கு எவ்விதத் துன்பமுமின்றி வீடு வந்து சேர்ந்தோம். என்றும் கடவுளை நினையுங்கள்... எப்போதும் அவனையே நம்புங்கள். எல்லாம் நன்றே நடக்கும் என்றார். அப்பாவின் கதையைக் கேட்ட மகளும் தாயும் கடவுளை நினைத்தவாறே மௌனமாயினர்.

சில நாட்கள் நகர்ந்தன. அன்று அமாவாசை தினம். பின்னிரவு நான்கு மணியளவில் விநாயகம் வீட்டினுள் நுழைந்த நான்கு கொள்ளையர்கள் வாளினைக் காட்டி பெட்டகத்திலிருந்த நகைகளையும் பணத்தையும் அள்ளிக் கொண்டு இரு மோட்டார் சைக்கிளில் வேகமாக ஓடினார்கள்.

சற்று நேரத்தில் விநாயகம் வீட்டிற்கு அண்மையிலிருந்த வேம்படிச் சந்தியில் விபத்துக்குள்ளாகி இரத்த வெள்ளத்தில் மூச்சுப் பேச்சின்றிக் கிடந்தனர்.

இவ்விரு சம்பவங்களையும் அறிந்த அயலவர்கள் கைபேசி மூலம் பொலிஸாருக்குத் தெரிவித்தனர்.

உடனே பொலிஸாரும் அவ்விடத்திற்கு வரலாயினர். காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு அனுப்பியதுடன் மோட்டார் சைக்கிளின் கீழிருந்த பொதியில் பெருந்தொகையான பணமும் நகையும் இருப்பதைக் கண்டனர். அவை யாவும் விநாயகம் வீட்டில் கொள்ளையடிக்கப்பட்டவையா என்பதை உறுதிப்படுத்துவதற்காக அவர்களை பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு உத்தர விட்டனர்.

அப்போது விநாயகம் தன்னைக் கடவுள் காப்பாற்றியுள்ளார் என்ற மகிழ்ச்சியினால் கண்கள் கசிய நின்றார். இதைக் கண்ட பாக்கியம் கடவுளை நம்பினோர் ஒருபோதும் கைவிடப்படுவதில்லை என்பது முற்றிலும் உண்மையே என நினைத்தாள். மகள் மரகதத்தின் சிந்தனைகளும் இவ்வாறே எண்ணி கடவுளையே சுற்றிச் சுழன்றன.

# மூவரின் முடிவு!

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவி வகிக்கிறார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக உள்ளார்.







அரசில் உயர் பதவிகளில் இருக்கும் மைத்திரி-ரணில் ஆகியோர் நாட்டின் ஆட்சி அதிகாரத்திற்குரிய கட்சிகள் என்று சாசனம் எழுதியது போன்று மாறி மாறி ஆட்சிக்கு வரும் கட்சிகளின் தலைவர்களாகவுள்ளனர்.

மைத்திரியின் கட்சித் தலைமைப் பதவிக்கு தற்போது பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. ஆனால், ரணிலின் கட்சித் தலைமைப் பதவிக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் பல சந்தர்ப்பங்களில் இத்தகைய நிலைமையை ரணில் எதிர்கொண்டிருந்தார்.

இது ஒருபுறமிருக்க, 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷவை ஆட்சி அதிகாரத்திலிருந்து அகற்றுவதற்காக இணைந்த இவ்விரு தலைவர்களும் இப்போது பிரிந்து விடுவதே சிறந்தது என்ற முடிவுக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக பதவி வகித்த மைத்திரிபால சிறிசேன அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராகவும் இருந்தார்.

சுதந்திரக் கட்சியின் தலைவராக இருந்த மகிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதித் தேர்தலில் எதிர்த்துப் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேன ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான கூட்டு எதிரணியின் பொது வேட்பாளராக களமிறங்கி வெற்றி பெற்று நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவி வகித்து வருகிறார்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக வருவதற்கு ரணில் விக்கிரமசிங்கவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் முக்கிய பங்காற்றியிருந்தனர்.

நீண்டகாலமாக இரகசியத் திட்டம் தீட்டி மைத்திரியை ஜனாதிபதியாக்கி மகிந்த ஆட்சிக்கு முடிவுகட்டினர்.

ரணிலின் இராஜதந்திரமே இதைச் சாத்தியப்படுத்தியது.

நிறைவேற்று ஜனாதிபதியாக பத்தாண்டுகள் பதவி வகித்த மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையாகவும் ஆட்சிக்கு வருவதை மக்கள் விரும்பவில்லை என்பது புலப்பட்டது.

ஆனால், மைத்திரி-ரணில் ஆட்சிமீதும் மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டுவிட்டது என்பதை நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

பத்தாண்டுகளுக்குப் பின்னர் மகிந்த மீது மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பு மைத்திரி-ரணில் மீது மூன்றாண்டுகளில் ஏற்பட்டுவிட்டது.

எவ்வளவோ எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்திய மக்களுக்கு நல்லாட்சியென்றுசொல்லும் இந்த அரசுவெறும் கண்துடைப்பு வேலைகளைத்தான் செய்தது.

இரண்டு கட்சிகள் இணைந்த தேசிய அரசு என்ற போர்வையில் ஆளும் தரப்பைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு அமைச்சர், இராஜாங்க அமைச்சர், பிரதி அமைச்சர் என்று பதவிகள் வாரியிறைக்கப்பட்டன.

மகிந்த அணியில் இருந்து வந்து இணைந்தால் அமைச்சுப் பதவி வழங்கப்படும் என்று ஆசை ஊட்டப்பட்டது.

தேசிய அரசின் தோல்வி இதில் ஆரம்பிக்கப்பட்டது. இப்போது உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளால் தள்ளாடிக்கொண்டிருக்கிறது. விரைவில் அரசியல் மாற்றம் வரும் என்ற நிலை தவிர்க்கப்பட முடியாத கட்டத்தை எட்டியுள்ளது.

மகிந்தவின் மீள்வருகை மைத்திரியையும் ரணிலையும் நிலைகுலைய வைத்துள்ளது என்பதை யாரும் மறுதலிக்க முடியாது.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தனித்து ஆட்சி அமைக்கும் காய்நகர்த்தலில் தீவிரம் காட்டி வருகின்றன.

தெற்கு அரசியல் இவ்வாறு பரபரப்பாகவுள்ள நிலையில் மத்திய அரசுடன் இணைந்து பயணித்த நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க ஏனைய கட்சிகளின் உதவியைக் கோரியுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தனிப் பெருங் கட்சியாக நிலைத்து நின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இந்நிலை ஏற்படும் என்று யாரும் எதிர்பார்த்திலர்.

வடக்கு மாகாணசபையில் அறுதிப் பெரும் பான்மையுடன் ஆட்சியமைத்து பாராளுமன்றிற்கு 16 உறுப்பினர்களை அனுப்பி எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற்ற கட்சிக்கு இந்நிலை ஏற்படும் என்று கனவிலும் நினைத்திருக்கமாட்டார்கள்

இத்தகைய பின்னடைவு ஏற்படக் காரணம் என்ன?

முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து பதவியைப் பறிக்க முற்பட்டவர்கள் யாழ். மாநகரசபைக்கு முதல்வரை நியமிக்க மாற்றுக்கட்சிகளின் ஆதரவைக் கோரிநிற்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது ஏன்? எல்லாவற்றுக்கும் தலைமை எடுத்த தவறான முடிவு தான் காரணம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பொறுத்தமட்டில் இரா.சம்பந்தன் எடுக்கும் முடிவுகளை விட அக்கட்சியின் ஊடகப் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் எடுக்கும் முடிவுகள் தான் அதிகம்.

அதிலும் குறிப்பாக வடக்கு-தெற்கு அரசியல் விவகாரங்களில் சுமந்திரனின் தலையீடு அதிகம்.

கிழக்கு மாகாணத்தில் மட்டும் சில சந்தர்ப்பங்களில் சம்பந்தனின் முடிவுகள் செல்லுபடியாகின்றன.

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளின் பின்னர் கூட இரா. சம்பந்தன், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஆகியோரின் அரசியல் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டு சுமந்திரனின் கை மேலோங்கியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

தமிழரசுக் கட்சியைத் தவிர தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளாகவுள்ள ரெலோ, புளொட் ஆகியவற்றின் தலைவர்களின் தலையீடும் தவிர்க்கப்பட்டே வருகின்றது.

யாழ்.மாநகரசபை முதல்வர் நியமனம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னிலை பெற்ற சபைகளுக்கு தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளர்களை நியமிப்பதிலும் சுமந்திரனின் முடிவே இறுதி முடிவாக உள்ளது.

ஆக, மத்தியில் மைத்திரியும் ரணிலும் எடுத்த தவறான முடிவுகள் மகிந்தவை மீண்டும் எழுச்சி பெறவைத்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் சுமந்திரனின் தவறான முடிவுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதோடு கட்சியையும் பிளவு பட வைத்துள்ளது.

ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி வெளியேறிய போதும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப். வெளியேறியபோதும் மௌனமாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தற்போது நடைபெறும் பதவிப் பங்கீடுகளில் தலையிடாது ஒதுங்கியிருந்தால் எதிர் காலத்தில் மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்ட கட்சியின் தலைவர் என்ற அவப் பெயரைப் பெற நேரிடும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருக்கும் சம்பந்தன் பல சந்தர்ப்பங்களில் பொறுப்பாக செயற்படவில்லை. அதில் பிரதானமானது வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது நடக்கிறது நடக்கட்டும் என்று இருந்தமை.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு பாரியபின்னடைவு ஏற்பட இது பிரதான காரணமாயிற்று.

முதலமைச்சரை அகற்ற நினைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை அகற்றவேண்டும் என்ற மன நிலையை தமிழ் மக்கள் மனங்களில் ஆழமாகப் பதிய வைத்ததற்கான பெறுபேறே உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் எனலாம்.

தலைமைப் பதவியில் பெயருக்கு இருப்பதால் தலைமைக்குக் கட்டுப்படாமல் தலைமையைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஒருசிலர் ஈடுபடத் தலைப்பட்டுள்ளனர்.


அதன்விளைவு வெளிப்படத் தொடங்கிவிட்டது. மத்தியில் மைத்திரியும் ரணிலும் தலைமையைத் தக்க வைக்கப் போராடுகின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் தலைவர் பதவியை அடைய தலைவராகச் செயற்படுகின்றனர்.

ஆக, இந்த மூவரின் முடிவும் தவறானது என்பதை உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் ஊடாக மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர் என்பதே உண்மை!

**எஸ்.ஆர்.கரன்**



# ராஜீவ் கொலை உத்தரவிட்டது யார்? உடையும் மர்மங்கள்



## விறு விறு தொடர் 05

KP என்கிற குமரன் பத்மநாதன் இப்படிப் பேட்டி அளித்திருந்தார்.

இந்த KPக்காகத்தான், நான் உட்பட இன்னும் பல பேரை சி.பி.ஐ. கொடூரமாக சித்திரவதை செய்தது. ஆனால் அவர் இலங்கையால் கைது செய்யப்பட்ட பிறகு, முறைப்படி அவரை இந்தியாவுக்குக் கொண்டுவந்து விசாரிக்க வேண்டும் என்று முனைப்புக் காட்ட வில்லை. ஏன்? இத்தனைக்கும் KP-யைக் காவலில் எடுக்க இந்தியாவுக்குத்தான் முதல் உரிமை உண்டு. சர்வதேச அரங்கில் 'இன்டர்போல்' சிவப்பு எச்சரிக்கையை இந்தியாதான் முதலில் அறிவித்தது. மலேசியாவில் அவர் பிடிபட்ட தகவல் அறிந்த உடனேயே, இந்தியா அவரைத் தங்களிடம் ஒப்படைக்கக் கேட்டிருக்க வேண்டும்.

ஆனால் நடந்ததென்னவோ வேறு.

அது மட்டுமல்ல... நாட்டின் முன்னாள் பிரதமர் கொலை வழக்கில் தேடப்பட்டு வந்த முக்கிய குற்றவாளியான KP-யைச் சந்தித்துப் பேசிய விடயத்தைக்கூட இரு நாட்டு மக்களிடமும் மறைத் திருக்கிறது சி.பி.ஐ. என்ன ஒரு கள்ள மௌனம்? இரண்டாண்டுகள் கழித்து KP-யே பேட்டி கொடுத்த பிறகுதான் விடயம் வெளியே தெரிந்தது என்றால் என்ன அர்த்தம்? அப்போது, இன்றைய பிரதமர் நரேந்திர மோடி கசப்பாக உதிர்த்த வார்த்தைப்படி 'மா-பேட்டா' (அம்மா-பிள்ளை) ஆட்சிதான் மத்தி யில் இருந்தது.

சுமார் 10 ஆண்டுகள், வானளாவிய அதிகாரங்களைக் கைக்கொண்டிருந்த அந்த ஆட்சி, உண் மைச் சதியாளர்களைக் கண்டுபிடிக்க சிறு துரும்பை யும் அசைக்கவில்லை, ஏன்? சி.பி.ஐ. விட்ட ஓட்டைகளை இன்னும் கண்டுபிடிக்க வில்லை, ஏன்?

'ஜெயின் கமிஷன்' இறுதி அறிக்கை எழுப்பிய வினாக்களுக்கு இன்னமும் விடை தேடவில்லையே, ஏன்?

ராஜீவ் கொலை வழக்கில் 26 ஆண்டுகளைத் தாண்டி சிறையில் இருக்கும் இரா.பொ. இரவிச்சந்திரன் எழுதியுள்ள 'சிவராசன் டாப் சீக்ரெட்' என்ற புத்தகம், இந்த வழக்கு பற்றி அவிழ்க்கப்படாத பல முடிச்சுகளைக் கண்முன் நிறுத்துகிறது. சட்டத் தரணி திருமுருகனிடம் ரவிச்சந்திரன் கூறியதைப் பத்திரிகையாளர் பா. ஏகலைவன் புத்தகம் ஆக்கி யுள்ளார். கடந்த மூன்று இதழ்களில் வெளியானதன் தொடர்ச்சியாக, அந்தப் புத்தகத்தில் உள்ள மர்மங்கள் சில...

வரலாறு போர்களால் மட்டுமல்ல, படுகொலைகளாலும் நிரம்பியது. அதிலும், 'அரண்மனைச் சதி' எனப்படும் உட்பூசல்களும் துரோகங்களும் ஏராளம். சுதந்திர இந்தியாவில் மூன்று பெரிய படு கொலைகள் நடந்துள்ளன. மகாத்மா காந்தி, இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி ஆகிய மூவரின் படுகொலைகளுக்குப் பின்னுள்ள உண்மையான சதியையும் அதற்கான காரணத்தையும் இந்த



"'பாவம் ஓரிடம், பழி ஓரிடம்' என்பார்கள். ராஜீவ் காந்தி படுகொலை எனும் பாவத்தைப் புரிந்தவர்கள் அதிகாரத்தின் பலனைச் சுவைக்க, புலிகள் இயக்கமும் அதன் ஆதரவாளர்களும் பழியைச் சுமந்தார்கள். இன்னும் சுமந்துகொண்டி ருக்கிறார்கள். ராஜீவ் படுகொலையில் குற்றச் சாட்டுக்குள்ளான விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமையும் கைதான 26 தமிழர்களும் இந்தியத் துணைக் கண்ட அரசியல் சதுரங்கத்தில் பலியிடப்பட்ட வெட்டுக்காய்கள் என் பதை இன்று உலகம் அறிந்தி ருக்கிறது. குண்டு வெடித்த நேரத்தில் வெள்ளை நிற அம்பாசிடர் கார் ஒன்று சம்பவ இடத்திலிருந்து விரைந்து தப்பிச் சென்றது. 'அதில் இருந்தவர்கள் யார், என்ன செய்தார்கள், அதில் என்ன இருந்தது' என இன்று வரை இந்தியப் புலனாய்வுப் பிரிவுகளோ, உளவுப் பிரிவுகளோ விடை சொல்லவில்லை."

நாட்டு மக்கள் இன்னும் முழுமையாக அறியவில்லை. இம்மாதிரியான மூடிமறைப்பு நடவடிக்கைகள் வரலாறு முழுக்கவே நடந்துள்ளன.

'பாவம் ஓரிடம், பழி ஓரிடம்' என்பார்கள். ராஜீவ் காந்தி படுகொலை எனும் பாவத்தைப் புரிந்தவர்கள் அதிகாரத்தின் பலனைச் சுவைக்க, புலிகள் இயக்கமும் அதன் ஆதரவாளர்களும் பழியைச் சுமந்தார்கள். இன்னும் சுமந்துகொண்டி ருக்கிறார்கள். ராஜீவ் படுகொலையில் குற்றச் சாட்டுக்குள்ளான விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமையும் கைதான 26 தமிழர்களும் இந்தியத் துணைக்கண்ட அரசியல் சதுரங்கத்தில் பலியிடப்பட்ட வெட்டுக்காய்கள் என்பதை இன்று உலகம் அறிந்திருக்கிறது. குண்டு வெடித்த நேரத்தில் வெள்ளை நிற அம்பாசிடர் கார் ஒன்று சம்பவ இடத்திலிருந்து விரைந்து தப்பிச் சென்றது. 'அதில் இருந்தவர்கள் யார், என்ன செய்தார்கள், அதில் என்ன இருந்தது' என இன்று வரை இந்தியப் புலனாய்வுப் பிரிவுகளோ, உளவுப் பிரிவுகளோ விடை சொல்லவில்லை.

ராஜீவ் படுகொலை நிகழ்ந்து 26 ஆண்டுகள் கழிந்துவிட்ட போதும், அந்தச் சதித்திட்டத்தின் பின்னணி என்ன, உண்மைச் சூத்திரதாரி கள் யாவர், ராஜீவைக் கொல்லப் பயன்பட்ட வெடி குண்டு எது, திட்டத்தை நிறைவேற்ற உதவிய நிதியாதாரம் எங்கிருந்து, எப்படி, எவரிடமிருந்து வந்தது என்பதற் கெல்லாம் இன்னமும் விடை இல்லை. சி.பி.ஐ. வசமிருந்த முக்கிய ஆதாரமான 91.5.7 ஆம் திகதி வயர்லெஸ் செய்தியைப் புறந்தள்ளிவிட்டு, சம்பந்த மில்லாத அப்பாவிகள் 26 பேர் மீது சதிப்பழி சுமத்தி விட்டு, உண்மைச் சதிகாரர்களைத் தப்பவிட்டார்கள்.

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை எனது சொந்த ஊர். ஈழத்தமிழர் போராட்டத்தால் ஈர்க்கப் பட்டு அங்கு சென்றேன். புலிகள் அமைப்பில் சேர்ந் தேன். பயிற்சி பெற்றேன். களங்களில் பங்கெடுத் தேன். தமிழகத்தில் செயற்பட வேண்டும் என்பதால், இயக்கத்திலிருந்து விலகி இங்கே வந்தேன்.

புலிகளின் உளவுப்பிரிவுத் தலைவர் பொட்டம்மானிடம் சொல்லிவிட்டுத்தான் வந்தேன். சி.பி.ஐ. குற் றச்சாட்டு தொடர்பாக ஆய்ந்து, உச்ச நீதிமன்றம் வெளியிட்ட என் மீதான தீர்ப்புரை 'பதினாறாவது குற்றவாளியாகிய ரவிச்சந்திரன் ஓர் இலங்கைக் குடிமகன்' எனத் தொடங்குகிறது. அது, சி.பி.ஐ. செய்த போலி ஆவணங்கள் தயாரிப்பில் ஒரு சிறுதுளியின் வெளிப்பாடு.

1991 மே 21 ஆம் திகதி ராஜீவ் படுகொலை நடந்தது. 24 ஆம் திகதி என்னைத் தேடி வந்தார் சிவராசன். அங்கே இருக்கும்போதே எனக்குச் சிவராசனைத் தெரியும். "ஏதாவது பிரச்சினையா?" என்றேன்.

"ஆமாம்" என்றார். "ஒரே போலீஸ் தொல்லையாக இருக்கிறது. எனக்குத் தெரிந்த இயக்கப் பெண் ஒருவரை உங்களுக்குத் தெரிந்தவர் வீட்டில் வைத்துப் பாதுகாக்க முடியுமா?" என்றார்.

(தொடரும்)

■ ஜூனியர் விகடன்

# அழிவிலிருந்து மக்களைக் காக்க பாதாள அறைகள்

அந்தக் கதவை சற்று சிரமப்பட்டுத்தான் இழுக்கிறார் அவர். பழைய கதவு ஆதலால்... "க்ரீச்..." என்ற சத்தத்தோடு அது திறக்கிறது. அதை முழுவதுமாக திறக்க முடியவில்லை. பாதிக்கும் மேல் திறந்ததால், உள் நுழைவது சற்று எளிதாகவே இருக்கிறது. ஆனால், ஒவ்வொருவராகத்தான் நுழைய வேண்டும். வெளியின் வெளிச்சத்திலிருந்து அந்த இருட்டு திடீரென கண்ணில் அறைகிறது. சில நொடிகள் தான்... அதற்குள் அந்த ஜெனரேட்டரை ஒன் செய்கிறார் அவர். சில ஸ்விட்ச்சுகளைத் தட்ட, சில நொடிகளில் அந்த இடத்தில் வெளிச்சம் பரவத் தொடங்குகிறது. துருப்பிடித்த இரும்பின் வாசத்தைக் காற்றில் உணர முடிகிறது. இன்னும் சில வாசனைகளும்கூட காற்றில் வருகின்றன. ப்ரூஸ் பீச் நம்மை அழைக்கிறார்.

இந்தப் பகுதி, கனடாவின் டொரண்டோ நகரிலிருந்து வடக்கில் 100 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. இது ஒரு சின்ன, அழகான கிராமம். இந்தக் கிராமத்தின் பெயர் ஹார்னிங்ஸ் மில்ஸ் (Hornings Mills). தனி மனிதனாக தன் மொத்த வாழ்வையும் அர்ப்பணித்து ஒரு மிக முக்கிய விடயத்தை இங்கு கட்டமைத்துள்ளார் ப்ரூஸ்.

நாம் உள் நுழையும் முன்னர், அந்தப் பழைய கதவின் மேற்பகுதியில் எழுதியிருந்ததை நாம் பார்க்க மறந்துவிட்டோம். அதுதான் இதன் பெயர். "ஆர்க் 2 " (Ark 2).

ப்ரூஸ் பிறந்து வளர்ந்தது, எல்லாமே அமெரிக்காவின் சிகாகோவில் தான். 1960களில் எலெக்ட்ரிகல் இன்ஜினியராக வேலை பார்த்து வந்தார். அந்தச் சமயம் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையேயான "பனிப் போர்" உலகம் முழுக்க பல தாக்கங்களையும், மாற்றங்களையும் ஏற்படுத்தியது. அதன் தாக்கம் அரசாங்கம் மட்டுமல்ல, பல தனிமனிதர்களையும் பாதித்தது. அதில் ப்ரூஸ்ும் ஒருவர். அந்தப் பனிப்போர் சூழல் அவரை அமெரிக்காவிலிருந்து நகர்ந்து, கனடாவுக்கு குடிபெயர வைத்தது. ஆனால், அந்தப் பதற்றச் சூழல் அவருக்குள்ளும் பல கேள்விகளை எழுப்பிய வண்ணம் இருந்தது. தொடர்ந்து, உலகம் முழுக்க நடந்த போர்கள் குறிப்பாக, அணு ஆயுத வளர்ச்சியும், அணு ஆயுதப் போரும் அவருக்குள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. தன்னளவில், தனக்கும், தன் குடும்பத்துக்கும், தன் ஊர் மக்களுக்கும் ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்தார். போர்களால் இந்த உலகம் பெரும் அழிவை சந்திக்கப் போகிறது என்றும் அவர் திடமாக நம்பினார்.

இது நோவா தாத்தாவின் கதை. ஒரு மிகப் பெரிய வெள்ளத்தை உருவாக்கி, பாவங்களும், வன்முறையும் நிறைந்த இந்த உலகை அழிக்க முடிவு செய்கிறார் கடவுள். அவர் நோவாவை ஒரு மிகப் பெரிய கப்பலை உருவாக்கி அதில் சில உயிரினங்களுக்கு அடைக்கலம் கொடுத்து காப்பாற்றச் சொல்கிறார். வெள்ளம் ஓய்ந்த பிறகு, அவர்கள் அனைவரும் சேர்ந்து ஒரு புது உலகைப் படைக்க வேண்டும் என்பது கடவுளின் ஆணை. அதன் படியே நோவா ஒரு மிகப் பெரிய கப்பலைக் கட்டி, ஒரு புது உலகை உருவாக்கினார். கிட்டத்தட்ட 950 ஆண்டுகள் வரை அவர் வாழ்ந்ததாகவும் சொல்லப்படுகிறது.





நோவாவின் கதை ப்ரூஸை பாதித்ததா என்று தெரியவில்லை... நோவாவுக்கும் இவருக்கும் என்ன தொடர்பு என்பதற்கும் பதில் "தெரியாது" என்பதே...

ஜீனுக்குச் சொந்தமாக அந்தப் பகுதியில் 12.5 ஏக்கர் நிலம் இருந்தது. அங்கு தான் செய்ய நினைத்திருக்கும் திட்டத்தை தன் நண்பர்களிடமும், சொந்தங்களிடமும் விபரித்தார் ப்ரூஸ். அனைவருமே அவரைக் கடுமையாகத் திட்டினர். ப்ரூஸ் ஒரு பெரும் முட்டாள் என்றனர். ப்ரூஸ் அமைதியாக தலைகுனிந்து நின்றார். எதுவும் பேசவில்லை. மனைவியிடம் கேட்டார்.

"உங்களுக்கு சரி எனப்படுவதை நீங்கள் செய்யுங்கள். நான் உடன் இருக்கிறேன்" என்று சொன்னார்.

10 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் 14 அடி ஆழத்தில் பெரிய குழியைத் தோண்டினார். அந்தப் பகுதி முழுக்கச் சுற்றி அலைந்து மொத்தம் 42 பழைய பேருந்துகளை வாங்கினார்.. அந்த 42 பேருந்துகளையும் அந்தக் குழிக்குள் இறக்கினார். அதன் மேல் கொங்கிறீட் பூசினார். பின்னர், அந்த 42 பேருந்துகளையும் கொஞ்சம், கொஞ்சமாக செப்பனிடத் தொடங்கினார். அதை ஒரு முழு "பாதாள உலகமாக" மாற்றினார். அங்கு எதுவும் இருக்கும். உண்ண உணவு, கழிவறை, படுக்கையறை, உடற்பயிற்சிக்கூடம், குழந்தைகளுக்கான விளையாட்டு அறை என பல விடயங்களை உருவாக்கினார். கிட்டத்தட்ட 500 பேர் பல மாதங்கள் இங்கு உள்ளேயே தங்கும் படியான ஏற்பாடுகளைச் செய்தார். டீசல் ஜெனரேட்டர், ரிவி, லாண்ட் லைன் போன், ரேடியோ எனப் பல விடயங்களையும் அதனுள் கொண்டு வைத்தார். ஒரு அறையில் பழைய சைக்கிளைக் கொண்டு கோதுமைமாவு அரைக்கும் வசதியையும்கூட ஏற்பாடு செய்து வைத்தார். தன் மொத்த சேமிப்பையும், சம்பாத்தியத்தையும் இதை உருவாக்கவே செலவிட்டார்.





"விரைவிலேயே உலகம் பெரும் போர்களைச் சந்திக்கும். அணு ஆயுதங்கள் அதிகளவில் பயன் படுத்தப்படும். அதிலிருந்து மக்களை மீட்க என்னால் ஆன சிறிய முயற்சிதான் இது" என்று தன் முயற்சியைப் பிரகடனப்படுத்தினார்.

அரசாங்க அதிகாரிகள் ப்ரூஸ் மீது வழக்குத் தொடுத்தனர். "சரியான அனுமதியின்றி மக்களுக்கு ஆபத்து விளைவிக்கும் இந்தக் கட்டுமானத்தை ப்ரூஸ் கட்டியுள்ளார்" என்று அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது.

"இது மக்களுக்கு ஆபத்து விளைவிக்கும் இடமல்ல. மக்களை ஆபத்தி லிருந்து மீட்க உதவும் இடம். இது உயிர் சம்பந்தப்பட்ட விடயம். போர்களும் அதில் மனித உயிர்கள் பலியாவதும் அரசுகளுக்கு வேண்டுமென்றால் சாதாரண விடயமாகத் தோன்றலாம். ஆனால், என்னால் அப்படி இருக்க முடியாது. என்னால் முடிந்த அளவுக்கு மனித உயிர்களை நான் காக்க வேண்டும். அதற்காகத் தான் இது..." என்று கடுமையாக வாதாடினார். கிட்டத்தட்ட 30 தடவைகளுக்கும் மேலாக, நீதி மன்றப்படிகள் ஏறி தன் பக்க நியாயத்தை நிலை நாட்டினார்.

இந்தக் கதைகள் எல்லாம் நடந்தது 1980களின் ஆரம்பக் காலங்களில். இதோ, இன்று 35 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. ஆனால், இன்றும் அதைப் பாதுகாத்து, பராமரித்து வருகிறார். 1. ப்ரூஸ் கட்டியுள்ள இந்த பாதாள பாதுகாப்பு பெட்டகத்துக்கு மொத்த 7 வாசல்கள் இருக்கின்றன.

2. கதவைத் திறந்ததும் "Decontamination" என்று ஒரு அறை. உள் நுழைபவர் அனைவருமே அங்கு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே அனுமதிக்கப்படுவர்.

இந்த தளத்தைப் பார்வையிட் உலகம் முழுவதுமிருந்து பல சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். அவர்களிடம் எந்தக் கட்டணங்களும் வாங்காமல், இலவசமாகத் தன் இடத்தைச் சுற்றிக் காட்டுகிறார்.

"எனக்குத் தெரியும் மக்கள் என்னைப் பைத்தியம் என்று சொல்கிறார்கள். ஆனால், எனக்கு அது குறித்து கவலையில்லை. என்னால் முடிந்ததை நான் செய்திருக்கிறேன். ஏதோ ஒரு நாள், இங்கு ஏதோ ஓர் பேரழிவு நிச்சயம் நடக்கும். அப்போது, என்னைப் பைத்தியம் என்று சொன்ன மக்களுக்கும் கூட இது உபயோகப்படும். என் காலம் முடிந்துவிட்டது.

ஆனால், என் வாழ்வை அர்ப்பணித்து நான் கட்டியுள்ள இதில்... சில உயிர்களாவது காப்பாற்றப்படும் என்று நம்புகிறேன்." என்று தளர்ந்து போன தன் கைகளை, அந்த இரும்புக் கதவுகளில் பிடித்தபடியே சொல்கிறார்.

# கிரிக்கெட் மீதான காதலால் தான் இன்னும் விளையாடுகிறேன் - யுவராஜ் சிங்

இந்தியாவிற்காக விளையாடுவது தனக்கு என்றுமே உற்சாகம் அளிப்பதாகக் கூறுகிறார் யுவராஜ் சிங். "நான் மேலும் இரண்டு அல்லது மூன்று ஐபிஎல் தொடர்கள் விளையாடுவேன்" என்று கூறும் 36 வயதான யுவி, தனக்குப் புற்றுநோய் ஏற்படாமல் இருந்திருந்தால், ஒரு வெற்றிகரமான டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கையும், 80 போட்டிகளில் விளையாடிய அனுபவமும் கிடைத்திருக்கும் என்றும் கூறுகிறார்.


ஆனால், அதனை அவர் ஒரு குறையாக எடுத்துக்கொள்ளவில்லை. மேலும், 'கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறும்போது, எவ்வித மனக்கசப்பும் இல்லாமல் வெளியேற விரும்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த 2017ஆம் ஆண்டு ஜனவரியில் சர்வதேச கிரிக்கெட்டுக்கு கம்பாக் கொடுத்த யுவராஜ், இங்கிலாந்தில் நடந்த சம்பியன்ஸ்கோப்பை போட்டி உட்பட 11 போட்டிகளில் விளையாடினார். மூன்று ஆண்டுகளுக்குப்பிறகு விளையாடிய அவர், அதன்பின் நடந்த மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒரு நாள் தொடரில் இடம்பெறாமல் போனார். செப்டெம்பர் மாதம் நடந்த தொடரிலும் அவர் இடம் பெறாத காரணத்தினால், அவர் வெகு சீக்கிரம் சர்வதேச கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வெடுத்துக்கொள்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது

ஆயினும், இந்தியாவிற்காக மீண்டும்ஒருமுறை விளையாடுவது குறித்து நம்பிக்கையோடு இருக்கிறார் யுவி. 2 கோடி ரூபாய்க்கு மீண்டும் அவரை கிங்க்ஸ் XI பஞ்சாப் உரிமையாளர்கள் தங்கள் அணியில் இணைத்துள்ளார்கள்.

ஒரு நாளிதழுக்கு அவர் அளித்திருந்த "பேட்டியில், "என்னால் முடிந்ததை நான் செய்திருக்கிறேன். எந்த நேரத்தில் நான் வெளியேற வேண்டுமோ, அப்போது நான் வெளியேறுவேன். இதற்குமேல் என்னால் செய்திருக்க முடியாது. நான் இப்போதும் கிரிக்கெட் விளையாடுவதற்குக் காரணம், இந்தியாவிற்கு விளையாட வேண்டும் என்பதோ ஐபிஎல் தொடரில் விளையாட வேண்டும் என்பதோ மட்டுமல்ல. நான் கிரிக்கெட்டை நேசிக்கின்றேன் என்பதுதான்.

வாழ்க்கையின் கடினமான சூழ்நிலைகளில் நான் போராளியாக இருந்திருக்கிறேன். பல்வேறு சூழ்நிலைகளை எதிர்கொள்பவர்களுக்கும், புற்றுநோய் போன்ற நோய்களினால் அவதிப்படுபவர்களுக்கும் நான் உதவிகரமாக இருக்க வேண்டும் என்று எண்ணுகிறேன். எந்த நிலையிலும் விட்டுக்கொடுக்காத ஒருவனாகவே நான் அறியப்பட விரும்புகின்றேன். நான் இந்தியாவிற்காக விளையாடினாலும், இல்லையென்றாலும், என்னுடைய நூறு சதவிகித உழைப்பைக் களத்தில் அளிப்பேன். என்னுடைய You We Can அறக்கட்டளை மூலமாக



புற்றுநோய் தொடர்பான பிரச்சினைகளில் கவனம் செலுத்துவேன். குறிப்பாக, குழந்தைகளுக்கு ஆதரவாக இருப்பேன். எனக்கு இளைய தலைமுறையினரிடம் உரையாட பிடித்திருக்கிறது. வாய்ப்புகள் குறைந்த குழந்தைகளின் கல்விக்காகவும், விளையாட்டுக்காகவும் உழைப்பேன்" என்கிறார் யுவராஜ்.

தனக்கு எப்போதுமே டெஸ்ட் கிரிக்கெட் மீது ஆர்வம் உள்ளது என்று கூறுகிறார் யுவராஜ். நீளமான டெஸ்ட் கிரிக்கெட்டின் காரணமாக, ஒரு நாள் போட்டி மற்றும் இருபது-20 போட்டிகளில் அவரால் சிறப்பாக விளையாட முடிந்ததாகச் சொல்கிறார். "வளரும் வீரராக இருக்கும்போது, நான் நிறைய இரண்டு நாள் மற்றும் மூன்று நாள் விளையாட்டுப்போட்டிகளில் விளையாடினேன்." அதனால்நான் நான் நிறைய டெஸ்ட் போட்டிகளில் விளையாட வேண்டும் என்று எதிர்பார்த்தேன். ஆனால், அதற்குப் போட்டி அதிகமாக இருந்தது.

"நான் சவுரவ் அல்லது விவிஎஸ் லக்ஷ்மன் ஆகியோருடைய டெஸ்ட் இடத்தைத் தக்கவைத்துக்கொள்ள விரும்பினேன். 2004 ம் ஆண்டு சென்னையில் நடந்த டெஸ்ட் போட்டியில் நான் தான் இன்னிங்ஸைத் தொடங்கி வைத்தேன். ஆனால், அந்தப் போட்டியில் எட்டு ஓட்டங்களில் ஆட்டமிழந்தேன். அதற்கு அடுத்த ஆட்டம் மழையால் தடைப்பட்டது.

அந்த வாய்ப்பும் வீணாகப்போனது. அதற்குப் பிறகு நான் மிடில் ஆர்டர் பட்ஸ்மனாகக் களமிறக்கப்பட்டேன். கங்குலி ஓய்வுபெற்றபோது எனக்கு அவருடைய இடம் கிடைத்தது. நான் என்னுடைய விளையாட்டின் உச்சத்தில் இருக்கும்போதே எனக்குப் புற்றுநோய்இருப்பதை உறுதி செய்தார்கள். ஒருவேளை நான் தொடர்ந்திருந்தால் நான் 80 டெஸ்ட் போட்டிகள் வரை விளையாடியிருப்பேன். ஆனால்; நான் அதற்காக வருத்தப்படவில்லை" என்னும் யுவராஜின் சொல்லில் கொஞ்சம் ஏமாற்றம் கலந்திருந்தது.

அவருடைய கடைசி சர்வதேசப் போட்டிக்குப் பிறகு, யுவராஜ் பஞ்சாப் அணிக்காக உள்ளூர்விளையாட்டுப்போட்டிகளில் விளையாட வில்லை. ரஞ்சிக் கோப்பை போட்டியில் மட்டுமே அவர் பங்கேற்றார். விஜய் ஹசாரே 50 ஓவர்கள் போட்டியினும், சையத் முஷ்தக் அலி இருபது- 20 விளையாட்டுப் போட்டியிலும்தலைமை தாங்கினாலும், சுமாரானா ஆட்டத்தையே வெளிப்படுத்தினார். யாருமற்ற மைதானத்தில் விளையாடும்போது உற்சாகம் குறையும் என்பதனை ஒப்புக்கொள்ளும் அவர், அதன் காரணமாக உற்சாகம் என்பது உள்ளிருந்தும் வர வேண்டும் என்கின்றார்.

என்னைப்போன்றவர்களுக்கு ஊக்கம் என்பது உள்ளிருந்து வருகின்றது. ஆதலால் எங்களுக்கு ஒவ்வொரு முறையும் ரசிகர்கள் உற்சாகப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. நான் மீண்டும் எனது கிரிக்கெட் வாழ்க்கையை பூச்சியத்திலிருந்து தொடங்குவதால் இதனை உணர்ந்திருக்கிறேன். அடிப்படையான விடயங்களை நான் மீண்டும் அசை போட்டுக் கொண்டிருக்கின்றேன். ரசிகர்களிடமிருந்து கிடைக்கும் கரவொலி உங்களை உற்சாகப்படுத்தும். ஆனால், அதே நேரத்தில் உங்களுக்கான ஊக்கம் என்பது உள்ளிருந்து வரவேண்டும். வித்தியாசமான இடங்கள், வெவ்வேறு வகையான ரசிகர்கள் இதனை எதிர்கொள்வது எளிதல்ல. என்னால் மீண்டும் இன்று கிரிக்கெட் விளையாட முடிகிறதென்றால் அதற்குக் காரணம் உள்ளூர் போட்டிகளில் விளையாடுவதற்கான சந்தர்ப்பங்களை நான் எப்போதும் தவிர்க்கவில்லை".

சமீப காலமாக, யுவராஜ் தன்னுடைய உடல்நலத்தில் தீவிர கவனம் செலுத்தி வருகிறார். தற்போது அனைத்து வீரர்களும் உடல் நலத்திலும் வலிமையிலும் கவனம் செலுத்துவதற்கு, அணித் தலைவர் விராட் கோலியின் அணுகுமுறையும் காரணம் என நம்புகிறார். வீரர்களின் உடல் வலிமைக்கு அளவுகோலாக நிர்வாகம் நிர்ணயித்திருக்கும் யோ - யோ தேர்விலும் தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் யுவராஜ்.

நிச்சயமாக கோலி, டோனியிடமிருந்து மாறுபட்டவர்தான். டோனி அமைதியாகவும் நிதானமாகவும் இருப்பார். கோலி சற்று தீவிரமாக இருப்பார். அப்போது காலம் மாறுபட்டிருந்தது.

அனுபவம் வாய்ந்த, போட்டியில் வெல்லும் திறமை பெற்ற வீரர்கள் டோனியின் அணியில் இருந்தார்கள். எல்லாம் சரியான அமைப்பில் இருக்கும்போது டோனி தலைமை பொறுப்பேற்றார்.

ஆனால், விராட்டின் தலைமையில் நிறைய மாற்றங்களை அணி கண்டுள்ளது. அவர் உடலைத் திடமாக வைத்துக்கொள்வதால், அணியில் இருக்கும் அனைவருக்குமே உடல் கட்டுக்கோப்பாக இருப்பது அவசியம் ஆகிறது.

முந்தைய தலை முறையை விட தற்போதுள்ள வீரர்கள் உடலினை மேலும் மெருகேற்றியுள்ளார்கள்.

இப்போது போட்டிகளும் கடுமையாக உள்ளதல்லவா? விராட் உலகக்கோப்பையினை மனதில் வைத்து மிகச்சரியான உடற்பயிற்சி, உணவுப்பழக்கம் ஆகியவற்றைக்கொண்டு அணியை வழிநடத்திச் செல்கிறார்" என்று கூறிய "கம்பாக் நாயகன்" யுவி, இன்னொரு கம்பேக் கொடுக்க ஆயத்தமாக இருக்கிறார். (ம)

# காலத்தால் அழியாத கானங்கள்

படம் : தில்லுமுல்லு
இசை : எம்.எஸ்.விஷ்வநாதன்
பாடியவர் : எஸ்.பி.பாலசுப்பிரமணியம்
வரிகள்: கண்ணதாசன்



ராகங்கள் பதினாறு உருவான வரலாறு
நான் பாடும் போது அறிவாயம்மா
ராகங்கள் பதினாறு உருவான வரலாறு
நான் பாடும் போது அறிவாயம்மா

பல நூறு ராகங்கள் இருந்தால் என்ன?
பதினாறு பாட சுகமானது
பல நூறு ராகங்கள் இருந்தால் என்ன?
பதினாறு பாட சுகமானது
ராகங்கள் பதினாறு

கலை மாது தான் மீட்டும் இதமான வீணை
கனிவான ஸ்வரம் பாட பதமானது
கலை மாது தான் மீட்டும் இதமான வீணை
கனிவான ஸ்வரம் பாட பதமானது

அழகான இளம் பெண்ணின் மேனி தான் கூட
ஆதார சுதி கொண்ட வீணையம்மா
அழகான இளம் பெண்ணின் மேனி தான் கூட
ஆதார சுதி கொண்ட வீணையம்மா
ராகங்கள் பதினாறு

இடையாட வளையாட சலங்கைகள் ஆட
இலையோடு கொடி போல நடமாடினாள்
இடையாட வளையாட சலங்கைகள் ஆட
இலையோடு கொடி போல நடமாடினாள்

உலகாளும் உமையாளின் ராக பாவங்கள்
ஆனந்தம் குடி கொண்ட கோலமம்மா
உலகாளும் உமையாளின் ராக பாவங்கள்
ஆனந்தம் குடி கொண்ட கோலமம்மா
ராகங்கள் பதினாறு

## சீனாவில் ஐரோப்பிய மனிதர்கள்



பாதுகாத்து வைக்கப்பட்ட இறந்த உடல்களே மம்மிகள் என்பவை நமக்குத் தெரியும். சீனாவின் டாக்லாமகான் பாலை வனத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மம்மிகள் இன்றளவும் புதிர் நிரம்பியவையாக இருக்கின்றன. சீனாவின் எல்லைப் பகுதியிலிருந்து தொலைதூரத்தில் உள்ளது அந்தப் பாலைவனம். அங்கே கிடைத்த மம்மிகளில் என்ன புதிர்? அவை இறந்து போன சீனர்களின் உடல்கள் அல்ல. ஐரோப்பியர்களின் சடலங்கள்! சில மம்மிகளின் உடலில் இருக்கும் ஆடைகளும் ஆபரணங்களும் ஐரோப்பாவில் மட்டுமே கிடைக்கக்கூடியவை. தலைமுடி, எலும்புகளின் அமைப்பு ஆகிய வற்றைப் பார்க்கும்போதும் அந்த மம்மிகள், நிச்சயமாக ஐரோப்பியர்களுடையவைதாம் என்பது நிரூபணம் ஆகியிருக்கிறது.

2,000 வருடங்களுக்கு முன்பாக ஐரோப்பியர்கள் எப்படிச் சீனாவின் பாலைவனத்துக்கு வந்து இறந்தார்கள்? அந்த மம்மிகள் வைக்கப்பட்டிருந்த கோபுரங்களின் சுவர்களில் எழுதப்பட்டு இருந்தவற்றை வைத்து ஆயிரம். ஆண்டுகளுக்கு முன்னால் ஐரோப்பியர்கள் இங்கே வந்திருப்பது தெரிகிறது. ஆனால், அவர்கள், அதற்கும் 1,000 வருடங்களுக்கு முன்னதாக எப்படி இறந்திருப்பார்கள் என்பது இன்னும் யாராலும் விளக்க முடியாத புதிராகத் தொடர்கிறது.

## ஜோம்பீ மனிதர்கள்!



சில ஆபிரிக்க மதங்களில் பிரேத மனிதர்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இறந்து போன மனிதர்கள் மந்திரவாதிகளால் மறுபடி உயிர்தரப்பட்டு, அடிமையாகப் பயன்படுத்தப்படுவார்களாம். இவர்களுக்கு ஜோம்பீ (Zombie) என்று பெயர். இந்தப் பிரேத மனிதர்களால், சாப்பிட, சுவாசிக்க, நடமாட முடியும். ஆனால், சிந்திக்க முடியாதாம். தனக்கு உயிர் கொடுத்த எஜமானர்களால் மட்டுமே இவர்களைக் கட்டுப்படுத்த முடியுமாம். பீதியாக இருக்கிறது இல்லையா?

1966 ஆம் ஆண்டு இறந்து போன ஒரு பெண் 1980 ஆம் ஆண்டு அங்கங்கே நடமாடியதாக ஒரு புகார் பதிவாகி இருக்கிறது. பெலிசியா என்கிற பெண் இப்படி பிரேதமாக உலவியதைப் பார்த்ததாக அவளுடைய அப்பாவும் சகோதரருமே சொல்லியிருக்கிறார்கள். ஆனால், ஆராய்ச்சியாளர்கள், பிரேத மனிதன் என்பதெல்லாம் கட்டுக்கதை என்று ஆணித்தரமாகச் சொல்கிறார்கள்.

## இராட்சதக் கல் பந்துகள்!



மனிதர்களால் இவ்வளவு கச்சிதமாகச் செதுக்கவே முடியாது. அவ்வளவு கோள வடிவிலான் கல் பந்துகள், கோஸ்டாரிகா பகுதியில் காணப்படுகின்றன. அவை எங்கிருந்து வந்தன, எப்படி உருவாக்கப்பட்டன என்கிற விடயம் எதுவும் தெரியவில்லை. கோஸ்டாரிகாவின் கிராமப்பகுதிகளில் இவை இறைந்து கிடக்கின்றன. இவை எத்தனை காலத்துக்கு முன்பாக உருவாகின என்பதும் யாருக்கும் தெரியவில்லை. கி.பி.200 இற்கும் 1,500 இற்கும் மத்தியில் இவை உருவாக்கப்பட்டிருக்கலாம் என்று யூகமாகச் சொல்கிறார்கள். இவ்வளவு அதிசயமான கற்கள் இருப்பது 1930 ஆம் ஆண்டு தான் வெளியே தெரியவந்தது. வாழைத் தோட்டம் போடுவதற்காகப் புதர்களை அகற்றிய போது, இவை தென்பட்டன.

பெரும்பாலான பந்துகள் கடினமான எரிமலைப் பாறைகளால் ஆனவை. சுண்ணாம்புக் கற்களால் ஆனவையும் உண்டு. பெரிய கல் பந்துகள் 16 தொன் அளவில் கூட உள்ளன! இப்படி ஆயிரக்கணக்கான கல் பந்துகளை மனிதர்கள் உருவாக்கினார்களா, இயற்கை உருவாக்கியதா? யாருக்கும் தெரியவில்லை.

---

# பயனிலாச்சொல்

(நிமிடக்கதை)

வலம்புரி சங்குநாத அன்பர்களுக்கு ஜிம்மிக்குட்டியின் இனிய ஞாயிறு வணக்கம். பனி கொட்டிய இரவுகள் போய், வெம்மையான இரவுகள் வந்தாலும் காலை, அதுவும் விடிகாலைப் பொழுது பனி தூங்கும் அழகுடன் தான் நடுங்க வைக்கிறது. என்ன யோசிக்கிறீர்கள் அன்பர்களே!

தமிழோடு அழகாக விளையாடும் கலை என்ன கலையோ-அட கடவுளே எனக்கும் இப்படி பேச வருகிறதே என்று நீங்கள் குழப்பம் கொள்வது எனக்கு தெரியுது. ம்...ம்... "பூவோடு சேர்ந்த நாரும் மணம் வீசும்" என்று பெரியவர் அடிக்கடி சொல்லுறவர். அவர் பூ என்றால் நான் அவரோடை இருக்கிற நார் மாதிரித்தானே. ம்... என்னமோ தெரியேல்லை... அது... அதுவா வருகுது.

சரி சரி விசயத்துக்கு வருவம். இண்டைக்கு இலைக்கஞ்சி சூப்பர். இல்லையில்லை நல்ல ருசி எண்டு சொல்ல நினைச்சு நினைச்சு இந்த இளம் பிள்ளையள் சொல்லுற சொல்லை நானும் சொல்லிப்போட்டன். அது கிடக்கட்டும். இண்டைக்குக் கதாநாயகி லாதாக் குட்டி தான். எல்லோரும் வழமைபோலச் சுத்தி இருக்கினம். இலைக்கஞ்சிப் பானையும் புதுசா சீவின சிரட்டைகளும் பெரிய குண்டு அகப்பையும் நடுவிலை கிடக்குது. இங்கை எல்லாம் சமரசம் தான். அவரவரும் அளவா எடுத்து ஊத்திக் குடுக்கலாம்-குடிக்கலாம். ம்.ம்...இண்டைக்கு விசயம் சூடு பிடிக்கப் போகுது.

கந்தையாண்ணை கஞ்சியை வாயிலை வைக்கிறார். திடீர் என்று ஒரு சத்தம். பெரியவர் திடுக்கிட்டு திரும்பிப் பாக்கிறார். அவரின்ர முகம் மாறுது ...அம்மாளாச்சி! எல்லோரும் ராசம்மாக்காவை பாக்கினம். அவ... ஓங்காளிச்சுக் கொண்டு எழும்புறா. "தூ...து..." ரசம்மாக்கா கஞ்சியையும் புதுச் சிரட்டையையும் வாழைப் பாத்திக்குள்ளே எறிஞ்சு போட்டு வாயைக் கழுவுறா. ஒருத்தரும் சத்தம் போடாமல் பெரியவரைப் பாக்கினம். ராசம்மாக்கா அருவருப்போடை திரும்பிறா.

"உவாக்!எப்பிடித்தான் இந்தக் கறுமத்தை ஊதி ஊதி ரசிச்சுக் குடிக்குதுகளோ... பிரட்டிக்கொண்டு வருது..."

பெரியவர் தொடங்கிறார். "ராசம்மா! அன்னத்தை அவமதிக்காதை! ஏன் இப்படி செய்தனீ பிள்ளை. கஞ்சியின்ரை தரம் தெரியுமே உனக்கு. எத்தினை மருத்துவ மூலிகைகள் போட்டு ஆரோக்கியமாகச் செய்த இலைக் கஞ்சியை இவ்வளவு பேர் குடிக்கிற இடத்திலை இப்பிடி அசிங்கப்படுத்திப்போட்டியே! போ...எறிஞ்ச சிரட்டையை எடுத்துக் கழுவிப்போட்டு கொண்டு வந்து வை"

ராசம்மாக்கா நிமிர்ந்து பாக்கிறா...

"என்னய்யா கேவலம்! ஒரு சிரட்டையை திரும்பப் பாவிக்கப்போறியளே...உந்த வேலி விராயிலை இருக்கிற இலை, குழை எல்லாத்தையும் இப்பிடி அவிச்சுக்குடிக்கிறதே"

பெரியவர் சிரிக்கிறார்...

"ம்...உன்ரை அறியாமையை நினைக்க எனக்கு பரிதாமாகப் கிடக்குது பிள்ளை. முதல்லை நீ இப்பிடி கதைக்கிறதை நிப்பாட்டு. ஆரோக்கியத்தின்ரை ஒட்டுமொத்த களஞ்சியம்தான் இந்த இலைக் கஞ்சி. உன்னுடைய மருமகளும் இண்டைக்கு இங்க இருந்து இலை கொண்டு போய் அங்கை கஞ்சி காய்ச்சி உன்ரை பேர்த்திக்கும் குடுக்கிறாள். எதெதுக்கு என்னென்ன பயன் எண்டு அறியாததாலைதான் கறுமம் எண்டும், அருவருப்பு எண்டும் இந்த அற்புத சஞ்சீவியை அசிங்கப்படுத்திறா..." பெரியவர் பெருமூச்சு விடுறார்.

ராசம்மாக்கா சலிப்போடை வாறா...

"ம்...அங்கையும் அவள் பாவி உதைத்தான் செய்து வைச்சிருக்கிறாள் எண்டு இங்க வந்தால்..."

பெரியவர் குரலை சரிப்படுத்துறார்...

"பிள்ளை ஒருவன் பயன் இல்லாத விடயங்களையே திரும்பத் திரும்ப பேசிக்கொண்டிருப்பானானால், அவன் நன்மை இல்லாதவன் அதாவது நற்செயல்கள் புரியாதவன் எண்டு சொல்லுவினம். மற்றவைக்கு பயன் தரக்கூடிய சொற்களையே எப்பொழுதும் பேசப் பழகிக்கொள். அது மட்டுமில்லை, பிறருக்கு பயன் தராத வீண் வார்த்தை பேசுவதை நினைச்சுக் கூடப் பாக்காதை பிள்ளை. உன்னுடைய வார்த்தைகளும் அதை நீ அழகாக நல்ல அர்த்தத்துடன் சொல்லும் விதமும் உன்னை அற்புதமான ஒரு பிறவியாக வெளிக்காட்டும். முதலில் நல்ல மாதிரிப் பேசிப் பழகப் பயிற்சி செய்"

லதாக்குட்டி குறுக்கிடுறா...

"தாத்தா! சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க சொல்லிற் பயனிலா சொல்" என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். அது மட்டுமில்லை தாத்தா,

"அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார் பெரும்பயன் இல்லாத சொல்" என்ற குறளிலை அறிதற்கரியனவற்றை ஆராய்ந்து அறியும் அறிவிற் சிறந்தவர்கள் ஒரு போதும் பயனற்ற சொற்களைச் சொல்ல மாட்டார் என்றும் சொல்லியிருக்கு. ஏன் தாத்தா பெரியவை எல்லாம் இதைப் படிச்சு இதுபோலை வாழலாம் தானே தாத்தா! நான் வளர்ந்து பெரியாள் ஆகின பிறகு நானும் திருவள்ளுவராகுவன். எல்லோரும் விழுந்து விழுந்து சிரிக்கினம். அது குழந்தை! அதுக்கு தெரியுமே திருவள்ளுவராகேலாது ஔவையார் ஆகலாம் எண்டு. ம்... ஒரே சின்னப்பிள்ளைத்தனமாவே இருக்கு... கஞ்சிப் பானையும் கழுவியாச்சு. நான் ஒரு குட்டித் தூக்கம் போடப் போறன். ம்...வாறன்.

பாரதி கணேஷ்
சுன்னாகம்

# நாச்சியார் திரை விமர்சனம்

பாலா படம் என்றாலே கொஞ்சம் கூட யோசிக்காமல் திரையரங்கிற்கு செல்லும் ஒரு கூட்டம். ஆனால். அந்த கூட்டத்தையே ஒரு நொடி யோசிக்க வைத்துவிட்டது தாரை தப்பட்டை. மீண்டும் தன் ரசிகர்களுக்கு ஒரு தரமான விருந்து கொடுக்க ஜோதிகா, ஜி. வி. பிரகாஷ் என யாரும் எதிர்பார்க்காத கூட்டணியுடன் கைகோர்த்த பாலாவிற்கு வெற்றி கிடைத்ததா? பார்ப்போம்.



படத்தின் முதல் காட்சியிலேயே இவானா (அறிமுகம்) கர்ப்பிணி பெண்ணாக ரயில்வே நிலையத்தில் நிற்கின்றார்.

அவரை ஒரு கும்பல் வலுக்கட்டாயமாக இழுத்து செல்ல, அவர்களிடமிருந்து ஜோதிகா அந்த பெண்ணை காப்பாற்றி விசாரணை செய்கின்றார்.

அதைத் தொடர்ந்து அந்த கர்ப்பத்திற்கு காரணம் ஜிவி தான் என்று அவரை கைது செய்து பொலிஸ் விசாரிக்கின்றது. அவரும் தங்களுக்குள் ஏற்பட்ட காதலை பளாஷ் பேக்காக சொல்கின்றார்.

பிறகு தான் ஓர் அதிர்ச்சி காத் திருக்கின்றது. அந்த குழந்தை ஜிவியுடையது இல்லை என்ற பிறகு யார் இந்த பெண்ணை ஏமாற்றினார்கள் என்பதை ஜோதிகா கண்டுபிடிப்பதே மீதிக் கதை.

ஜோதிகா இதுவரை நடித்த அனைத்து படங்களிலும் டொப் 5 லிஸ்ட் எடுத்தால் நாச்சியார் கண்டிப்பாக இடம்பிடிக்கும். முதல் காட்சியிலேயே அடுத்தவர்கள் சைக்கிளில் இடித்ததற்கு தன்ட்ரைவரை திட்டி, இறங்கி அவர்களிடம் மன்னிப்புக் கேட்கும் இடத்திலேயே ஜோதிகாவின் கதாபாத்திரத்தை அழுத்த மாக காட்டியுள்ளனர். அதிலும் அவர் ஒவ்வொருவரையும் விசாரிக்கும் காட்சி மிரட்டல்.

ஜிவிக்கு இது தான் முதல் படம் என்று சொல்லலாம், இதிலிருந்து தான் அவரின் ரியல் திரைப் பயணம் தொடங்கியுள்ளது. சென்னை இளைஞனை அப்படியே நம் கண் முன்னே கொண்டு வருகின்றார். இவானாவும் அத்தனை யதார்த்தமாக நடித்து அசத்தியுள்ளார். முதல் படம் போலவே தெரியவில்லை.

இதையெல்லாம் விட நாச்சியார் பாலா படம் போலவே தெரியவில்லை. எப்போதும் இரத்தம், வெட்டு, குத்து, கொடூர கிளை மேக்ஸ் என்பதில் இருந்து வெளியே வந்துள்ளார். அதற்கு பாராட்டுக்கள். கிளைமேக்ஸ் கொடூரம் என்றாலும் ஓடியன்ஸ் பார்வையில் விசில் பறக்கின்றது.

பாலா வசனத்தில் கிடைக்கின்ற கேப்பில் ஸ்கோர் செய்பவர். 'அட சாமிக்கு போர் அடிக்கும்ல, அதனால் தான் இப்படி சோதனைகளை தருகின்றார், நாம வேனும்னா பிரஷ்ஷா ஒரு சாமிய உருவாக்க லாம்' என்பது போல் படம் முழுவதும் வசனங்கள் கை தட்ட வைக்கின்றது.

ஆனால், படத்தின் முதல் பாதி ஜிவி-இவானா காதலே நிறைய வருவது போல் இருந்தது. இரண்டாம் பாதியில் இருந்து விறுவிறுப்பு கொஞ்சம் குறைவாக இருந்தது.

மேலும், தீவிர பாலா ரசிகர்களுக்கு 'இது பாலா படம் தானா' என்று கேட்க வைத்து விடும்.

ஈஸ்வரின் ஒளிப்பதிவு சென்னையின் குப்பைத் தொட்டியில் ஆரம்பித்து முட்டு சந்தை கூட அழகாக படம்பிடித்துள்ளது. படத்தின் மற்றொரு ஹீரோ இளையராஜா தான்.



டைட்டில் கார்டிலேயே மிரட்டியுள்ளார். ராஜாவின் ராஜாங்கம். கதைக்களம், தற்போதுள்ள இளம் பெண்கள் எத்தனை கவனமாக இருக்க வேண்டும் என்பதை காட்டியுள்ளது. பாலாவின் மாற்றம், இரண்டாம் பாதியின் விறுவிறுப்பு.

இளையராஜாவின் பின்னணி இசை. படத்தின் முதல் பாதி கொஞ்சம் மெதுவாகவே நகர்கின்றது.

பாலா கமர்ஷியலில் இறங்கி விட்டார் என்றாலும், கிளைமாக்ஸில் அப்படி ஒரு விடயத்தை ஜோதிகா செய்யும் போது அதை யாருமே வீடியோ கூட எடுக்கவில்லை என்பது லாஜிக் மீறல்.

மொத்தத்தில் நாச்சியார் பாலாவின் அடுத்த இன்னிங்ஸில் முதல் வெற்றி.




வாகனத் தொழில்நுட்ப ஜாம்பவானுடன் இணைந்து உங்கள் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புங்கள்.

DIMO தொழில்நுட்பத் திறன் அக்கடமியில் (DATS)
உங்கள் எதிர்காலம் உருவாகட்டும்

DIMO தொழில்நுட்பத் திறன் அக்கடமி (DATS) என்பது ஜேர்மனியிலுள்ள Daimler AG நிறுவனத்தின் பங்காளித்துவத்துடன் 1990ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அதிநவீன மோட்டார் வாகனத் தொழில்நுட்பப் பயிற்சி நிலையமாகும். தற்சமயம் இது வெலிவேரிய, கிரிந்திவெல வீதியில் இயங்கி வருகின்றது. வடக்குக் கிழக்கிலுள்ள இளைஞர்களும் தொழில்நுட்பப் பயிற்சியைப் பெற்றுத் தொழிலை ஆரம்பிக்க வசதியளிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் 2010ஆம் ஆண்டில் அக்கடமியின் கிளை ஒன்றை DIMO யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தது. நாளைய வாகனத் தொழில்நுட்பத்தை அறிந்துகொள்ள திறமையுள்ள இன்றைய இளைஞர்கள் ஊக்குவிக்கப்பட DIMO விரும்புகிறது.

இந்த முக்கியமான முன்முயற்சியின் மூலம் கடந்த 27 ஆண்டுகளில் மோட்டார் வாகனத் தொழில்நுட்பத்தில் உலகத் தரமான நிபுணர்கள் அநேகமானோரை DIMO உருவாக்கியுள்ளது.

மோட்டார் வாகனத் தொழில்நுட்பத்தில் ஈடுபடும் ஆர்வமுள்ள, பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்ட, உற்சாகமான இளைஞர்களை எம்முடன் இணையுமாறு நாம் அழைப்பு விடுக்கிறோம். வாருங்கள், இலங்கையிலுள்ள எமது பயிற்சி நிலையங்களில் சேர்ந்து மோட்டார் வாகனத் தொழில்நுட்ப நிபுணர் என்ற முறையில் உங்கள் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புங்கள்.

**பயிற்சிநெறிக் காலம்**

இரண்டு ஆண்டுகள்

**பிரவேசத் தகுதிகள்**

வயது: 17 முதல் 24 வயது

குறைந்தபட்சம் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்திகளுடன் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தி.

**முதலீடு**

உங்கள் ஆர்வம் மட்டுமே தேவை

நீங்கள் மேற்குறிப்பிட்ட தகுதிகளையும் ஆர்வத்தையும் கொண்டிருந்தால், உங்கள் சுயவிபரக் கோவையை careers@dimolanka.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள். நீங்கள் விரும்புவது வெலிவேரிய பயிற்சி நிலையமா அல்லது யாழ்ப்பாண பயிற்சி நிலையமா என்பதை விடயக் கட்டத்தில் குறிப்பிடுங்கள்.

அல்லது

உங்கள் விண்ணப்பத்தை The Chief Human Resources Officer, Diesel & Motor Engineering PLC, No. 65, Jethawana Road, Colombo 14. என்ற முகவரிக்கு அனுப்புங்கள். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வெலிவேரிய அல்லது யாழ்ப்பாணம் என்ற உங்கள் விருப்பத்தேர்வைக் குறிப்பிடுங்கள்.

விண்ணப்ப முடிவுத்திகதி - மார்ச் 09, 2018

DIMO தொழில்நுட்பத் திறன் அக்கடமி
இல 09, A9 வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்
www.dimolanka.com

Great Place to Work – Best companies to work for 2013 - 2017 Sri Lanka

# உள்ளூராட்சி சபைத் தேர்தல்
## அரசுக்கு சொல்லும் பாடம் என்ன?

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலானது வீதி விளக்குகளைப் பொருத்துதல் மற்றும் குப்பைகளை அகற்றும் நடவடிக்கைகளை மேம்படுத் துதல் போன்ற சிறிய விடயங்களுடன் தொடர்புபட்டுள்ளது.

ஆயினும், போருக்குப் பின்னான இலங்கையின் முதலாவது தேசிய அரசாங்கத்தை அமைத்துக் கொண்ட கூட்டணிக் கட்சிகள் தமக்குள் பிளவுபட்டதால் வினைத்திறனுடன் செயற்படவில்லை. இதனால் திடீரென உள்ளூராட்சித் தேர்தலானது தேசிய அரசாங்கத்தின் செயற்பாடு தொடர்பான கருத்து வாக்கெடுப்பாக மாறியது.

இவ்வாறானதொரு சூழலில் இடம்பெற்று முடிந்த தேர்தலில் மக்கள் அளித்த வாக்குகளின் பெறுபேறானது, 100000 வரையான உயிர்களைக் காவு கொண்ட பல பத்தாண்டுகால உள்நாட்டு யுத்த காலப் பகுதியின் பின்னர், நாடு எத்திசை நோக்கிச் செல்கின்றது என்பதற்கான ஒரு சமிக்ஞையாக நோக்கலாம்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான எதிர்க்கட்சி வேட்பாளர்கள் பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளைத் தம்வசப்படுத்தியுள்ளனர் என்பதை வெளியிடப்பட்ட தேர்தல் பெறுபேறுகள் தெளிவுபடுத்தியுள்ளன.

இத் தேர்தல் பெறுபேறானது, உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட பல்வேறு உரிமை மீறல்கள் மற்றும் ஊழல் மோசடிக் குற்றங்கள் சுமத்தப்பட்ட முன்னாள் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ஷ இந்த நாட்டின் அரசியல் எதிர்காலத்தின் மையத்தில் உள்ளார் என்பதை மீண்டுமொரு தடவை உறுதிப்படுத்தியுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ தனது சொந்த ஊரான தங்காலையில் உரையாற்றும் போது, தனக்கு ஆதரவளித்தவர்களை வாழ்த்தியதுடன் தாம் பெற்ற வெற்றியை அமைதியான முறையில் கொண்டாடுமாறும் கேட்டுக்கொண்டார். 'மக்கள் தேசிய அரசாங்கத்தின் ஆணையை நிராகரித்துள்ளனர். ஆதலால் அரசாங்கத்தை மீளவும் தெரிவு செய்ய வேண்டும்' என மகிந்த ராஜபக்ஷவின் கட்சி உறுப்பினர்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

'இலங்கையர்கள் கையறு நிலையிலுள்ளனர். அவர்கள் இலங்கையை மீளக்கட்டியெழுப்ப விரும்புகிறார்கள் என்பதை உள்ளூராட்சித் தேர்தல் வெற்றி தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றது' என மகிந்த ராஜபக்ஷ தனது முகப்புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் கட்சியின் பெருவெற்றியானது இன்னமும் இரண்டு ஆண்டு கால ஆட்சியைக் கொண்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கத்தை மிகச் சாதாரணமாகப் பலவீனப்படுத்தும் என்பதை விட இதனால் பல்வேறு விள்ளவுகள் ஏற்படும் என் ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

நாட்டின் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் மற்றும் இராணுவமயமாக்கல் மற்றும் ஊழல் மோசடி போன்றன ஒழிக்கப்படும் மற்றும் நீண்ட கால யுத்தத்தால் ஏற்பட்ட வடுக்கள் ஆற்றுப் படுத்தப்படும் என இலங்கையர்கள் நம்பிக்கை கொண்டதன் மூலமே 2015 இல் சிறிய கட்சிகளின் கூட்டணியுடன் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியானார்.

ஆனால் மைத்திரிபால சிறிசேன தான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. தற்போது இடம்பெற்ற தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவின் கட்சி குறைந்த வாக்குகளைப் பெற்றதானது, இவர் நாட்டில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்காக வழங்கப்பட்ட வாய்ப்பைத் தவறவிட்டு விட்டார் என்பதையே சுட்டிக்காட்டுகிறது.

'இத்தேர்தல் பெறுபேறானது, சீர்திருத்தத்தை நாட்டில் ஏற்படுத்துவதற்காக மைத்திரிபால சிறிசேனவிற்கு வழங்கப்பட்ட வாய்ப்பிற்கான கதவு மூடப்பட்டு விட்டது என்பதையே தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. இதனை மீண்டும் திறப்பதென்பது மிகவும் கடினமானதாகும்' என கொழும்பு பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத் திணைக்களத்தின் முன்னாள் தலைவர் ஜெயதேவ உயங்கொட தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து 2015இல் மைத்திரிபால சிறிசேன கூட்டணி அரசாங்கத்தை அமைத்துக் கொண்டார். உள்ளூராட்சித் தேர்தல் அண்மித்த போது, இவ்விரு தலைவர்களுக்கும் இடையில் முறுகல்நிலை தொடங்கியது. தனது நிகழ்ச்சி நிரலை ஐக்கிய தேசியக் கட்சி பின்பற்றுவதாக மைத்திரிபால சிறிசேன குற்றம் சுமத்தினார்.



இவ்விரு தலைவர்களுக்கும் இடையிலான வாதப் பிரதிவாதங்கள் மகிந்த ராஜபக்ஷவின் கட்சித் தேர்தலில் அமோக ஆதரவைப் பெறுவதற்கு வழிவகுத்தது.

'கடந்த இரண்டு ஆண்டுகளாக, கூட்டணி அரசாங்கம் குறிப்பிடத்தக்க வகையில் எதையும் புதிதாகச் செய்யவில்லை' என உயங்கொட தெரிவித்தார்.

'தேசிய அரசாங்கமானது ஒற்றுமையற்றுச் செயற்படுகின்றது. குறிப்பாக கடந்த மாதம் இடம்பெற்ற தேர்தல் பரப்புரையின் போது கருத்து வேறுபாடுகளைக் கொண்டிருந்தது. இது குழப்பம் நிறைந்த அரசாங்கம் என்கின்ற சமிக்ஞையை இவர்கள் தமது ஒற்றுமையின்மை மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். இதனால் மக்கள் மிகப் பலமான ஒரு அரசாங்கத்தை விரும்புகிறார்கள் என்பதை வெளிப்படையாகத் தெரிவித்துள்ளனர். மகிந்த ராஜபக்ஷ ஒரு பலமான ஆட்சியாளருக்கான மற்றும் உறுதியான அரசாங்கத்திற்கான வேட்பாளராக உள்ளார்' என உயங்கொட குறிப்பிட்டுள்ளார்.

வன்முறைகள் நிரம்பிய தேர்தல்கள் இடம்பெறும் இந்த நாட்டில் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் மக்கள் மிகவும் அமைதியாக வாக்களித்த அதேவேளையில், பல்வேறு உள்ளூராட்சி சபைகளில் கட்சிகளால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக வாக்குகள் மீள எண்ணப்பட்டதால் தேர்தல் ஆணையம் தாமதமாகவே பெறுபேறுகளை அறிவிக்க வேண்டியேற்பட்டது.

மகிந்த ராஜபக்ஷவின் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி 341 உள்ளூராட்சி சபைகளில் 225 சபைகளில் வெற்றியீட்டியதுடன், ஐக்கிய தேசியக் கட்சி 41 சபைகளையும், மைத்திரிபால சிறிசேனவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சிறிய கட்சிகளுடன் இணைந்து 14 சபைகளிலும் வெற்றியீட்டியுள்ளது.

இலங்கையின் வரலாற்றில் முதற்தடவையாக, தேர்தலில் குறைந்தது 25 சதவீத பெண் வேட்பாளர்கள் போட்டியிட வேண்டும் என கட்சிகளிடம் வலியுறுத்தப்பட்டது. இந்நிலையில் தற்போது உள்ளூராட்சி சபைகளில் 2 சதவீத பெண் பிரதிநிதித்துவம் காணப்படும் நிலையில் தற்போது அமைக்கப்படவுள்ள புதிய உள்ளூராட்சி சபைகளில் மேலும் பெண்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படும் என நம்பப்படுகிறது.

பிரதமர் அலுவலகத்தின் தற்போதைய பிரதித் தலைவரும் Mrs. World Pageant பட்டத்தை வென்றவருமான ரோசி சேனநாயக்க கொழும்பு மாநகர முதல்வராகத் தெரிவு செய்யப்படுமிடத்து இவரே முதலாவது பெண் மாநகர முதல்வராவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

'உண்மையில் 50 சதவீதம் பெண் பிரதிநிதித்துவம் காணப்பட வேண்டும். ஆனால் இதனைக்கற்பனை செய்வதற்கே கடினமாக உள்ளது' என முதன் முதலாக வாக்களித்த 20 வயதான டுலானி பரவிதான எனும் பெண் தெரிவித்தார்.

தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இரண்டு ஆளும் கட்சிகளும் 2019.ல் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவின் கட்சி போட்டியிடாது என்பதை உறுதி செய்வதற்கான மாற்றங்களை முன்னெடுக்க வேண்டும்.

மைத்திரிபால சிறிசேன தனது அமைச்சரவையை மாற்றியமைப்பார் என அவரது கட்சி உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர். 'இத்தேர்தலானது ஒரு பின்னடைவாகும், ஆனால் பெரும்பாலான இலங்கையர்கள் மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிரானவர்களாவர்' என மைத்திரிபால சிறிசேனவின் சுகாதார அமைச்சரான ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

நீண்ட காலமாக அரசியலில் நிலைத்திருக்கும் மைத்திரிபால சிறிசேன, தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியிலிருந்து மீண்டெழ வேண்டும். பல பத்தாண்டுகளாக மைத்திரிபால சிறிசேனவும் மகிந்த ராஜபக்ஷவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் விசுவாசிகளாக இருந்துள்ளனர். மைத்திரிபால சிறிசேன இக்கட்சியின் பொதுச் செயலராக 13 ஆண்டுகள் செயலாற்றியுள்ளார்.

2015இல், மகிந்தவை எதிர்த்து மைத்திரிபால சிறிசேன போட்டியிட்டு ஜனாதிபதியானார். இதன் பின்னர் இவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை எடுத்துக்கொண்டார். இதனைத் தொடர்ந்து மகிந்த ராஜபக்ஷ புதிய கட்சியை ஆரம்பித்தார். நாட்டில் இடம்பெறும் ஊழல் மோசடிகளை முடிவிற்குக் கொண்டு வருவதாகவும் இராணுவத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதாகவும் மைத்திரிபால சிறிசேன வாக்குறுதி வழங்கியிருந்தார்.

மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவான வாக்கு வங்கியைக் குறைப்பதற்கான நடவடிக்கையை மைத்திரிபால சிறிசேன முன்னெடுக்காதது மட்டுமன்றி இவரது குழப்பகரமான சமிக்ஞைகள் இவருக்கான ஆதரவைப் பெறுவதிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதையே முடிந்த உள்ளூராட்சித் தேர்தல்களின் பெறுபேறுகள் சுட்டிக்காட்டுவதாக அவதானிகள் பலரும் கூறுகின்றனர்.

ஆங்கிலத்தில் :**MUJIB MASHAL and DHARISHA BASTIANS**
வழிமூலம் : **The New York Times**
மொழியாக்கம் : நித்தியபாரதி



facebook

# தமிழன் நாடாளும் நாள்




அந்தி சாய்ந்து தோட்டத்தில் இருந்து வந்த கந்தப்பு மண்வெட்டியை வீட்டிற்கு பின்புறமாய் வைத்து விட்டு திண்ணையிலே அமர்ந்தார். "தேத்தண்ணி தரட்டே ஐயா" சமையலறைக்குள் இருந்து கலாவின் குரல் கேட்டது. பொறு பிள்ள வாறன், களையாக் கிடக்கு முகம் கழுவி விட்டு மீண்டும் வந்து திண்ணையில் அமர்ந்து கொண்டார். எங்க பிள்ள தேவன் இன்னும் வரேல்லயே, இருண்டு போச்சுது தேநீரைக் கொண்டு வந்து கலா நீட்டினாள். தாத்தா இஞ்ச பட்டம், வயலுக்க ஏத்தினாங்கள் துள்ளிக் குதித்தான் நிருசன். பட்டம் ஏத்தினது காணும், போய் படியுங்கோ, படிக்காம இப்பிடியே விளையாடிக்கொண்டிருந்தா நாளைக்கு உங்கட காலம் முணுமுணுத்துக் கொண்டு தேநீரைக் குடித்தார். தேவனும் வீடு வந்து சேர்ந்தான். அப்பா எனக்கு வேற பட்டம் கட்டித் தாங்கோ நிருசன் கால்களைப் பிடித்து அடம் பிடித்தான். இப்ப தானே அப்பா வந்து நிக்கிறார் அதுக்குள்ள பட்டம்... தாத்தா சினந்தார். தேவன் மீள்குடியேற்றம் செய்யப்பட்டிருந்த சொந்த ஊருக்குக் காணி பார்ப்பதற்காகச் சென்றிருந்தான். என்ன மாதிரி அப்பு காணியெல்லாம் இருக்கு, வீடு நல்லாக் கிடக்கே பெருமூச்சு விட்டபடி அருகே வந்து அமர்ந்தான் தேவன்.

எல்லாம் வெறும் பத்தைக் காடா இருக்குது, வீடெல்லாம் ஒருபக்கம் இடிஞ்சு ஓடுகள் ஒண்டுமில்ல, கதவு நிலை கூட இல்ல, சுத்து மதிலும் ஒருபக்கம் கொஞ்சம் தான் கிடக்கு அதிர்ச்சியடைந்த கந்தப்பு என்ர கடவுளே! எவ்வளவு கஷ்டப்பட்டு கட்டின வீடு, எலக்ரிசிற்றியில வேலை செய்து தான் இந்த வீட்டக் கட்டி உனக்கெண்டு எழுதி விட்டன், அம்மாவும் இருந்து அனுபவிக்கல்ல, அவவும் போய்ச் சேர்ந்திட்டா" இடையில குறுக்கிட்டவனாய் யோசியாதேயுங்கோ அப்பா, நஷ்ட ஈடு தாறமெண்டு பதிஞ்சிருக்கினம், பாப்பம் அப்பாவை தேற்றினான்.

எத்தின வருச அரசியல பாத்த மனுசன் இந்தக் கதைகளை எல்லாம் நம்பமாட்டார் என்று அவனுக்கும் தெரியும். போய் படு தம்பி காலையில கதைப்பம்.

கட்டிலிலே அமர்ந்து யோசித்துக் கொண்டிருந்த ஐயாவை எட்டிப் பார்த்தாள் கலா. கதவை ஓரளவு மூடி விட்டு உறங்கி விட்டாள். கந்தப்பு தூக்கமின்றி யோசித்துக் கொண்டிருந்தார்.

போர் ஒன்று வந்து சனமெல்லாம் வீடு வாசலை விட்டு இப்ப எத்தின வருசம் கஷ்டப்படுதுகள். வெளிநாட்டில தான் அகதி வாழ்க்கை எண்டால் சொந்த நாட்டிலயும் அகதியாத் தானே இருக்கிறம். தமிழரை ஏன் இப்பிடி எல்லாம் அழிக்கிறாங்கள். இவங்கட அரசியலுக்க இருக்கிற போட்டிகள் தான் இன்டைக்கு இப்பிடி ஒரு நிலையைக் கொண்டு வந்தது.

தந்தை செல்வா காலம் தொட்டு தமிழர் எண்டால் எங்க பாத்தாலும் பிரச்சினைதான். எங்கட சனங்களும் ஒற்றுமையும் இல்ல. நான் நீ எண்டு போட்டி போட்டுக் கொண்டு குரங்கு கொப்புப் பாஞ்ச மாதிரி ஒவ்வொரு கட்சியா தாவித் தாவி கடைசியில தாங்களாவே ஒரு கட்சிய கொண்டு வந்து அது செய்யுறம், இது செய்யுறம் எண்டு வோட்ட வாங்கி கதிரயில இருந்தாச் சரி பிறகு ஒண்டும் நடந்தபாடில்ல. சனம் ஏமாந்து போறது தான் மிச்சம். நல்லதொரு மனுசர் இல்ல தமிழரை வழிநடத்த ஆதங்கத்தோடு கண்ணயர்ந்து தூங்கி விட்டார்.

உலகத்தில் எல்லா நாடுகளிலும் இனம், மொழி, மதம் என்று தங்களுக்கு ஒரு அடையாளங்களோடு தான் இருக்கிறார்கள். தமிழ் என்பது பாரம்பரிய மொழி, முதல் தோன்றிய மொழி என்று வரலாறுகளிலும் சொல்லப்படுகிறது. ஆனால் தமிழ் இனத்தையும், மொழியையும் ஏன் யாரும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். தமிழனுக்கு என்று ஒரு நாடு, மொழி தேவை என்பதை ஏன் மறுக்கிறார்கள்.

காலையும் புலர்ந்தது தேவன் பத்திரிகையை நோட்டமிட்டுக் கொண்டிருந்தான். கந்தப்பு சோர்ந்த முகத்துடன் வெளியே வந்தார். தம்பி நானும் வாறன்ரா காணி பாக்க என்று தயங்கிய படி கேட்டார். ஏன் அப்பா...." இழுத்தவனைக் கலா தடுத்தாள். கூட்டிக் கொண்டே காட்டுங்கோவன், ஆசைப்படுறார் இம் சரி வாங்கோ கந்தப்புவிற்கு எல்லை கடந்த மகிழ்ச்சி. சொர்க்கமே என்றாலும் நம் சொந்த ஊரப் போல வருமா என்று அந்த பாட்டு வரிகளுக்குள் மூழ்கியிருப்பாரோ என்னவோ வேகமாக கிணற்றடிக்குச் சென்றார். தேவனும் தயாரானான்.

(அடுத்தவாரம் தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1332

Search for people, places and things Nagendram Home

### தக்சாயினி

காய்ச்சல்னு சொல்லியே லீவு கேக்கிற உடம்பு நல்லாதானே இருக்கு



அது மர்மக் காய்ச்சல் டீச்சர்!!

### மயூரி

எங்க ஏரியால " ஐஸ்வரியா"வ சுருக்கமா எல்லாரும் "ஐஸ்"னு கூப்பிடுறாங்க...



நான் கொஞ்சம் வித்தியாசமா கூப்பிடலாமேன்னு " வரியா"ன்னு கூப்பிட்டேன். அதுக்குப் போய் ஊரே...

### பிரவீனா

அட வெயில் அதிகமா இருக்குன்னு ஒரு 10 நிமிசம் ATM ல AC யில இருந்துட்டேன்



அதுக்குள்ள மெஷின் உடைக்க ட்ரை பண்ணுறானோன்னு நினைச்சு பொலிஸ்'க்கு போன் பண்ணிட்டாங்க

### காயத்திரி

சாயங்காலம் 5 மணிக்கு வேலை முடியுறது...



வெள்ளக்காரன் கிட்டருந்து விடுதலை வாங்கின மாதிரியே ஒரு ஃபீலிங்கு

### யமுனா

பாங்கில் பணம் டெபோசிட் பண்ணப் போகிறார் நம்மாளு
பாங்க் கஷியர்: என்னாங்க இந்த நோட்டெல்லாம் கிழிஞ்சிருக்கு...



நம்மாளு: அதனால உனக்கென்னயா... நான் என்னோட எக்கவுண்ட்லதான் போடுறேன்...
பாங்க் கஷியர்: !!!!!!

### ஆனந்தி

கடவுளே எனக்கு சாப்பிட பிடிக்கல....
தூங்க பிடிக்கல...
எனக்கு காதல் வந்துருச்சோ



உனக்கு சொரம்பர் வந்துருச்சு போய் படி

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 120

## விலங்கு விசர் நோயும் அதன் கட்டுப்பாடும்



Rhabdo Virys ஒரு வகை வைரஸ் கிருமியால் இந்த நோய் ஏற்படுத்தப்படுகிறது.

இந்த நோய்க் காவியாகப் பிரதானமாக நாய், அரிதாகப் பூனை, குரங்கு, கீரி, ஓநாய், நரி காணப்படுகிறது.

இந்த நோய்க் கிருமி நரம்புத் தொகுதியைத் தாக்கி மரணத்தை ஏற்படுத்துகிறது

### விலங்கு விசர் நோய்

நோய்த் தொற்றுக்குள்ளான விலங்கினது உமிழ் நீரில் வைரஸ் கிருமிகள் செறிந்து காணப்படும். நோய்த் தொற்றுக்குள்ளான விலங்கு கடிக்கும் போது மென்சவ்வுள்ள பிரதேசத்தில் நக்கும் போது அல்லது வேறு வழிகளில் உமிழ் நீர் நேரடியாகத் தொடுகையுறும்போது தொற்றை ஏற்படுத்துகிறது.

### நாயில் காணப்படும் நோய் அறிகுறிகள்

- கோபமடைந்த நிலையில் காணப்படும்.
- கண்ணிற்படும் பொருள்களில் கடிக்கும்.
- நீர் அருந்த முடியாத நிலை.
- அதிகரித்த உமிழ் நீர்ச் சுரப்பு
- அசாதாரணமாக ஊளையிடுதல்
- சுயகட்டுப்பாடற்ற செயற்பாடுகள்

### மனிதனிற் காணப்படும் நோய் அறிகுறிகள்

- அதிக காய்ச்சல் வியர்வை
- கண்களை மூட முடியாத நிலை
- அதிகரித்த உமிழ்நீர் வெளியேற்றம்
- மூச்சுத் திணறல்
- காற்றை எதிர்கொள்ள முடியாத நிலை
- நீரை விழுங்க முடியாத நிலை
- தொடர்பாடற்ற செயற்பாடுகள்
- கோபமடைதல்
- தொண்டைப்பகுதியில் இறுக்கமடைதல்
- நரம்புத் தொகுதி செயலிழப்பதால் உறுப்புகளின் செயற்பாடு பாதிக்கப்பட்டு மரணம் சம்பவிக்கும்

### விலங்கொன்றினால் கடியுண்டால் செய்ய வேண்டிய முதலுதவி

- காயத்தை நன்றாக 5 நிமிடம் வரை ஓடும் நீரில் கழுவவும்.
- பின் சவர்க்காரமிட்டு நீரில் கழுவவும்.
- தொற்று நீக்கியைப் பாவித்துத் துடைக்கவும்
- வைத்தியசாலைக்கு செல்லும் போது கடித்த நாயின் ARV காட்டை எடுத்துச் செல்லவும்.

### விலங்கு விசர் நோய்க் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள்

- மனிதருக்கான தடுப்பு மருந்தேற்றல்.
- முற்கூட்டியே தடுப்பு மருந்தேற்றல்.
- நாய்க் கடியின் பின்னான தடுப்பு மருந்தேற்றல்.

### வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பு மருந்தேற்றல்

- நாய்க்குட்டியின் 6 வார வயதில் முதலாவது தடுப்பூசி.
- நாயின் 6 மாத வயதில் இரண்டாவது தடுப்பூசி.
- பின்னர் வருடமொரு தடவை தவறாது தடுப்பூசி ஏற்றல்.

### நாய்களுக்கான இனப் பெருக்கக் கட்டுப்பாடு

- ஆண் நாய்களுக்கான கருத்தடைச் சத்திரசிகிச்சை.
- பெண் நாய்களுக்கான கருத்தடைச் சத்திரசிகிச்சை.
- பெண் நாய்களுக்கான 6 மாதத்திற்கொரு தடவை போடப்படும் கர்ப்பத்தடை ஊசி

Dr. P.T.சாந்தன்



## தலை முடி



எமது உடலில் உள்ளங்கை மற்றும் உள்ளங்கால்களைத் தவிர மற்றைய அனைத்து இடங்களிலும் முடி காணப்படுகிறது. எமது உடலின் வெளித்தோலில் மயிர்ப்புடைப்புக் கலங்கள் காணப்படுகின்றன. இக்கலங்கள் மூலம் புதிய கலங்கள் உருவாக்கப் படும் போது பழைய கலங்கள் முடிகளாக வெளித் தள்ளப்படும். கெரற்றின் கொண்ட முடிகளாக உடலிற் காணப் படும்.

எமது தலையில் 100 000 - 150 000 வரையான முடிகள் உண்டு. இவற்றில் 100 வரையான முடிகள் நாளாந்தம் இறந்துவிடுகின்றன. நாளாந்தம் வளர்ச்சியடையும் முடிகள் ஒரு வருடத்தில் **15cm** வரை வளரக்கூடியன. தலைமுடியில் **90%** மானவை தொடர்ந்து வளர்ச்சியடைந்தபடியே இருக்கும். மயிர்ப்புடைப்புக்கலங்களினால் உயிர்ப்பான முடிவளர்ப்புச் செயற்பாடானது 2-6 வருடங்களுக்குக் காணப்படும். இடைப்பட்ட காலப்பகுதியில் 2-3 கிழமையாகவும், தொடர்ந்து ஓய்வு நிலையில் 2-6 மாதங்களாகவும் இந்த மயிர்ப்புடைப்புக் கலங்களின் செயற்பாடு காணப் படும்.

வயது செல்லச் செல்ல முடி உதிர்தல் வீதமானது தொடர்ச்சியாக அதிகரிக்கும். அத்துடன் முடி உதிர்தலுக்குப் பரம்பரைக் காரணிகளும் காரணமாக இருக்கின்றன.

அத்துடன் கடுமையான காய்ச்சல், உடல் நோய் நிலைகள்.மன அழுத்தம், மகப்பேற்றுக்குப் பின்னரான சில மருந்துப்பாவனை, எக்ஸ்ரே கதிர் உடலிற் படுதல், பங்கசுத் தொற்றுப் போன்றனவும் தலைமுடி உதிர்தலுக்கு காரணமாக அமைகின்றன. அதே போல் 'சம்போ' போன்றன



பாவிப்பவர்களின் தலைமுடி மெல்லியதாக்கப்படுவதாலும் அத்துடன் தலையில் வெப்பக்காற்றுப் பிடிப்பதாலும் தலைமுடி பாதிக்கப்பட்டு முடி உதிரும் சந்தர்ப்பம் அதிகரிக்கும்.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை **(0764685555)** என்ற இலக்கத்திற்கு **SMS** செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்